n Public domain. Digitization Muthulakshmi Research Academy

பயன்தரும் பாராயணம்

பு.மா. ஜய செந்தில்நாதன்.

வர்த்தமானன் பதிப்பகம்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

Public domain. Digitization Muthulakshmi Research Academy

C.S.S.

உ

குருவே துணை

பயன் தரும் பாராயணம்

வாழ்க்கைக்குரிய பல்வகைப் பயன்களையும் அருளவல்ல பிரார்த்தனைப் பாடல்கள், சுலோகங்கள், திருமுறை, திவ்வியப் பிரபந்தப் பாசுரங்கள், அன்றாடப் பாராயணப் பாடல்கள் முதலியவற்றின் தொகுப்பு.

தொகுப்பாசிரியர்

செஞ்சொல்மணி, புலவர் பு.மா. ஜய செந்தில்நாதன் எம். ஏ.

ஆஸ்தானப் புலவர் - ஸ்ரீசங்கரமடம்,

காஞ்சிபுரம் - 631502.

வர்த்தமானன் பதிப்பகம்

ஏ. ஆர். ஆர். காம்ப்ளக்ஸ்,

141, உஸ்மான் சாலை, தி. நகர்,

சென்னை - 17. © 825 79 95

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

இரண்டாம் பதிப்பு : மார்ச், 1999

உரிமை : பதிப்பகத்திற்கே

விலை : ரூ. 35.00

இலேசர் : சிறீ சத்ய சாய் கிராபிக்ஸ், சென்னை - 17. ✆ : 4332504
அச்சிடல் : Aruna Offset ✆ : 6420221

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்
ஸ்ரீமடம், சமஸ்தானம்
காஞ்சிபுரம்.

காஞ்சிபுரம் *24.11.98*

ஸ்ரீமுகம்

இவ்வுலக வாழ்வில் அதிகாலையில் கண் விழித்து எழுவது முதல் இரவில் தூங்கச் செல்லும் வரை ஸ்நானம் செய்வது - ஜலம் பாராயணம் செய்வது - சாப்பிடுவது - பணிகள் பலவும் புரிவது முதலான எல்லாக் காரியங்களையும் ஈச்வர நினைப்போடு செய்வதால் தேக ஆரோக்யமும் மனச் சாந்தியும் கிட்டுகிறது. கண் கண்ட தெய்வங்கள் முதல் இஷ்ட தெய்வம் வரை வணங்கித் துதிப்பதும் இதற்கு உறுதுணை புரிவதாகும். மணி மந்த்ர ஔடதங்களால் தீர்க்க முடியாத சரீர மன உபாதைகளையும் இறையருள் கொண்டு துடைத்துவிடலாம். இவை யெல்லாம் இந்நாட்டு மக்களுக்குக் கிடைத்திருக்கும் பரம்பரைச் சொத்து.

இவைகளைக் கடைப்பிடித் தொழுகுவதற்கு உதவியாக இருக்கும் வகையில்; குரு முதலான ஸகல தேவதா வணக்கங்கள் - அவ்வச் செயல்களின் போது ஜபிக்கக் கூடியவைகள் - தீராத உபாதைகளையும் பிறவற்றையும் விலக்கி

Public domain. Digitization Muthulakshmi Research Academy

நலமளிப்பவைகள் ஆகிய பாடல்களையும், சுலோகங்களையும் (அர்த்தத்துடன்) தேவாரம் திவ்ய ப்ரபந்தம் போன்ற அருள் நூல்களிலிருந்து திரட்டியளித்துள்ளார் ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் புலவர். திரு. பு.மா. ஜயசெந்தில் நாதன் M.A., அவர்கள். இந்நூலைப் படித்துணர்ந்து ஆஸ்திகப் பெருமக்கள் தங்கள் வாழ்வைச் சீரிய முறையில் அமைத்துக் கொண்டும், குறைகள் களைந்தும் இன்பம் துய்ப்பார்களாக.

ஆசிரியர்க்கு இறைவன் திருவருளால், இக, பர நன்மைகள் யாவும் கிடைக்க வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றோம்.

நாராயணஸ்ம்ருதி

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

I

1. குருவணக்கம்
2. 15 துதிப்பாடல்கள்

   16 பொதுப் பிரார்த்தனை பாடல்கள்

II

1. காலையில் உறக்கத்திலிருந்து விழித்ததும் சொல்ல வேண்டியவை.
2. நீராடத் தொடங்கும் முன்பு சொல்ல வேண்டியவை.
3. படிக்கத் தொடங்கும் முன்பு சொல்ல வேண்டியவை.
4. உணவு கொள்ளத் தொடங்கும் முன்பு சொல்ல வேண்டியவை.
5. கோயில் வலம் வரும்போது சொல்ல வேண்டியவை.
6. உறங்கும் போது சொல்ல வேண்டியவை.

III

1. கல்வியில் தேர்ச்சி பெற – அறிவாற்றல், நினைவாற்றல் பெருக.
2. திருமணம் நடைபெற - நல்ல கணவனை, மனைவியை அடைய, நற்புத்திரர்களைப் பெற.
3. நல்வாழ்த்து கூற.
4. காரிய சித்தி பெற - இடையூறுகள் விலகி, நினைப்பவை நடைவேற.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. மழைபெய்து வளம் பெருக.

6. வறுமை நீங்கிச் செல்வம் பெற - வளமான இன்ப வாழ்வு பெற.

7. இடர்கள் அகல - மனச் சோர்வு - மன பயம் - சங்கடங்கள் விலகி, மன தைரியம், அமைதி பெற.

9. திருடர் பயம் - பகைவர் (சத்ரு) பயம் நீங்க.

10. விஷஜ்வரம் - விஷக்கடி - வெப்பு நோய் முதலியவை நீங்க.

11. கண்நோய் நீங்க - கண்பார்வை தெளிவு பெற.

12. பேய் - பிசாசு முதலியவற்றால் வரும் துன்பச் சேட்டைகள் விலக.

13. கடுமையான வயிற்று வலி நீங்க.

14. கிரக தோஷம் நிவர்த்தியாக.

15. அடைக்கலம் வேண்டி - ஆபத்திலிருந்து காத்து அருள் புரிய வேண்டி.

16. எம பயத்திலிருந்து காக்க வேண்டி.

17. விஷநோய்கள் - காலரா அம்மை போன்றவைகள், மற்றும் தீராத (ரோகங்கள்) நோய்கள் தீர.

18. கெட்ட கனவுகள் - கெட்ட சகுனங்கள் இவற்றின் தீய விளைவுகள் விலக - கெட்ட கனவுகள் வராதிருக்க.

19. பயணத்தின் போது இடையூறுகள் வாராதிருக்கவும், பயமின்றிப் பயணம் நல்லவிதமாக அமையவும்.

20. பொதுவான நல்வாழ்வுக்கு ஓதவேண்டிய நமசிவாயத் திருப்பதிகங்கள்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

I

1. குருவணக்கம்

1. குருர்ப்ரம்ஹ குருர்விஷ்ணுः குருர்தேவா மஹேச்வரः
குருः ஸாக்ஷாத் பரம்ப்ரம்ஹ தஸ்மை ஸ்ரீ குரவே நமः

2. தந்தை தாய் ஆவானும் சார்கதி இங்கு ஆவானும்
அந்தமிலா இன்பம் நமக்கு ஆவானும் - எந்தம் உயிர்
தான் ஆகுவானும் சரண் ஆகுவானும் அருட்
கோன் ஆகுவானும் குரு.

2. விநாயகர்

1. கஜானனம் பூதகணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூ பலஸார பக்ஷிதம்
உமாசுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்.

(யானை முகத்தையுடையவரும், பூத கணங்களால் துதிக்கப்படுபவரும், விளாம்பழம் நாவற்பழம் ஆகியவற்றில் மிகப் பிரியமுடையவரும், உமா மகனும், துன்பங்களைப் போக்கவல்ல வருமான விநாயகரின் திருவடிகளை வணங்குவோம்.)

2. சுக்லாம் பரதரம் விஷ்ணும் சஸி வர்ணம் சதுர்புஜம்
ப்ரசன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்நோப சாந்தயே.

(வெண்ணிற ஆடை உடுத்தவரும், எங்கும் நீக்கமற நிரம்பியிருப்பவரும், நிலவு போன்ற இனிமையான மேனி

Public domain. Digitization Muthulakshmi Research Academ

நிறம் கொண்டவரும், நான்கு கரங்களையுடையவருமான யானை முகத்தோனை - விநாயகரை எல்லா இடையூறுகளும் நீங்கும் பொருட்டு வணங்குகிறேன்.)

கணேச பஞ்சரத்னம்

முதாகராத்த மோதகம் ஸதா விமுக்தி ஸாதகம்
கலாதரா வதம்ஸகம் விலாஸி லோக ரக்ஷகம்
அநாயகைக நாயகம் விநாசிதேப தைத்யகம்
நதா ஸுபா ஸுநாசகம் நமாமி தம் விநாயகம்.

(சந்தோஷத்துடன் கையில் மோதகத்தை (கொழுக் கட்டை) வைத்துக் கொண்டிருப்பவரும், தம்மை வழிபடு வோர்க்கு எப்பொழுதும் மோட்சத்தைக் கொடுப்பவரும், சந்திர கலையைத் தலையில் தாங்கியவரும், தம் புகழ் பாடி ஆனந்தமாக ஆராதிக்கும் பக்தர்களை ரட்சிப்பவரும், மக்கட்கு ஆபத்துக் காலத்தில் தாமே காப்பவராக இருப்பவரும், கஜாசுரனைக் கொன்றவரும், வணங்குவோருடைய பாவங்களை உடனே அழிப்பவருமான மகா கணபதியை வணங்குகிறேன்.)

வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக் கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உரு ஆக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. முருகன் / சுப்பிரமணியர்

சுப்பிரமணிய புஜங்கம்:

மயூராதிரூடம் மஹா வாக்ய கூடம்
மனோஹாரி தேஹம் மஹச் சித்த கேஹம்
மஹீதேவ தேவம் மஹாவேத பாவம்
மஹாதேவ பாலம் பஜே லோக பாலம்.

(மயில் வாகனரும், வேதங்களில் உள்ள மஹா வாக்கியங்களில் மறைந்தவரும், மனத்திற்கு இன்பம் அளிக்கக்கூடிய சரீரத்தை உடையவரும், பெரியோர்களின் மனத்தை இருப்பிடமாகக் கொண்டவரும், அந்தணர்களின் தெய்வமும், பெருமை வாய்ந்த வேதப் பொருளும் மஹாதேவனின் குழந்தையுமாகி உலகத்தைக் காக்கின்ற முருகனை வணங்குகிறேன்.)

திருச்செந்தூர்க் கலம்பகம்:

பன்னிரு கரத்தாய் போற்றி
பசும்பொன் மா மயிலாய் போற்றி
முன்னிய கருணை ஆறு
முகப் பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக்
கருணை வாரிதியே போற்றி
என் இரு கண்ணே! கண்ணுள்
இருக்கு மா மணியே! போற்றி!

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

கந்தர் அநுபூதி:

எந்தாயும் எனக்கு அருள்தந்தையும் நீ
சிந்தா குலமானவை தீர்த்து எனைஆள்
கந்தா! கதிர்வேலனே! உமையாள்
மைந்தா! குமரா! மறைநாயகனே!

4. சிவபெருமான்

லிங்காஷ்டகம்:

1. பிரம்ஹ முராரி ஸுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஸித சோபித லிங்கம்
ஜன்ம ஜ துக்க விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

(பிரமன், விஷ்ணு ஆகியோரால் பூஜிக்கப் பெறுவதும், மலமின்றிப் பிரகாசிக்க வல்லதும், பிறவித்துன்பத்தை அழிக்க வல்லதுமான ஸதாசிவ லிங்கத்தை வணங்குகிறேன்.)

2. தேவ முனி ப்ரவரார்ச்சித லிங்கம்
காமதகம் கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசந லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

(தேவர் முனிவர் தொழுவதும், காமனை எரித்ததும், கருணை காட்டுவதும், இராவணனின் அகம்பாவத்தை அழித்ததுமான ஸதாசிவ லிங்கத்தை வணங்குகிறேன்.)

Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. ஸர்வ ஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

(எல்லாவித நறுமணங்களும் கமழ்வதும், புத்தி விலாசத்திற்குக் காரணமானதும், சித்தர்கள், தேவர்கள், அசுரர்கள் ஆகியோர் வணங்குவதுமாகிய ஸதாசிவ லிங்கத்தை வணங்குகிறேன்.)

4. கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ ஸுயக்ஞ விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

(தங்க மணிகளால் அலங்கரிக்கப் பெற்றதும், நாகங்களால் சூழப் பெற்று விளங்குவதும், தக்ஷயாகத்தை நாசம் செய்ததுமாகிய ஸதாசிவ லிங்கத்தை வணங்குகிறேன்.)

5. குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

(குங்குமம் சந்தனம் பூசியதும், தாமரை மலர் மாலைகளை அணிந்து சோபிப்பதும், சேர்ந்துள்ள பாவங்களைப் போக்குவதுமாகிய ஸதாசிவ லிங்கத்தை வணங்குகிறேன்)

6. தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவைர் பக்திபி ரேவச லிங்கம்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

தினகரகோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

(தேவர் கூட்டம் சேவிப்பதும், பக்திக்குக் கட்டுப் படுவதும், கோடி சூரியன்கள் பிரகாசத்துடன் விளங்கு வதுமாகிய ஸதாசிவ லிங்கத்தை வணங்குகிறேன்.)

7. அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

(எட்டு தளங்களின் மீது அமைந்துள்ளதும், எல்லாவற்றின் தோற்றத்திற்கு மூலகாரணமானதும், அஷ்டதரித்திரங் களையும் அகற்ற வல்லதுமாகிய ஸதாசிவ லிங்கத்தை வணங்கு கிறேன்.)

8. ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பரமபரம் பரமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

(தேவகுருவான பிருஹஸ்பதியும், இந்திரனும் பூசித்ததும், நன்மலர்களால் அருச்சிக்கப் பெறுவதும், மேலான பரமாத்மாவானதுமாகிய ஸதாசிவ லிங்கத்தை வணங்கு கிறேன்.)

Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருஞானசம்பந்தர்: தில்லை (சிதம்பரம்)

செல்வ நெடுமாடம் சென்றுசேண் ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ் தில்லைச் சிற்றம்பலம் மேய
செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே.

திருநாவுக்கரசர்:

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்தும் சொல் ஆனாய் போற்றி
என் சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனும் தீ ஆனாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

5. உமாதேவி / பார்வதி

முக்தா குந்தேந்து கௌராம் மணிமய மகுடாம்
ரத்ன தாடங்க யுக்தாம்
அக்ஷஸ்ரக் புஷ்ப ஹஸ்தாம் அபய வரகராம்
சந்த்ர சூடாம் த்ரிநேத்ராம்
நானாலங்கார யுக்தாம் ஸுர மகுடமணி
த்யோதித ஸ்வர்ண பீடாம்
ஸா நந்தாம் ஸுப்ரஸந்நாம் த்ரிபுவன
ஜனனீம் சேதஸா சிந்த யாமி.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

(முத்து, முல்லைப்பூ, பிறைச் சந்திரன் போன்று வெண்ணிற மேனியுள்ளவளும், மணிகளாலான கிரீடமும் ரத்தினங்களாலான காதணிகளும் உடையவளும், கரும்பு வில்லும் அம்புகளும் ஏந்தியவளும், அபய, வரத கரங் களையும், மூன்று கண்களையும் உடையவளாகி, பலவகை யான ஆபரணங்களை அணிந்து தங்க மயமான ஆசனத்தில் வீற்றிருக்கும் மூவுலகிற்கும் தாயானவளைத் தியானிக்கிறேன்.)

ஸர்வ மங்கள மாங்கல்யே சிவே, ஸர்வார்த்த ஸாதிகே
சரண்யே த்ரியம்பிகே கௌரி நாராயணி நமோஸ்துதே.

(எல்லா மங்கலப் பொருள்களின் மங்கலத் தன்மையாக இருப்பவளே! சிவனைச் சார்ந்தவளே! எல்லா விருப்பங் களையும் நிறைவேற்றுபவளே! அடைக்கலமாக அடையத் தக்கவளே! முக்கண் உள்ளவளே! தேவி! நாராயணனின் சகோதரியே! உன்னை வணங்குகிறேன்.)

அபிராமியம்மைப் பதிகம்:

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்பம் இல்லாத வாழ்வும்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி
அருள்வாழி அபிராமியே.

6. தட்சிணாமூர்த்தி

குரவே ஸர்வ லோகாநாம் பிஷஜே பவரோகிணாம்
நிதயே ஸர்வ வித்யாநாம் தக்ஷிணாமூர்த்தயே நமஃ

அப்ரமேய த்வயாதீத நிர்மல ஜ்ஞான மூர்த்தயே
மநோகிராம் விதூராய தக்ஷிணாமூர்த்தயே நமஃ

(எல்லா உலகுக்கும் குரு, ஸம்ஸார நோய்க்கு மருந்து, ஸர்வ வித்யாநிதியுமான தட்சிணாமூர்த்திக்கு நமஸ்காரம். அளவைக்கு அப்பாற்பட்டவரும், இரண்டாவது அற்றவரும், அப்பழுக்கற்ற ஞான வடிவானவரும், மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாதவருமான தட்சிணா மூர்த்திக்கு நமஸ்காரம்)

திருவிளையாடற் புராணம்

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை ஆறுஅங்கம்
முதல் கற்றகேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கு சிறந்த பூரணமாய்
மறைக்கு அப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி
இருந்து காட்டிச்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொல்லாமல் சொன்னவரை நினையாமல் நினைந்து
பவத் தொடக்கை வெல்வாம்.

7. மஹா விஷ்ணு - திருமால்

சாந்தா காரம் புஜகசயனம் பத்மநாபம் ஸுரேசம்
விச்வாகாரம் ககன ஸத்ருசம் மேக வர்ணம் சுபாங்கம்
லக்ஷ்மீ காந்தம் கமலநயனம் யோகி ஹ்ருத் தியான கம்யம்
வந்தே விஷ்ணும் பவபயஹரம் ஸர்வ லோகைக நாதம்.

(அமைதியின் வடிவானவரும், பாம்புப் படுக்கையில் படுத்துள்ளவரும், தாமரைக் கொப்பூழையுடைவரும், தேவர்களின் தலைவரும், அண்டமே உருப் பெற்று ஆகாயம் போல் பரவியிருப்பவரும், கார்மேனியரும், அழகிய வடிவ அமைப்பு உள்ளவரும், தாமரைக்கண்ணரும், யோகியர்களால் தியானிக்கப் படுபவரும், பிறவிப் பயத்தைப் போக்குபவரும், எல்லா உலகங்களுக்கும் நாதனாக விளங்குபவரும், லட்சுமி கணவருமான விஷ்ணுவை வணங்குகிறேன்.)

ஸ்ரீவேங்கடேச மங்களம்:

ச்ரிய: காந்தாய கல்யாண நிதயே நிதயேர்த்திநாம்
ஸ்ரீவேங்கட நிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம்:

நித்யாய நிரவத்யாய ஸத்யாநந்த சிதாத்மநே
ஸர்வாந்த ராத்மநே ஸ்ரீமத் வேங்கடேசாய மங்களம்

ஸ்ரீவைகுண்ட விரக்தாய ஸ்வாமி புஷ்கரணீதடே
ரமயா, ரமமாணாய வேங்கடேசாய மங்களம்.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

(லட்சுமிபதியான, மங்கள நிதியான வேங்கட மலையில் விளங்கும் ஸ்ரீவேங்கடேசனுக்கு மங்களம். நித்யனாகவும் குறைவற்றவனும் உண்மையான ஆனந்த சித்ரூபனாகவும் எல்லோருடைய அந்தரான்மாவிலும் உள்ள ஸ்ரீவேங்க டேசனுக்கு மங்களம். வைகுந்தத்தில் பற்றின்றி சுவாமி புஷ்கரணீ என்ற குளக்கரையில் லட்சுமியுடன் மகிழ்ச்சியாக வீற்றிருக்கும் ஸ்ரீவேங்கடேசனுக்கு மங்களம்)

நம்மாழ்வார்:-

சன்மம் பலபல செய்து வெளிப்பட்டுச்
சங்கொடு சக்கரம் வில்
ஒண்மையுடைய உலக்கை ஒள்வாள்
தண்டு கொண்டு புள் ஊர்ந்து உலகில்
வன்மையுடைய அரக்கர் அசுரரை
மாளப் படை பொருத
நன்மையுடையவன் சீர் பரவப் பெற்ற
நான் ஓர் குறைவிலனே.

திருமங்கையாழ்வார்:-

ஊன்வாட உண்ணாது உயிர்காவலிட்டு
உடலிற் பிரியாப் புலன் ஐந்தும் நொந்து
தாம் வாட வாடத் தவஞ் செய்ய வேண்டா
தமதா இமையோர் உலகு ஆளகிற்பீர்
கான் ஆட மஞ்சைக் கணம் ஆட மாடே
கயலாடு கானீர்ப் பழனம் புடைபோய்த்
தேன் ஆட மாடக் கொடி ஆடுதில்லைத்
திருச்சித்ர கூடம் சென்று சேர்மின்களே.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

8. கிருஷ்ணன் - கண்ணன்

கிருஷ்ணாடகம்

வஸுதேவ ஸுதம் தேவம் கம்ஸ சாணூர மர்த்தனம்
தேவகீ பரமானந்தம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்.

ருக்மிணீ கேளி சம்யுக்தம் பீதாம்பர ஸுசோபிதம்
அவாப்த துளஸீகந்தம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்.

ஸ்ரீவத் ஸாங்கம மஹோரஸ்கம் வனமாலா விராஜிதம்
சங்க சக்ரதரம் தேவம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்.

(வஸுதேவரின் மகனும், அலகிலா விளையாட்டுடை யாரும், கம்சனையும் சாணூரனையும் கொன்றவரும், தேவகியை மகிழ்விப்பவரும், ருக்மிணியுடன் விளையாடுப வரும், பீதாம்பரத்தால் அழகியவரும், துளசியின் நறுமணத் தைப் பெற்றிப்பவரும், வன மாலையும் சங்கும் சக்கரமும் கொண்ட வரும், உலக குருவுமான கிருஷ்ணனை வணங்குகிறேன்.)

நம்மாழ்வார்:

கண்ணன் அல்லால் இல்லை கண்டீர்
சரண் அது நிற்க வந்து
மண்ணின் பாரம் நீக்குதற்கே
வடமதுரைப் பிறந்தான்
திண்ணமாநும் உடைமையுண்டேல்
அவனடி சேர்ந்துய்மினோ
எண்ணவேண்டா நும்மதாதும்
அவன் அன்றி மற்று இல்லையே.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

9. இராமபிரான்

ராமாய ராமபத்ராய ராம சந்த்ராய வேதஸே
ரகுநாதாய நாதாய ஸீதாய: பதயே நம:

(ராமச்சந்திரனான, அறிவாளியான, ரகுவம்சத்துத் தலையாய அரசனான, என்தலைவனான, சிதை மணாளனான, ராமனுக்கு நமஸ்காரம்.)

பெரியாழ்வார்:

உன்னுடைய விக்கிரமம் ஒன்று ஒழியாமல் எல்லாம்
என்னுடைய நெஞ்சகம் பால் சுவர் வழி எழுதிக் கொண்டேன்
மண் அடங்க மழுவலம் கைக்கொண்ட இராம நம்பீ
என்னிடை வந்து எம்பெருமான் இனி எங்குப் போகின்றதே.

கம்பர்:

நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழும் உண்டாம்
வீடு இயல் வழியது ஆக்கும் வேரிஅம் கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட்டு அழிய வாகை
சூடிய சிலை இராமன் தோள்வலி கூறுவார்க்கே.

10. லட்சுமி

1 லக்ஷ்மீம் க்ஷீரஸமுத்ர ராஜதநயாம் ஸ்ரீரங்க தாமேச்வரீம்
தாஸீ பூத ஸமஸ்த தேவ வனிதாம் லோகைக தீபாங்குராம்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஸ்ரீமந் மந்தகடாக்ஷ லப்த விபவ ப்ரஹ்மேந்த்ர கங்காதராம்
த்வாம் த்ரைலோக்ய குடும்பநீம் ஸரஸிஜாம்
வந்தே முகுந்த ப்ரியாம்.

(திருப்பாற்கடலின் பெண்ணும், ஸ்ரீரங்கத்தின் அரசியும், எல்லாத் தேவப் பெண்களும் தொண்டு செய்யும் தகைமையுடையவளும், உலகிற்கு ஒளி தரும் தீபச் சுடரானவளும், தன் கடைக்கண் பார்வையால் பிரம்மா விஷ்ணு சிவன் ஆகியோரை பெருமையடையச் செய்பவளும், தாமரை ஓடையில் தோன்றியவளும், மூவுலகையும் தன் குடும்பமாகக் கொண்டவளும், முகுந்தனின் (விஷ்ணுவின்) மனைவியுமான லட்சுமியை வணங்குகிறேன்.)

2 ஸித்தி புத்தி ப்ரதே தேவி
புக்தி முக்தி ப்ரதாயினி
மந்த்ர மூர்த்தே ஸதாதேவி
மஹாலக்ஷ்மி நமோஸ்துதே.

(செயல் நிறைவையும் அறிவையும் பக்தியையும் முக்தியையும் அளிப்பவளும், மந்திரவடிவாக இருப் பவளுமான மகாலட்சுமியே எப்பொழுதும் உன்னை வணங்குகிறேன்.)

3 பத்மாஸன ஸ்திதே தேவி
பரப்ரஹ்ம ஸ்வரூபிணி
பரமேசி ஜகன்மாத:
மஹாலக்ஷ்மி நமோஸ்துதே.

(தாமரையை இருக்கையாக உடையவளும், பரப்ரம்மமான உருவத்தையுடைவளும், பேராளுமையுள்ளவளும், உலகிற்குத் தாயுமான மஹாலக்ஷ்மியே உனக்கு வணக்கங்கள்.)

Public domain. Digitization Muthulakshmi Research Academ

செங்கமலப் பொலந்தாதில் திகழ்ந்து ஒளிரும்
எழில்மேனித் திருவே, வேலை
அங்கண் உலகு இருள் துரக்கும் அலர் கதிராய்
வெண் மதியாய் அமரர்க் கூட்டும்
பொங்கு அழலாய் உலகு அளிக்கும் பூங்கொடியே
நெடுங்கானில் பொருப்பில் மண்ணில்
எங்கு உளைநீ அவண் அன்றோ மல்லல் வளம்
சிறந்து ஓங்கி இருப்பது அம்மா.

11. சரஸ்வதி

1 ஸரஸ்வதி நமஸ்துப்யம் வரதே காமரூபிணி
வித்யாரம்பம் கரிஷ்யாமி ஸித்திர்பவது மே ஸதா.

(விரும்பியதை அளிப்பவளே, தான் விரும்பிய வடிவில் தோன்றுபவளே, கல்வியைத் தொடங்குகிறேன். அது எப்போதும் நிறைவடையட்டும்.)

2 ஸரஸ்வதி நமஸ்துப்பம் ஸர்வதேவி நமோநமः
சாந்தரூபே சசிதரே ஸர்வயோகே நமோநமः

(அமைதியான வடிவமும், முடியில் சந்திரனைப் பெற்றவளும், எல்லோருக்கும் அரசியும், யோக ரூபிணியமான சரஸ்வதியே உனக்கு நமஸ்காரம்.)

சரஸ்வதி அந்தாதி:

ஆய கலைகள் அறுபத்தி நான்கினையும்
ஏய உணர்விக்கும் என் அம்மை - தூய

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தின் உள்ளே
இருப்பள் இங்கு வாராது இடர்.

சகலகலா வல்லி மாலை:

சொல் விற்பனமும் அவதானமும் கவிசொல்ல வல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய் நளினாசனம் சேர்
செல்விக்கு அரிது என்று ஒரு காலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெரும் செல்வப் பேறே சகலகலா வல்லியே.

12. துர்க்கை

ஸர்வ ஸ்வரூபே ஸர்வேசே
சர்வ சக்தி சமன்விதே
பயேப்யஸ்த்ராஹி நோ தேவி
துர்க்கா தேவி நமோஸ்துதே.

(எல்லாவித சக்திகளையும் உடையவளும், எல்லா வடிவங்களாக உள்ளவளுமான துர்க்கா தேவியே உன்னை வணங்குகிறேன். எங்களை பயங்களிலிருந்து காப்பாற்று வாயாக.)

மஞ்சளாடை யுடுத்தி மாணுறு பணிகள் பூண்டு
அஞ்சல் என்று அபயம் காட்டி அரியதோர்
வில்லும் கொண்டு
உக்கிர வடிவத்தோடு உயர்சூலம் கரத்தே தாங்கும்
துர்க்கையே பரமேஸ்வரியே துணையெனத்
தொழுதோம் யாமே.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

13. அன்னபூரணி

அன்ன பூர்ணாஷ்டகம்:

நித்யானந்தகரீ வராபயகரீ ஸௌந்தர்ய ரத்னாகரீ
நிர்தூதாகில கோர பாவனகரீ ப்ரத்யக்ஷ மாஹேச்வரீ
ப்ராலே யாசல வம்ச பாவனகரீ காசீபுராதீச்வரீ
பிக்ஷாம்தேஹி க்ருபாவலம்ப னகரீ மாதாஅன்ன
பூர்ணேச்வரீ.

(நிலைத்த மகிழ்ச்சியைத் தருபவளும், பயத்தைப் போக்கி நலத்தைச் செய்பவளும், அழகுக் கடலும், எல்லாக் கொடும் பாவங்களையும் விலக்கிப் புனிதமாக்குபவளும், ப்ரத்யக்ஷமான தேவியும், பனிமலையரசனின் வம்சத்தைப் புனிதமாக்கியவளும், காசி நகரில் எழுந்தருளி அருள் பாலிக்கின்ற அன்னபூரணித் தாயே பிச்சையிடுவாயாக!)

காசி அன்னபூரணி அருட்பா:

சீருலவும் உன்பாத தாமரை வணங்கினோர்
திசைமுகனும் வெண்பாற்கடல்
செம்மணிக் கண்ணர் அரவணைக் கமல நயனனும்
தேவர்கோனும் புட்பகம்
ஊரும் குபேரனும் பானுவொடு மதியுமாய்
ஒழியாமலே பாலன
மோடு பொன்னாடை தரு திருவுள சகாயமருள்
உடையராய் வீற்றிருப்பவர்
பாரில் ஆசாபாசம் எல்லாமும் விட்டு உன்
பதாம்புயத்துணையை நம்பிப்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

பரமபாகீரதி வனந்தருங் காசியே
பரம் என்று வந்து அடியேன்
ஆரிடம் சென்று இரப்பேன் புத்தி முத்தியாம்
ஐயனுடன் உன்னையன்றி
அண்ட கோடிகள் பணி அகண்டபூரணி என்னும்
அன்னபூரணி அன்னையே.

14. சூரியன்

ஜபா குஸும ஸங்காசம் காச்யபேயம் மஹாத்யுதிம்
தமோரிம் ஸர்வ பாபக்னம் ப்ரணதோஸ்மி திவாகரம்.

(செம்பருத்திப் பூப்போன்ற நிறமுள்ளவனும், காச்யபரின் மகனும், பேரொளியுடையவனும், இருளை நீக்குபவனும், எல்லாப் பாவங்களையும் போக்குபவனுமான தினகரனை (சூரியனை) வணங்குகிறேன்.)

மித்ரா ரவியே மிடியினைத் தீர்ப்பாய்
வித்தகா பாஸ்கரா விரிசுடர் விண்ணவா
சித்தமே நினைத்திடச் சயம்தரு ஸ்ரீதரா
சித்திரை வலம்வரு இந்திரா போற்றியே.

15. ஆஞ்சநேயர்

புத்திர்பலம் யசோதைர்யம் நிர்பயத்வம் அரோகதா
அஜாட்யம் வாக்படுத்வம் சஹநூமத் ஸ்மரணாத் பவேத்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

(ஆஞ்சநேயரை மனத்தில் நினைப்பதால் புத்திசக்தி, கீர்த்தி, தைரியம், பயமின்மை, நோயின்மை, சோம்பல் இல்லாமை, நாவன்மை முதலியவை அனைத்தும் கிட்டும்.)

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்று ஆறாக ஆரியற்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் நம்மை அளித்துக் காப்பான்.

(1. வாயு - வாயு புத்திரன், அநுமன்; 2. கடல் - (நீர்); 3. விண்; 4. பூமி; 5. தீ; ஆரியன் - மேன்மையன் - இராமன்; சீதை = பூமிஜா எனப்படுவாள்.)

16. பொதுப் பிரார்த்தனை

1. த்வமேவ மாதாச பிதா த்வமேவ
த்வமேவ பந்துஸ்ச ஸகா த்வமேவ
த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ
த்வமேவ ஸர்வம் மமதேவ தேவ.

2. மாதா ச பார்வதி தேவி பிதா தேவோ மஹேச்வர:
பாந்தவா சிவ பக்தாஸ்ய, ஸ்வதேசோ புவனத்ரயம்:

(தேவ தேவனாகிய நீயே எனக்குத் தாய், தந்தை, உறவினன், தோழன், கல்வி, செல்வம் எல்லாமும் ஆனாய்.)

3. த்ரயம்பகம் யஜாமஹே ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருக மிவ பந்தனான் ம்ருத்யோர் முக்ஷீயமாம்ருதாத்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

(முக்கண்ணனான சிவபெருமானை வணங்குவோம். நறுமணமுள்ளவரும் சகல ஜீவர்களையும் போஷிப்பவருமான அவர், வெள்ளரிப்பழம் கொடியின் பிடியிலிருந்து எவ்வாறு விடுபடுகிறதோ அவ்வாறு நம்மை மரணத்தினின்றும் விடுவித்து, மரணமிலாப் பெருவாழ்வில் சேர்ப்பாராக.)

4. ஸ்வஸ்தி ப்ரஜாப்ய: பரிபாலயந்தாம்
நியாயயேன மார்கேண மஹீம் மஹீசா:
கோ ப்ராஹ்மணேப்ய: சுபமஸ்து நித்யம்
லோகாஸ் ஸமஸ்தாஸ் ஸுகினோ பவந்து.

(மக்களுக்கு மங்களம் உண்டாகட்டும். அரசர்கள் பூமியை நியாய மார்க்கத்தில் அரசாளட்டும். பசுக்களுக்கும் அந்தணர் களுக்கும் எப்பொழுதும் நன்மை நிலைத்திருக்கட்டும். உலகில் எல்லோரும் சுகமாக வாழட்டும்.)

5. அஸத் கார்ய நிவ்ருத்திம் ச ஸத்கார்யஸ்ய ப்ரவர்த்தனம்
தேவ தாத்மாநு ஸந்தாநம் தேஹிமே பரமேச்வரி.

(தேவி! கெட்ட செயல்களில் ஈடுபடாமையையும், நற்செயல்களில் ஈடுபடுதலையும், இறைவனையும் ஆத்மா வையும் நீண்டு தியானிப்பதையும் அருள்வாய்.)

6. தேஹி ஸௌபாக்யம் ஆரோக்யம் தேஹி தேவி பரம் ஸுகம்
ரூபம் தேஹி ஜயம் தேஹி யஸோ தேஹி த்விஷோ ஜஹி.

(தேவியே! எனக்கு நல்வாழ்க்கையைத் தருவாய். நோயற்ற நிலை, மேலான இன்பம், வடிவழகு, பணிகளில் வெற்றி, புகழ் இவற்றைத் தருவாய்.)

Public domain. Digitization Muthulakshmi Research Academ

7. பாநோ பாஸ்கர மார்த்தாண்ட சண்டரச்மே திவாகர
ஆயுர் ஆரோக்யம் ஐச்வர்யம் ச்ரியம் வித்யாஞ்ச தேஹிமே.

(ஒளிர்பவனே, ஒளிதருபவனே, சக்தியிடமிருந்து முட்டையாக வெளிப்பட்டவனே, கொடிய கதிர்களை யுடையவனே, பகலவனே ஆயுள், நோயின்மை, ஆளுமை, செல்வம், கல்வி இவற்றைத் தந்தருள்வாய்.)

8. அநாயாஸேந மரணம் விநா தைன்யேன ஜீவனம்
தேஹிமே க்ருபயா த்வயி பக்திம் அசஞ்சலாம்

(ஆயாசமில்லாத மரணம், ஏழ்மையில்லாத பிழைப்பு, உம்மிடத்தில் மாறாத பக்தி இவைகளை எனக்கு அருள்வாய்.)

9. ஸர்வே பவந்து ஸுகின:
ஸர்வே ஸந்து நிராமயா:
ஸர்வே பத்ராணி பச்யந்து:
மா கஸ் சித் துக்கபாக் பவேத்.

(எல்லோரும், சுகத்தை அடையட்டும். வியாதியின்றி இருக்கட்டும், மங்களத்தைக் காணட்டும், எவருமே துன்பத்தை அடையாமல் எல்லோரும் இன்பமாய் விளங்கட்டும்.)

10. புன்னெறி தன்னில் செல்லாப் புத்தி, ஐம்புலன் அடக்கம்,
தன்னலம் நாடாத் தன்மை, சஞ்சலம் ஏலாச் சித்தம்
இன்னுயிர்ச்சாலம் எல்லாம் இறைவ! நின் உரு என்று ஓர்தல்
நின் அடி தியான யோகம் நிதம் எனக்கு அருள்செய்வாயே. (1)

மனத்தினை உன்னில் ஊன்றி வாழ்வு தாழ்வுற்ற போதும்
மனநிலை சாய்ந்திடாமல் வாய்த்ததில் திருப்தியுற்று

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

வினைகளை எல்லாம் நின்பால் விட்டொரு பற்றும் இன்றி
இனிது வாழ்ந்திட எனக்கு உன் இன்னருள் செய்குவாயே. (2)

எப்பணி செய்யும் போதும் எவ்வுணவு உண்ணும் போதும்
தர்ப்பணம் ஹோமம் தானம் தவ ஜபம் பண்ணும் போதும்
அப்பனே அவற்றையெல்லாம் அன்புடன் உன் தாளிணையில்
அர்ப்பணம் செய்யும் நீர்மை அடியனுக்கு அருள் செய்வாயே. (3)

உன்னை எக்காலும் என்றன் உளமதில் எண்ணி நின்றன்
பொன்னடிச் சரோருகத்தைப் போற்றியே வணங்கியுன்றன்
இன்னருட் கடலில் மூழ்கி எவற்றினும் உன்னைக் கண்டு
தன்னியனாகி வாழத் தமியனுக்கு அருள் செய்வாயே. (4)

யான் எனது என்ற கர்வம் அணுவளவேனும் என்றன்
மானசம் தன்னில் தோன்றா வலிநிலை, பெயராத் தைர்யம்
ஞான சாதனத்தின் வேட்கை நன்னெறி குரு வணக்கம்
தானமா குணங்கள் எல்லாம்.தயவுடன் அருள் செய்வாயே. (5)

விருப்பமும் வெறுப்புமின்றி வினைப்பயன் எல்லாம் உன்றன்
திருப்பதம் தன்னில் சேர்த்துத் திருப்தியும் திறனும் உற்று
ஒறுப்பவர் மீதும் துவேஷம் உற்றிடாது அன்பே பூண்டு உன்
திருப்பணி செய்து வாழத் திருவருள் செய்குவாயே. (6)

11. வாழ்க அந்தணர் வாழ்க ஆன் இனம்
வீழ்க தண் புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே. (திருஞானசம்பந்தர்)

Public domain. Digitization Muthulakshmi Research Academ

12. எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்
வேறு ஒன்று அறியேன் பராபரமே. (தாயுமானவர்)

திருப்பாவை:

சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து உன்
பொற்றாமரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றை நம் காமங்கள் மற்றேலோ ரெம்பாவாய்.

திருக்குறுந்தாண்டகம்:

பாயிரும் பரவை தன்னுள் பருவரை திரித்து வானோர்க்கு
ஆயிருந் தமுதம் கொண்ட அப்பனை எம்பிரானை
வேயிருஞ் சோலை சூழ்ந்து விரிகதிர் இரிய நின்ற
மாயிருஞ்சோலை மேய மைந்தனை வணங்கினேனே.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

II

1. காலையில் உறக்கத்திலிருந்து விழித்ததும் அன்றைய பொழுது நல்லதாக அமையச் சொல்ல வேண்டியவை.

கராக்ரே வஸதே லக்ஷ்மீ: கரமத்யே ஸரஸ்வதீ
கரமூலேது கௌரீஸ்யாத் ப்ரபாதே கர தர்சனம். ||

(இதை விழித்ததும் உள்ளங்கையைப் பார்த்துச் சொல்லவும் - உள்ளங்கையின் நுனியில் லட்சுமியும், நடுப்பாகத்தில் சரஸ்வதியும், அடிப்புறத்தில் கௌரியும் வாசம் செய்வதால் காலையில் எழுந்தவுடன் தன் உள்ளங்கையைப் பார்த்துத் தரிசிப்பவனுக்கு லட்சுமி சரஸ்வதி கௌரி ஆகிய மூவருடைய அருள்கிட்டும்.)

கைகூப்பிவணங்கியபடியே இவைகளைச் சொல்லவும்:

ஸமுத்ர வஸனேதேவி பர்வத ஸ்தன மண்டிதே
விஷ்ணு பத்னி நமஸ்துப்யம் பாத ஸபர்சம் க்ஷமஸ்வமே. ||

(கடலை ஆடையாகக் கொண்டவளும், மலைகளை மார்பாக (ஸ்தனமாக) உடையவளும், விஷ்ணுவின் மனைவியுமான உன்னைச் சரணடைகின்றேன். என்னை நீ காப்பாற்றுவாயாக.)

அஹல்யா, துரௌபதீ, ஸீதா, தாரா, மண்டோதரீ, ததா
பஞ்ச கன்யாஸ் ஸ்மரேந் நித்யம் மஹாபாதக நாசனம்

(அகலிகை, திரௌபதி, சீதை, தாரை, மண்டோதரி ஆகிய ஐந்து கற்புடைய மாதர்களையும் தினமும் நினைப்பதால் பாவங்கள் நீங்குகின்றன.)

Public domain. Digitization Muthulakshmi Research Academ

அச்வத்தாமா, பலிர், வ்யாஸ: ஹநூமான்ச் ச, விபீஷண:
க்ருப: பரசுராமஸ்ச் ச ஸப்ததைதே சிரஞ்ஜீவின:

(அசுவத்தாமா, மஹாபலி, வியாஸர், அநுமான், விபீஷணன், கிருபர், பரசுராமர் ஆகிய எழுவரும் சிரஞ்சீவிகள். இவர்களை நினைப்பதால் நீண்ட ஆயுள்கிட்டும்.)

திருவாசகம் (திருப்பள்ளியெழுச்சி)

அது பழச்சுவை என, அமுதுஎன, அறிதற்கு
அரிது என, எளிது என, அமரரும் அறியார்
இது அவன் திரு உரு, இவன் அவன் எனவே
எங்களை ஆண்டு கொண்டு இங்கு எழுந்தருளும்
மதுவளர் பொழில் திருவுத்தரகோச
மங்கையுள்ளாய் திருப்பெருந்துறை மன்னா
எது எமைப் பணி கொளும் ஆறு? அது கேட்போம்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

2. நீராடத் தொடங்கும் முன்பு சொல்ல வேண்டியவை.

கங்கே ச யமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதி
நர்மதே ஸிந்து காவேரி ஜலேஸ்மின் ஸந்நிதிம் குரு

(கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதை, சிந்து, காவேரி ஆகிய (நதிகளாகிய) நீங்கள் இந்த நீரில் காட்சியளியுங்கள்.)

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

திருவாசகம் - திருவெம்பாவை

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப்புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப்பொருள் பாடி அப்பொருள் ஆமா பாடிச்
சோதித் திறம் பாடிச் சூழ் கொன்றைத்தார் பாடி
ஆதிதிறம் பாடி அந்தம் ஆமா பாடிப்
பேதித்து நம்மை வளர்த்து எடுத்த பெய்வளை தன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

திருக்குறுந்தாண்டகம்: திருமங்கையாழ்வார்

முன்பொலா இராவணன் தன் முழுமதில் இலங்கை வேவித்து
அன்பினால் அநுமன் வந்து ஆங்கு அடியினைப் பணிய நின்றாற்கு
என்பெலாம் உருகி உக்கிட்டு என்னுடை நெஞ்சம் என்னும்
அன்பினால் ஞானநீர் கொண்டு ஆட்டுவன் அடியனேனே.

3. படிக்கத் தொடங்கும் முன்பு சொல்ல வேண்டியவை.

குருர் பிரம்ஹா குருர் விஷ்ணுர் குருர்தேவா மஹேச்வரः
குருஸ் ஸாக்ஷாத் பரம் பிரம்ஹ தஸ்மை ஸ்ரீகுரவே நமः

(குருவே பிரமன், குருவே விஷ்ணு, குருவே தேவனான மகேசன், குருவே பரம்பொருள், அந்த குருவுக்கு வணக்கம்.)

ஞானானந்த மயம் தேவம் நிர்மல ஸ்படிகாக்ருதிம்
ஆதாரம் ஸர்வ வித்யாநாம் ஹயக்ரீவம் உபாஸ்மஹே.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

(பேரறிவும் ஆனந்தமும் வடிவான தேவன், அப்பழுக்கற்ற ஸ்படிகம் போன்ற மேனியன், எல்லாக் கல்வித் துறைகளுக்கும் ஆதாரமாகி அவற்றைத் தாங்கி உதவுபவன், அந்த ஹயக்ரீவரை வழிபடுவோம்.)

ஸரஸ்வதி நமஸ்துப்யம் வரதே காமரூபிணி
வித்யாரம்பம் கரிஷ்யாமி ஸித்திர்பவது மே ஸதா.

(விரும்பியதை அளிப்பவளே, விரும்பிய வடிவில் தோன்றுபவளே, கல்வியைத் தொடங்குகிறேன், அதை எப்பொழுதும் நிறைவுறச் செய்வாய்.)

சரஸ்வதி அந்தாதி: கம்பர்

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என் அம்மை - தூய
உருப் பளிங்கு போல்வாள் என் உள்ளத்தின் உள்ளே
இருப்பள் இங்கு வாராது இடர்.

முதுரை: ஔவையார்

வாக்கு உண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலராள்
நோக்கு உண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பு ஆர் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

சகல கலா வல்லி மாலை: குமரகுருபரர்

சொல் விற்பனமும் அவதானமும் கல்வி சொல்ல வல்ல
நல் வித்தையும் தந்து அடிமை கொள்வாய் நளினாசனம் சேர்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

செல்விக்கு அரிது என்று ஒரு காலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகலகலா வல்லியே.

திருவாய்மொழி: நம்மாழ்வார்

உயர்வற உயர்நலம் உடையவன் எவன் அவன்
மயர்வற மதிநலம் அருளினன் எவன் அவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி எவன் அவன்
துயரறு சுடரடி தொழுது எழு என் மனனே.

இராமானுஜ நூற்றந்தாதி:

பொருந்திய தேசும் பொறையும் திறலும் புகழும் நல்ல
திருந்திய ஞானமும் செல்வமும் சேரும் செறு கலியால்
வருந்திய ஞாலத்தை வண்மையினால் வந்தெடுத்து அளித்த
அருந்தவன் எங்கள் இராமநுசனை அடைபவர்க்கே.

4. உணவு கொள்ளத் தொடங்கும் முன்பு சொல்ல வேண்டியவை

(உணவை, இச்சுலோகங்களைச் சொல்லி மானசீகமாக வணங்கிப் பிறகு உண்ணத் தொடங்க வேண்டும்.)

அன்னபூர்ணே ஸதாபூர்ணே சங்கர ப்ராண வல்லபே
ஞான வைராக்ய ஸித்த்யர்த்தம் பிக்ஷாந்தேஹி ச பார்வதி

(உணவு நிறைந்தவளே, எல்லாவற்றிலும் எப்போதும் நிறைந்தவளே, சங்கரரின் உயிருக்கு இனியவளே, பார்வதி!

Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஞானமும் வைராக்யமும் நிறைவு பெற பிக்ஷையிட்டு - உணவு தந்து - அருள்வாயாக.)

அஸ்மாகம் நித்யம் அஸ்து ஏதத் ॥

(நமக்கு இந்த அன்னம் என்றைக்கும் அமையட்டும் - கிடைக்கட்டும்.)

தில்லை : திருநாவுக்கரசர்

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலும் இப்பூமிசை
என்னம் பாலிக்குமாறு கண்டு இன்புற
இன்னம் பாலிக்குமோ இப் பிறவியே.

திருவாய் மொழி : நம்மாழ்வார்

உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம்
கண்ணன் எம்பெருமான் என்றென்றே கண்கள் நீர் மல்கி
மண்ணினுள் அவன் சீர் வளமிக்கவனூர் வினவி
திண்ணம் என் இளமான் புகும் ஊர் திருக்கோளூரே.

5. கோயிலை வலம்வரும் போது சொல்ல வேண்டியவை

யா நி காநிச பாபாநி ஜன்மாந்தர க்ருதாநிச
தாநி தாநி ப்ரணச்யந்தி ப்ரதக்ஷிண பதே பதே ॥

(பல ஜன்மங்களில் செய்த எல்லா பாவங்களும் இறைவனை வலம் வரும் ஒவ்வோரடியாலும் நீங்குகின்றன)

Public domain. Digitization Muthulakshmi Research Acade

சிவபுராணம்: (திருவாசகம்)

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய் கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரம் குவிவார் உள்மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்
கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

எண்நிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்து அருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னை புகுவிப்பாய் நின் தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே
கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய் விண்ணோர்கள் ஏத்த

Public domain. Digitization Muthulakshmi Research Academ

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறத்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந் தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து எனை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே 'ஓ' என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டனே
அல்லல் பிறவி அறுப்பானே 'ஓ' என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லாரும் ஏத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்

திருமங்கையாழ்வார் அருளியது - பெரிய திருமொழி (1-3)

1. முற்றமூத்துக் கோல் துணையாமுன்னடி நோக்கி வளைந்து
இற்றகால் போல் தள்ளி மெள்ள இருந்தங்கு இளையாமுன்

Public domain. Digitization Muthulakshmi Research Acade

பெற்றதாய் போல வந்த பேய்ச்சி பெருமுலையூடு உயிரை
வற்றவாங்கி உண்ட வாயான் வதரி வணங்குதுமே.

2. முதுகு பற்றிக் கைத்தலத்தால் முன்னொடு கோலூன்றி
விதிர் விதிர்த்துக் கண் சுழன்று மேற்கிளை கொண்டு இருமி
இது வென்னப்பர் மூத்தவாறென்று இளையவர் ஏசாமுன்
மதுவுண் வண்டு பண்கள் பாடும் வதரி வணங்குதுமே.

3. உறிகள் போல் மெய்ந்நரம்பெழுந்து ஊன் தளர்ந்து உள்ளம் எள்கி
நெறியை நோக்கிக் கண் சுழன்று நின்று நடுங்கா முன்
அறிதியாகில் நெஞ்சம் அன்பாய் ஆயிர நாமஞ் சொல்லி
வெறி கொள் வண்டு பண்கள் பாடும் வதரி வணங்குதுமே.

4. பீளைசோரக் கண்ணிடுங்கிப் பித்தெழ மூத்து இருமி
தாள்கள் நோவத் தம்மில் முட்டித் தள்ளி நடவா முன்
காளையாகிக் கன்று மேய்த்துக் குன்றெடுத்து அன்று நின்றான்
வாளைபாயும் தண் தடஞ்சூழ் வதரி வணங்குதுமே.

5. பண்டு காமரான வாறும் பாவையர் வாயமுதம்
உண்ட வாறும் வாழ்ந்த வாறும் ஒக்கவுரைத்து இருமி
தண்டு காலா ஊன்றி ஊன்றித் தள்ளி நடவாமுன்
வண்டு பாடும் தண் துழாயான் வதரி வணங்குதுமே.

6. எய்த்த சொல்லோடு ஈளையேங்கி இருமி இளைத்து உடலம்
பித்தர் போலச் சித்தம் வேறாய்ப் பேசி அயரா முன்
அத்தன் எந்தை ஆதிமூர்த்தி ஆழ்கடலைக் கடைந்த
மைத்த சோதி எம்பெருமான் வதரி வணங்குதுமே.

7. பப்ப அப்பர் மூத்தவாறு பாழ்ப்பது சீத்திரளை
ஒப்ப ஐக்கள் போதவுந்தவுன் தமர் காண்மின் என்று

Public domain. Digitization Muthulakshmi Research Academ

செப்பு நேர் மென் கொங்கை நல்லார் தாம் சிரியாத முன்னம்
வைப்பு நங்கள் வாழ்வும் ஆனான் வதரி வணங்குதுமே.

8. ஈசி போமின் ஈங்கு இரேன் மின் இருமி இளைத்தீர் உள்ளம்
கூசியிட்டீர் என்று பேசும் குவளையங் கண்ணியர் பால்
நாசமான பாசம் விட்டு நன்னெறி நோக்கலுறில்
வாசம் மல்கு தண்டுழாயின் வதரி வணங்குதுமே.

9) புலன்கள் நைய மெய்யில் மூத்துப் போந்திருந்து உள்ளம் எள்கி
கலங்க ஐக்கள் போதவுந்திக் கண்ட பிதற்றாமுன்
அலங்கலாய தண்டுழாய் கொண்டு ஆயிரநாமம் சொல்லி
வலங்கொள் தொண்டர் பாடியாடும் வதரி வணங்குதுமே.

10) வண்டு தண் தேன் உண்டு வாழும் வதரி நெடுமாலை
கண்டல் வேலி மங்கை வேந்தன் கலியன் ஒலிமாலை
கொண்டு தொண்டர் பாடியாடக் கூடிடில் நீள் விசும்பில்
அண்டமல்லால் மற்றவர்க்கோர் ஆட்சி அறியோமே.

திருச்சந்தவிருத்தம் - திருமழிசையாழ்வார் (101)

இரந்துரைப்ப துண்டு வாழி ஏமநீர் நிறத்தமா
வரந்தருந்திருக் குறிப்பில் வைத்ததாகி மன்னுசீர்
பரந்த சிந்தை ஒன்றி நின்று நின்ன பாத பங்கயம்
நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்க வேண்டுமே.

(6) உறங்கும் போது சொல்ல வேண்டியவை :-

ப்ரம்ஹாணம் சங்கரம் விஷ்ணும் யமம் ராமம் தனும் பலிம்
ஸப்தைதான் யः ஸ்மரேந் நித்யம் துஸ் ஸ்வப்னஸ்தஸ்ய கச்யதி

Public domain. Digitization Muthulakshmi Research Acade

(பிரமன், சிவன், விஷ்ணு, யமன், இராமன், கயன், மஹாபலி, ஆகிய இந்த எழுவரையும் தினமும் நினைப் பவர்க்குக் கெட்ட கனவுகள் தோன்ற மாட்டா)

திருவிசைப்பா : திருமாளிகைத்தேவர்

தனதன் நற்றோழா! சங்கரா! சூலபாணியே! தாணுவே! சிவனே!
கனக நற்றூணே! கற்பகக் கொழுந்தே! கண்கள் மூன்று
உடையதோர் கரும்பே!
அனகனே! குமர விநாயக! சனக! அம்பலத்து அமர சேகரனே!
உன் கழல் இணை என் நெஞ்சினுள் இனிதாக் கொண்டனேன்
நுகருமா நுகரே.

சாற்றுமுறை:

ஊழிதோறும் ஊழிதோறும் உலகம் உய்ய
உம்பர்களும் கேட்டுய்ய அன்பினாலே
வாழியெனும் பூதம் பேய் பொய்கை மாறன்
மழிசையர் கோன் பட்டர் பிரான் மங்கை வேந்தன்
கோழியர் கோன் தொண்டர் துகள் பாணன் கோதை
குலமுனிவன் கூறிய நூல் ஓதியோதி
வாழியென வருந்திரளை வாழ்த்துவார் தம்
மலரடி என் சென்னிக்கு மலர்ந்ததுவே.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

III

(1) கல்வியில் தேர்ச்சிபெற - அறிவாற்றல், நினை வாற்றல் பெருக

குரவே ஸர்வ லோகாநாம் பிஷஜே பவரோகிணாம்
நிதயே ஸர்வ வித்யாநாம் தக்ஷிணா மூர்த்தயே நமஃ

(எவ்வுலகிற்கும் குரு, ஸம்ஸார நோய்க்கு மருந்து, ஸர்வ வித்யா நிதியுமான தக்ஷிணா மூர்த்திக்கு நமஸ்காரம்)

பாஷ்யாதி ஸர்வ சாஸ்த்ராணி யேசான்யே நியமாஃ ததா
அக்ஷராணி ச ஸர்வாணி த்வந்து தேஷு நமோஸ்துதே ||

(பாஷ்யம் முதலாய எல்லா சாஸ்திர நூல்கள், அவற்றில் உள்ள கட்டுப்பாடுகள், எழுத்துக்கள் எல்லாவற்றிலும் நீரே இருக்கிறீர். உமக்கு வணக்கம்)

ஸரஸ்வதி நமஸ்தேஸ்து வீணா புஸ்தக தாரிணி
ஹம்ஸ வாஹநம் ஆரூடே வித்யாதானம் குருஷ்வமே ||

(வீணையும் புத்தகமும் ஏந்திய சரஸ்வதியே! அன்னத்தின் மீது அமர்ந்திருப்பவளே! உமக்கு வணக்கம். எனக்கு கல்வியறிவைத் தந்தருள்)

ஸரஸ்வதி நமஸ்துப்யம் வரதே காமரூபிணி
வித்யாரம்பம் கரிஷ்யாமி ஸித்தர் பவது மே ஸதா ||

(விரும்பியதை அளிப்பவளே! விரும்பிய வடிவில் தோன்றுபவளே! சரஸ்வதியே! கல்வியைத் தொடங்குகிறேன். அதை எப்போதும் நிறைவுறச் செய்வாய்)

Public domain. Digitization Muthulakshmi Research Acade

யாதேவீ ஸர்வ பூதேஷு ஸ்மருதி ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோநம:

(எல்லா உயிரினங்களிலும் நினைவாற்றலாக உள்ள தேவிக்கு நமஸ்காரம், நமஸ்காரம், நமஸ்காரம்.)

விநாயகர் வணக்கம்:-

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம் செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமது உள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

திருநாவுக்கரசர்:-

நமசிவாயவே ஞானமும் கல்வியும்
நமசிவாயவே நான் அறி விச்சையும்
நமசிவாயவே நா நவின்று ஏத்துமே
நமசிவாயவே நன்னெறி காட்டுமே.

சகலகலா வல்லி மாலை: (குமரகுருபரர்)

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய் பங்கயாசனத்தில்
கூடும் பசும்பொற்கொடியே கனதனக்குன்றும் ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே சகல கலா வல்லியே.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய் வடநூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவின்று
காக்கும் கருணைக் கடலே சகலகலா வல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற்பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிது எய்த நல்காய் எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகலகலா வல்லியே.

பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி நின் கடைக்கண் நல்காய் உளங்கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகலகலா வல்லியே.

சொல்விற்பனமும் அவதானமும் கவி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய் நளினாசனம் சேர்
செல்விக்கு அரிது என்று ஒரு காலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகலகலா வல்லியே.

திருவாய்மொழி : நம்மாழ்வார்.

பொருமா நீள் படை ஆழிசங்கத்தொடு
திருமா நீள் கழல் ஏழுலகும் தொழ
ஒரு மாணிக்குறளாகி நிமிர்ந்த அக்
கருமாணிக்கம் என் கண்ணுளதாகுமே. (1)

Public domain. Digitization Muthulakshmi Research Acade

கண்ணுள்ளே நிற்கும் காதன்மையால் தொழில்
எண்ணிலும் வரும் என் இனி வேண்டுவம்
மண்ணும் நீரும் எரியும் நல்வாயுவும்
விண்ணுமாய் விரியும் எம்பிரானையே. (2)

எம்பிரானை எந்தை தந்தை தந்தைக்கும்
தம்பிரானை தண்டாமரைக் கண்ணனை
கொம்பராவு நுண்ணேரிடை மார்வனை
எம்பிரானைத் தொழாய் மடநெஞ்சமே. (3)

நெஞ்சமே நல்லை நல்லை உன்னைப் பெற்றால்
என்செய்யோம் இனி என்ன குறைவினம்
மைந்தனை மலராள் மணவாளனை
துஞ்சும் போதும் விடாது தொடர்கண்டாய். (4)

கண்டாயே நெஞ்சே கருமங்கள் வாய்க்கின்று ஓர்
எண்டானும் இன்றியே வந்தியலுமாறு
உண்டானை உலகேழும் ஓர் மூவடி
கொண்டானை கண்டு கொண்டனை நீயுமே. (5)

நீயும் நானும் இந்நேர் நிற்கில் மேல் மற்றோர்
நோயும் கார் கொடான் நெஞ்சமே சொன்னேன்
தாயும் தந்தையும் ஆயிவ்வுலகினில்
வாயும் ஈசன் மணிவண்ணன் எந்தையே. (6)

எந்தையே என்றும் எம்பெருமான் என்றும்
சிந்தையுள் வைப்பன் சொல்லுவன் பாவியேன்
எந்தை எம்பெருமான் என்று வானவர்
சிந்தையுள் வைத்துச் சொல்லும் செல்வனையே. (7)

Public domain. Digitization Muthulakshmi Research Academ

செல்வ நாரணன் என்ற சொல் கேட்டலும்
மல்கும் கண்பனி நாடுவன் மாயமே
அல்லும் நண்பகலும் இடை வீடின்றி
நல்கி என்னை விடான் நம்பி நம்பியே. (8)

நம்பியைத் தென்குறுங்குடி நின்ற அச்
செம்பொனே திகழும் திருமூர்த்தியை
உம்பர் மானவர் ஆதியஞ் சோதியை
எம்பிரானை என் சொல்லி மறப்பேனோ. (9)

மறப்பும் ஞானமும் நான் ஒன்றுணர்ந்திலன்
மறக்கும் என்று செந்தாமரைக் கண்ணொடு
மறப்பற என்னுள்ளே மன்னினான் தனை
மறப்பேனோ இனியான் என் மணியையே. (10)

மணியை வானவர் கண்ணனைத் தன்னதோர்
அணியை தென்குருகூர்ச் சடகோபன் சொல்
பணிசெய் ஆயிரத்துள்ளிவை பத்துடன்
தணிவிலர் கற்பரேல் கல்வி வாயுமே. (11)

(2) திருமணம் நடைபெற - நல்ல கணவனை அல்லது மனைவியை அடைய - நற்புத்திரர்களைப் பெற

திருமணம் நடைபெற

ஜநகஸ்ய வச : ச்ருத்வா பாணீன் பாணிபி : அஸ்ப்ருசன்
சத்வாரஸ்தே சதஸ்ரூணாம் வஸிஷ்டஸ்ய மதேஸ்தி தா:

Public domain. Digitization Muthulakshmi Research Academ

(ஜநகருடைய வார்த்தையைக் கேட்டு வசிஷ்டர் உத்திரவுப்படி இராமன் முதலிய நால்வரும் சீதை முதலிய நால்வருடைய கரங்களைப் பற்றினார்கள் - இச்சுலோகத்தைப் பெண்களும் அவர்களுடைய பெற்றோர்களும் நாடொறும் பாராயணம் செய்து வந்தால் சீக்கிரமே திருமணம் நடைபெறும்.)

நல்ல கணவனைப் பெற:

(1) காத்யாயநி மஹாமாயே மஹா யோகிநி அதீச்வரி
ஆயுஷ்மந்தம் ச ஸுகுணம் பதிம் மே குருதே நமः ||

(பெரு மாயை கொண்டவளே! காத்யாயினி தேவி! நீண்ட ஆயுளும் நற்குணங்களும் உள்ளவரை எனக்கு கணவனாக்குவாய். உனக்கு நமஸ்காரம்.)

(2) பதிம் மநோரமம் தேஹி மகோவ்ருத்தாநு ஸாரிணம்
தாரணம் துக்க ஸம்ஸார ஸாகரஸ்ய குலோத்ப்பவம் ||

(தேவி! என் எண்ணத்தையும் ஒழுக்கத்தையும் காத்து, வாழ்க்கையின் கடும் துயரங்களிலிருந்து மீட்கின்ற, நற்குலத்தில் தோன்றிய, மனத்தை ஈர்க்கின்ற கணவனைத் தருவாய்.)

நல்ல மனைவியைப் பெற :

பத்நீம் மநோரமாம் தேஹி மநோ வ்ருத்தா நுஸாரிணீம்
தாரிணீம் துக்க ஸம்ஸார ஸாகரஸ்ய குலோத்ப்பவாம் ||

Public domain. Digitization Muthulakshmi Research Academ

(தேவி! என் எண்ணத்தையும் ஒழுக்கத்தையும் காத்து, வாழ்க்கையின் கடும் துயரங்களிலிருந்து மீட்கின்ற, நற்குலத்தில் தோன்றிய மனத்தை ஈர்க்கின்ற நல்ல மனைவியைத் தருவாய்.)

நற்புத்திரர்களைப் பெற:-

கௌஸல்யா அஜநயத் ராமம் ஸர்வ லக்ஷண ஸம்யுதம்
விஷ்ணோ : அர்த்தம் மஹாபகம் புத்ரம் ஐக்ஷ்வாக
வர்த்தநம் ||

(ஸர்வ லக்ஷணம் பொருந்தியவரும், இக்ஷ்வாகு குலத்தை வாழ்வித்தவரும், விஷ்ணுவின் பாதிபாகமும் பெரும் பாக்யசாலியானவரும் ஆன இராமனை கௌசல்யை பெற்றெடுத்தாள் - இச்சுலோகத்தை தினமும் பாராயணம் செய்து (இயலுமாயின் 108 முறை ஜபித்து) பாயசம் நிவேதனம் இராமருக்குப் படைத்து உண்ண, நற்புத்திரப் பேறு வாய்க்கும்.)

திருமணம் நடைபெற:-

திருமணஞ்சேரி : (திருஞானசம்பந்தர்)

மொழியானை முன்னொரு நான்மறை ஆறங்கம்
பழியாமைப் பண்ணிசையான பகர்வானை
வழியானை வானவர் ஏத்து மணஞ்சேரி
இழியாமை ஏத்த வல்லார்க்கு எய்தும் இன்பமே.

எண்ணானை எண்ணமர்சீர் இமையோர்கட்குக்
கண்ணானைக் கண் ஒரு மூன்று உடையானை

Public domain. Digitization Muthulakshmi Research Acade

மண்ணானை மாவயல் சூழ்ந்த மணஞ்சேரிப்
பெண்ணானைப் பேச நின்றார் பெரியோர்களே.

திருமணஞ்சேரி (திருநாவுக்கரசர்)

பட்ட நெற்றியர் பாய்புலித் தோலினர்
நட்ட நின்று நவில்பவர் நாடொறும்
சிட்டர் வாழ் திருவார் மணஞ்சேரி எம்
வட்டவார் சடையார் வண்ணம் வாழ்த்துமே.

மத்தமும் மதியும் வளர் செஞ்சடை
முத்தர் முக்கணர் மூசுஅரவம் மணி
சித்தர் தீவணர் சீர்மணஞ்சேரி எம்
வித்தர் தாம் விருப்பாரை விருப்பரே.

துள்ளுமான் மறி தூ மழுவாளினர்
வெள்ள நீர் கரந்தார் சடைமேலவர்
அள்ளலார் வயல் சூழ் மணஞ்சேரி எம்
வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே.

திருக்கலயநல்லூர் : (சுந்தரர்)

குரும்பை முலை மலர்க்குழலி கொண்ட தவஞ்கொண்டு
குறிப்பினொடு சென்று அவள்தன் குணத்தினை
நன்கு அறிந்து
விரும்பும் வரம் கொடுத்து அவனை வேட்டு அருளிச் செய்த
விண்ணவர் கோன் கண்ணுதலோன் மேவிய
ஊர் வினவில்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட
அணிமயில்கள் நடமாடும் அணி பொழில்சூழ் அயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளரும் கழனிக்
கமலங்கள் முக மலரும் கலயநல்லூர் காணே.

நற்புத்திரர்களைப் பெற:-

திருவெண்காடு - திருஞானசம்பந்தர்.

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ள நினை (வு)
ஆயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய் வினையார் அவர் தம்மைத் தோயாவாம் தீவினையே.

திருமணம் கைகூட - நற்புத்திரர்களைப் பெற:

ஆண்டாள் நாச்சியார்

வாரணம் ஆயிரம் சூழ வலம் செய்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறம் எங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான் (1)

நாளை வதுவை மணம் என்று நாளிட்டுப்
பாளை கமுகு பரிசுடைப் பந்தற் கீழ்
கோளரி மாதவன் கோவிந்தன் என்பான் ஓர்
காளை புகுதக் கனாக் கண்டேன் தோழீ! நான் (2)

இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாம் எல்லாம்
வந்திருந்து என்னை மகள் பேசி மந்திரித்து

Public domain. Digitization Muthulakshmi Research Acade

மந்திரக் கோடி உடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான் (3)

நால்திசைத் தீர்த்தம் கொணர்ந்து நனிநல்கி
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லார் எடுத்தேத்தி
பூப்புனை கண்ணிப் புனிதனோடு என்று அன்னைக்
காப்பு நாண் சூட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான் (4)

கதிரொளி தீபம் கலசமுடன் ஏந்திச்
சதிரிள மங்கையர் தாம் வந்தெதிர் கொள்ள
மதுரையார் மன்னன் அடிநிலை தொட்டெங்கும்
அதிரப் புகுதக் கனாக் கண்டேன் தோழீ! நான் (5)

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரை தாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழீ! நான் (6)

வாய் நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணப் படுத்துப் பரிதி வைத்துக்
காய்சின மாகளிறு அன்னான் என் கைபற்றித்
தீவலம் செய்யக் கனாக் கண்டேன் தோழீ! நான் (7)

இம்மைக்கும் ஏழேழ் பிறப்புக்கும் பற்றாவான்
நம்மை உடையவன் நாராயணன் நம்பி
செம்மை உடைய திருக்கையால் தாள் பற்றி
அம்மி மிதிக்கக் கனாக் கண்டேன் தோழீ! நான் (8)

வரிசிலை வாள்முகத்து என்னைமார் தாம் வந்திட்டு
எரிமுகம் பாரித்து என்னை முன்னே நிறுத்தி

Public domain. Digitization Muthulakshmi Research Academ

அரிமுகன் அச்சுதன் கைம்மேல் என் கை வைத்துப்
பொரிமுகம் தட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான் (9)

குங்குமம் அப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து
மங்கல வீதி வலம் செய்து மண நீர்
அங்கவனோடும் உடன் சென்றங்கானை மேல்
மஞ்சனம் ஆட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான் (10)

ஆயனுக்காகத் தான் கண்ட கனாவினை
வேயர் புகழ் வில்லிபுத்தூர்க் கோன் கோதை சொல்
தூயதமிழ்மாலை ஈரைந்தும் வல்லவர்
வாயுன் நன் மக்களைப் பெற்று மகிழ்வரே. (11)

(3) நல்வாழ்த்து கூறு:-

திருமண வாழ்த்து

ஸர்வ மங்கள மாங்கல்யே சிவே ஸர்வார்த்த ஸாதிகே
சரண்யே த்ரியம்பிகே கௌரி நாராயணி நமோஸ்துதே.

(எல்லா மங்கலப் பொருள்களின் மங்கலத் தன்மையாக இருப்பவளே! சிவனைச் சார்ந்தவளே! எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றுபவளே! அடைக்கலமாக அடையத் தக்கவளே! முக்கண் உள்ளவளே! கௌரி! நாராயணனின் சகோதரியே! உன்னை வணங்குகிறேன்.)

எல்லோரும் நலமாக இருக்க:- (பொது வாழ்த்து)

ஸர்வே பவந்து ஸுகிந : ஸர்வேஸந்து நிராமயா:
ஸர்வே பத்ராணி பச்யந்து மாகச்சித்துஃக்க பாக் பவேத்.

Public domain. Digitization Muthulakshmi Research Acade

(எல்லோரும் சுகமாக இருக்கட்டும். எல்லோரும் ஆரோக்கியமாக இருக்கட்டும். எல்லோரும் நன்மைகளை அடையட்டும். ஒருவருக்கும் துன்பம் நேராதிருக்கட்டும்.)

சீகாழி - திருஞானசம்பந்தர்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணல் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

வண்டார் குழல் அரிவையொடு பிரியா வகைபாகம்
பெண்தான் மிக ஆனான் பிறைச் சென்னிப் பெருமான் ஊர்
தண் தாமரை மலராள் உறை தவளந் நெடுமாடம்
விண் தாங்குவ போலும் மிகு வேணுபுரம் அதுவே.

தென்குரங்காடுதுறை - திருநாவுக்கரசர்.

மணவன்காண் மலையாள் நெடு மங்கலக்
கணவன்காண் கலைஞானிகள் காதல் எண்
குணவன்காண் குரங்காடு துறை தனில்
அணவன்காண் அன்பு செய்யும் அடியார்க்கே.

பெரியாழ்வார்:

(1) பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன் சேவடி செவ்வித்
திருக்காப்பு.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம்
பல்லாண்டு
வடிவாய் நின்ற மார்பினில் வாழ்கின்ற மங்கையும்
பல்லாண்டு
வடிவார் சோதி வலத்து உறையும் சுட ராழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்கும் அப்பாஞ்ச சன்னியமும்
பல்லாண்டே.

(2) அல்வழக்கு ஒன்றுமில்லா அணி கோட்டியர் கோன்
அபிமான துங்கன்
செல்வனைப் போலத் திருமாலே நானும்
உனக்குப் பழவடியேன்
நல்வகையால் நமோ நாராயணா வென்று
நாமம் பல பரவி
பல்வகையாலும் பவித்திரனே உன்னைப்
பல்லாண்டு கூறுவனே.

(4) காரிய சித்தி பெற - இடையூறுகள் விலகி நினைப்பவை நிறைவேற.

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம்
ப்ரஸன்ன வதனம் வந்தே ஸர்வ விக்நோப சாந்தயே |

(வெண்ணிற ஆடை உடுத்தவரும், எங்கும் நீக்கமற நிரம்பியிருப்பவரும், நிலவு போன்ற இனிமையான மேனி நிறம் கொண்டவரும், நான்கு கைகளை உடையவருமான யானை முகத்தோனை - விநாயகரை - எல்லா இடையூறுகளும் நீங்கும் பொருட்டு வணங்குகின்றேன்.)

Public domain. Digitization Muthulakshmi Research Acade

வக்ர துண்ட மஹாகாய ஸூர்யகோடி ஸமப்ரப
அவிக்னம் குருமே தேவ ஸர்வகார்யேஷு ஸாதய |

(வளைந்த துதிக்கையுடையவரே, பெரிய உடலைப் பெற்றவரே, கோடி சூர்யர்களுக்கு ஒப்பாக ஒளி பெற்றவரே, தேவரே, எப்போதும் இடையூறு இல்லாதவாறு செய்து, எல்லாப் பணிகளையும் நிறைவுறச் செய்தருள்வாய்.)

அஸாத்ய ஸாதக ஸ்வாமிந் அஸாத்யம் தவகிம் வத
ராமதூத மஹாபாஹோ மத்கார்யம் ஸாதய ப்ரபோ

(நிறைவேற்ற இயலாததையும் நிறைவு பெறச் செய்பவரே! தலைவ! இராமனின் தூதுவரே! நீண்ட கைகளை உடையவரே! உம்மால் சாதிக்க முடியாதது எது? சொல் பிரபுவே! என் விருப்பத்தை நிறைவேற்றுவீர்.)

திருமழபாடி : திருஞானசம்பந்தர்

தேனுலா மலர்கொண்டு மெய்த்தேவர்கள் சித்தர்கள்
பால்நெய் அஞ்சுடன் ஆட்ட முன்னாடிய பால்வணன்
வான நாடர்கள் கை தொழு மாமழபாடி எம்
கோனை நாடொறும் கும்பிடவே குறிகூடுமே.

திருவையாறு : திருநாவுக்கரசர்

கனத்தகத்துக் கடுசுடராய் நின்றாய் நீயே
கடல் வரை வான் ஆகாயம் ஆனாய் நீயே
தனத்தகத்துத் தலை கலனாகக் கொண்டாய் நீயே
சார்ந்தாரைத் தகைந்து ஆளவல்லாய் நீயே

Public domain. Digitization Muthulakshmi Research Academ

மனத்து இருந்த கருத்து அறிந்து முடிப்பாய் நீயே
மலர்ச் சேவ்டி எம்மேல் வைத்தாய் நீயே
சினத்து இருந்த திருநீலகண்டன் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதீ

கம்பராமாயணம்:

நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழும் உண்டாம்
வீடியல் வழியதாக்கும் வேரிஅம் கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட்டு அழிய வாகை
சூடிய சிலை இராமன் தோள்வலி கூறுவோர்க்கே.

(5) மழை பெய்து வளம் பெருக:

காலே வர்ஷது பர்ஜந்ய : ப்ருதிவீ ஸஸ்ய சாலிநீ
தேசோயம் க்ஷோ பரஹித : மாநவா : ஸந்து நிர்ப்பயா ||

(தக்க சமயத்தில் மழை பொழியட்டும்; அதனால் பயிர்கள் நன்கு செழிக்கட்டும்; இந்த தேசம் செழிப்படையட்டும்; மக்கள் பயமின்றி வாழட்டும்.)

திருவையாறு : திருஞானசம்பந்தர்

(மேகராகக் குறிஞ்சியில் அமைந்துள்ள இப்பதிகத்தை மனம் ஒன்றிப் பாராயணம் செய்தால் மழை பெய்யும்)

புலன்ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவுஅழிந்திட்டு ஐம்மேல்உந்தி

Public domain. Digitization Muthulakshmi Research Acade

அலமந்த போதாக அஞ்சேல் என்று
அருள்செய்வான் அமரும் கோயில்
வலம் வந்த மடவார்கள் நடம் ஆட
முழவு அதிர மழை என்று அஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரம் ஏறி
முகில் பார்க்கும் திருவையாறே. (1)

விடமேறு படநாகம் அரைக்கசைத்து
வெற்பரையன் பாவையோடும்
அடலேறு ஒன்று அதுஏறி அம்சொலீர்
பலி என்னும் அடிகள் கோயில்
கடலேறித் திரை மோதிக் காவிரியின்
உடன் வந்து கங்குல் வைகித்
திடலேறிச் சுரி சங்கம் செழு முத்தாங்கு
ஈன்றலைக்கும் திருவையாறே. (2)

கங்காளர் கயிலாயமலையாளர்
கானப் பேராளர் மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர்
விடையாளர் பயிலும் கோயில்
கொங்காளப் பொழில் நுழைந்து கூர் வாயால்
இறகுலர்த்திக் கூதல் நீங்கிச்
செங்கானல் வெண்குருகு பைங்கானல்
இரை தேரும் திருவையாறே. (3)

ஊன் பாயுமுடைதலை கொண்டூரின்
பலிக்கு உழல்வார் உமையாள் பங்கர்
தான் பாயும் விடையேறும் சங்கரனார்
தழல் உருவர் தங்கும் கோயில்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

மான்பாய வயல் அருகே மரம் ஏறி
மந்திபாய் மடுக்கள் தோறும்
தேன்பாய மீன்பாயச் செழுங்கமல
மொட்டு அலரும் திருவையாறே. (4)

நீரோடு கூவிளமு(ம்) நிலா மதியும்
வெள்எருக்கு நிறைந்த கொன்றைத்
தாரோடு தண் கரந்தை சடைக்கு அணிந்த
தத்துவனார் தங்கும் கோயில்
காரோடி விசும்பு அளந்து கடி நாறும்
பொழில் அணைந்த கமழ்தார் வீதித்
தேரோடும் அரங்கு ஏறிச் சேயிழையார்
நடம் பயிலும் திருவையாறே. (5)

வேந்தாகி விண்ணவர்க்கு(ம்) மண்ணவர்க்கு(ம்)
நெறிகாட்டும் விகிர்தனாகிப்
பூந்தாம நறுங்கொன்றை சடைக்கு அணிந்த
புண்ணியனார் நண்ணும் கோயில்
காந்தாரம் இசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினார் வீதித்
தேந்தாம் என்று அரங்கேறிச் சேயிழையார்
நடமாடும் திருவையாறே. (6)

நின்றுலா நெடுவிசும்பில் நெருக்கி வரு
புரமூன்று நீள் வாயம்பு
சென்றுலாம்படி தொட்ட சிலையாளி
மலையாளி சேருங் கோயில்

Public domain. Digitization Muthulakshmi Research Acade

குன்றெலாம் குயில் கூவக் கொழும் பிரச
மலர் பாய்ந்து வாசமல்கு
தென்றலார் அடிவருடச் செழுங்கரும்பு
கண்வளரும் திருவையாறே. (7)

அஞ்சாதே கயிலாய மலை எடுத்த
அரக்கர் கோன் தலைகள் பத்தும்
மஞ்சாடு தோள் நெரிய அடர்த்தவனுக்(கு)
அருள்புரிந்த மைந்தர் கோயில்
இஞ்சாயல் இளந்தெங்கின் பழம் வீழ
இளமேதி இரிந்து அங்கோடிச்
செஞ்சாலிக் கதிர் உழக்கிச் செழுங்கமல
வயல்படியும் திருவையாறே. (8)

மேலோடி விசும்பணவி வியன் நிலத்தை
மிக அகழ்ந்து மிக்கு நாடும்
மாலோடு நான்முகனும் அறியாத
வகைநின்றான் மன்னும் கோயில்
கோலோடக் கோல்வளையார் கூத்தாடக்
குவிமுலையார் முக்கத்தினின்று
சேலோடச் சிலையாடச் சேயிழையார்
நடமாடும் திருவையாறே. (9)

குண்டாடு குற்றுடுக்கைச் சமணரொடு
சாக்கியரும் குணம் ஒன்றுஇல்லா
மிண்டொடு மிண்டர் உரை கேளாதே
ஆளாமின் மேவித் தொண்டீர்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

எண்தோளர் முக்கண்ணர் எம் ஈச(ர்)
இறைவர் இனிது அமருங்கோயில்
செண்டாடு புனல்பொன்னிச் செழு மணிகள்
வந்து அலைக்கும் திருவையாறே. (10)

அன்ன(ம்) மலி பொழில் புடைசூழ் ஐயாற்றுஎம்
பெருமானை அந்தண் காழி
மன்னிய சீர் மறை நாவன் வளர்ஞான
சம்பந்தன் மருவு பாடல்
இன்னிசையால் இவை பத்தும் இசையுங்கா(ல்)
ஈசன் அடி ஏத்துவார்கள்
நன்னிசையோடு அமர் உலகில் தவநெறி சென்(று)
எய்துவார் தாழா தன்றே. (11)

திருப்புன்கூர் : சுந்தரர்

வையகம் முற்றும் மாமழை துறந்து
வயலில் நீர் இலை மாநிலம் தருகோம்
உய்யக் கொள்க மற்று எங்களை என்ன
ஒளிகொள் வெண்முகிலாய்ப் பரந்து எங்கும்
பெய்யு மாமழைப் பெருவெள்ளம் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலி கொண்டருளும்
செய்கை கண்டு நின் திருவடி அடைந்தேன்
செழும்பொழில் திருப்புன்கூர் உளானே.

ஆண்டாள் நாச்சியார் : (திருப்பாவை)

ஆழி மழைக்கண்ணா ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள்புக்கு முகந்து கொடு ஆர்த்தேறி

Public domain. Digitization Muthulakshmi Research Acade

ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடை பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரி போல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழை போல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்.

(6) வறுமை நீங்கிச் செல்வம் பெற - வளமான இன்ப வாழ்வு பெற

அலக்ஷ்மீம் ஹரது க்ஷிப்ரம் தம : ஸர்வாப் ப்ரபாயதா
விதநோது மமச்ரேய : த்வத்கலா மயி ஸம்ஸ்த்திதா ||

(லட்சுமி தேவியே! என்னிடமுள்ள ஏழ்மையை - சூரியனின் ஒளி, இருட்டை அகற்றுவது போல - அகற்றி விடுவாய். உன்னிடமுள்ள கலை என்னிடம் பதிந்து எனக்கு உயர்வைத் தரட்டும்.)

கனகதாரா தோத்திரம் : ஆதிசங்கரர்

அங்கம் ஹரே : புளகபூஷண மாச்ரயந்தீ
ப்ருங்காங்க நேவ முகுளாபரணம் தமாலம்
அங்கீக்ருதாகில விபூதிர பாங்கலீலா
மாங்கல்யதாஸ்து மம மங்கள தேவதாயா: (1)

முக்தா முஹுர் விதததீ வதனே முராரே:
ப்ரேம த்ரபா ப்ரணிஹிதானி கதாகதானி
மாலா த்ருசோர் மதுகரீவ மஹோத்பலேயே
ஸாமே ச்ரியம் திசது ஸாகர ஸம்ப வாயா: (2)

Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஆமீலி தாக்ஷ மதிகம்ய முதா முகுந்தம்
ஆனந்த கந்த மநிமேஷ மனங்க தந்த்ரம்
ஆகேகர ஸ்தித கநீநிக பக்ஷ்ம நேத்ரம்
பூத்யை பவேன் மம புஜங்க சயாங்கநாயா: (3)

பாஹ்வந்தரே மதுஜித : ச்ரித கௌஸ்துபே யா
ஹாராவலீவ ஹரிநீலமயீ விபாதி
காமப்ரதா பகவதோ (அ) பி கடாக்ஷ மாலா
கல்யாண மாவஹது மே கமலாலயா யா: (4)

காலாம்புதாளி லலிதோரஸி கைடபாரே:
தாராதரே ஸ்புரதி யா தடிதங்கநேவ
மாது : ஸமஸ்த ஜகதாம் மஹநீய மூர்த்தி:
பத்ராணி மே திசது பார்க்கவ நந்தினாயா: (5)

ப்ராப்தம் பதம் ப்ரதமத : கலுயத் ப்ரபாவாத்
மாங்கல்யபாஜி மதுமாதிநி மன்மதேன
மய்யாபதேத் ததிஹ மந்தர மீக்ஷணார்த்தம்
மந்தாலஸம் ச மகராலய கன்ய காயா: (6)

விச்வாமரேந்த்ர பத விப்ரம தான தக்ஷம்
ஆனந்த ஹேது ரதிகம் முரவித்விஷோ (அ) பி
ஈஷந் நிஷீதது மயி க்ஷண மீக்ஷணார்த்தம்
இந்தீ வரோதர லஹோதர மிந்திராயா: (7)

இஷ்டா விசிஷ்ட மதயோபி யயாதயாரித்ர
த்ருஷ்டயா த்ரிவிஷ்டப பதம் ஸுலபம் லபந்தே
த்ருஷ்டி : ப்ரஹ்ருஷ்ட கமலோதர தீப்திரிஷ்டாம்
புஷ்டிம் க்ருஷீஷ்ட மம புஷ்கர விஷ்டராயா (8)

Public domain. Digitization Muthulakshmi Research Acade

தத்யாத் தயானு பவனோ த்ரவிணாம்புதாராம்
அஸ்மிந் நிகிஞ்சந விஹஸ்க சி சௌ விஷண்ணே
துஷ்கர்ம கர்மமப நீய சிராயதூரம்
நாராயண ப்ரணயிநீ நயநாம்புவாஹ: (9)

கீர்தேவ தேதி கருடத்வஜ ஸுந்தரீதி
சாகம்பரீதி சசிசேகர வல்லபேதி
ஸ்ருஷ்டி ஸ்திதி ப்ரளய கேளிஷு ஸம்ஸ்திதா யா
தஸ்யை நமஸ் த்ரிபுவனைக குரோஸ் தருண்யை (10)

ச்ருத்யை நமோஸ்து சுப கர்ம பலப்ரஸூத்யை
ரத்யை நமோஸ்து ரமணீய குணார்ண வாஸ்ய
சக்த்யை நமோஸ்து சத பத்ர நிகேத நாயை
புஷ்ட்யை நமோஸ்து புருஷோத்தம வல்லபாயை (11)

நமோஸ்து நாளீக நிபான னாயை
நமோஸ்து துக்தோததி ஜன்மபூம்யை
நமோஸ்து ஸோமாம்ருத ஸோதராயை
நமோஸ்து நாராயண வல்லபாயை (12)

நமோஸ்து ஹேமாம்புஜ பீடிகாயை
நமோஸ்து பூமண்டல நாயிகாயை
நமோஸ்து தேவாதி தயாபராயை
நமோஸ்து சார்ங்காயுத வல்லபாயை (13)

நமோஸ்து தேவ்யை ப்ருகு நந்தனாயை
நமோஸ்து விஷ்ணோருரஸி ஸ்த்திதாயை
நமோஸ்து லக்ஷ்ம்யை கமலாலயாயை
நமோஸ்து தாமோதர வல்லபாயை (14)

Public domain. Digitization Muthulakshmi Research Academ

நமோஸ்து காந்த்யை கமலேக்ஷணாயை
நமோஸ்து பூத்யை புவன ப்ர ஸூத்யை
நமோஸ்து தேவாதிரர்ச்சிதாயை
நமோஸ்து நந்தாத் மஜ வல்லபாயை (15)

ஸம்பத்கராணி ஸகலேந்த்ரிய நந்த நாநி
ஸாம்ராஜ்ய தான விபவானி ஸரோருஹாக்ஷி
த்வத்வந்தனாதி துரிதாஹரணோத்ய தானி
மாமேவ மாதரநிசம் கலயந்து மான்யே. (16)

யத்கடாக்ஷ ஸமுபாஸநா விதி:
ஸேவகஸ்ய ஸகலார்த்த ஸம்பத:
ஸந்தநோதி வசநாங்க மானஸை:
த்வாம் முராரி ஹ்ருதயேச்வரீம் பஜே. (17)

ஸரஸிஜ நிலயே ஸரோஜ ஹஸ்தே
தவள தமாம்சுக கந்த மால்ய சோபே
பகவதி ஹரி வல்லபே மனோக்ஞே
த்ரிபுவன பூதிகரி ப்ரஸீத மஹ்யம் (18)

திக்கஸ்திபி : கனக கும்ப முகாவஸ்ருஷ்ட
ஸ்வர் வாஹினீ விமலசாரு ஜலாப் லுதாங்கீம்
ப்ராதர் நவாமி ஜகதாம் ஜனனீ மசேஷ
லோகாதி நாதக்ருஹிணீ மம்ருப்தி புத்ரீம். (19)

கமலே கமலாக்ஷ வல்லபேத்வம்
கருணாபூர தரங்கிதை ரபாங்கை
அவலோகய மாமகிஞ்சநாநாம்
ப்ரதமம் பாத்ர மக்ருத்ரிமம் தயா யா: (20)

Public domain. Digitization Muthulakshmi Research Acade

ஸ்துவந்தி யே ஸ்துதி பிரமீ பிரந்வஹம்
த்ரயீ மயீம் த்ரிபுவந மாதரம் ரமாம்
குணாதிகா குருதர பாக்ய பாகின:
பவந்தி தே புவி புதபாவிதாசயா: (21)

சீகாழி : திருஞானசம்பந்தர்

தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தருவானை, தத்துவனைக்
கன்னடைந்த மதிற் பிரமபுரத்து உறையும் காவனை
முன்னடைந்தான் சம்பந்தன் மொழிபத்தும் இவைவல்லார்
பொன்னடைந்தார் போகங்கள் பல அடைந்தார் புண்ணியரே.

திருமழபாடி : திருஞானசம்பந்தர்

நீடினார் உலகுக்கு உயிராய் நின்றான்
ஆடினான் எரிகானிடை மாநடம்
பாடினார் இசைமா மழபாடியை
நாடினார்க்கு இல்லை நல்குரவானவே.

திருக்கடவூர் மயானம் : திருஞானசம்பந்தர்

பாசமான களைவார் பரிவார்க்கு அமுதம் அனையார்
ஆசை தீரக் கொடுப்பார் அலங்கல் விடைமேல் வருவார்
காசை மலர் போல் மிடற்றார் கடவூர்மயானம் அமர்ந்தார்
பேச வருவார் ஒருவர் அவர் எம்பெருமான் அடிகளே.

திருவேட்களம் : திருநாவுக்கரசர்

நன்று நாடொறும் நம்வினை போயறும்
என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

சென்று நீர் திருவேட்களத்து உள்ளுறை
துன்று பொற்சடையானைத் தொழுமினே.

திருநாரையூர் - திருஞானசம்பந்தர்

தனம்வரு நன்மையாகுந் தகுதிக்குழந்து
வருதிக்குழன் றவுடலின்
இனம் வளர்ஐவர் செய்யும் வினயங்கள் செற்று
நினைவொன்று சிந்தை பெருகும்
முனமொரு கால மூன்று புரம் வெந்து மங்கச்
சரமுன்றெரிந்த அவுணர்
சினமொருகாலழித்த சிவன் மேய செல்வத்
திருநாரையூர் கை தொழவே.

திருவையாறு - திருநாவுக்கரசர்

களித்துக் கலந்த தொர் காதற்கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுது முன்னின்றவிப்பத் தரைக் கோதில்
செந்தேன்
தெளித்துச் சுவையமுதூட்டியமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெருஞ் செல்வம் ஆக்கும் ஐயனாறன்
அடித்தலமே.

அவனென்று நானுன்னை அஞ்சாதேனை
அல்லல் அறுப்பானே என்றேன் நானே
சிவனென்று நானுன்னையெல்லாஞ் சொல்லச்
செல்வந்தருவானே என்றேன் நானே
பவனாகி என்னுள்ளத்துள்ளே நின்று
பண்டை வினையறுப்பாய் என்றேன் நானே

Public domain. Digitization Muthulakshmi Research Academ

அவனென்றே ஆதியே ஐயாறன்னே
என்றென்றே நான் அரற்றி நைகின்றேனே.

கொண்டீச்சரம் - திருநாவுக்கரசர்

வெம்பு நோயும் இடரும் வெறுமையும்
துன்பமும் துயரும் எனும் சூழ்வினை
கொம்பனார் பயில் கொண்டீச்சுரவனை
எம்பிரான் என வல்லவர்க்கு இல்லையே.

திருவானைக்கா - திருநாவுக்கரசர்

நசையானை நால்வேதத்து அப்பாலானை
நல்குரவும் தீப்பிணி நோய் காப்பான் தன்னை
இசையானை எண்ணிறந்த குணத்தான் தன்னை
இடைமருதும் ஈங்கோயும் நீங்காது ஏற்றின்
மிசையானை விரிகடலு(ம்) மண்ணும் விண்ணு(ம்)
மிகுதீயும் புனல் எறி காற்றாகி எட்டுத்
திசையானைத் திருவானைக்காவுளானைச்
செழுநீர்த்திரளைச் சென்றோடினேனே.

திருவாரூர் - சுந்தரர்

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னை எம் பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாம் தவிரப் பணிப்பானை

Public domain. Digitization Muthulakshmi Research Academ

இன்ன தன்மையன் என்று அறியொண்ணா
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற் பழனத்து அணி
ஆரூரானை மறக்கலும் ஆமே.

அபிராமி அந்தாதி:

தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வு அறியா
மனம்தரும் தெய்வவடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக் கண்களே.

திருமங்கையாழ்வார்:

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள் விசும்பு அருளும்
அருளொடு பெரு நிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம்தரு சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

(7) இடர்கள் அகல - துயரங்கள் விலக - நன்மைகள் பெருக - வினைகள் தீர.

கரோது ஸா ந : சுபஹேதுரீச்வரீ
சுபானி பத்ராணி அபிஹந்து ச ஆபத :

Public domain. Digitization Muthulakshmi Research Acade

(எல்லா மங்களுக்கும் காரணப் பொருளான ஈஸ்வரி, நமக்கு மங்களகரமான நன்மைகளை அருளட்டும் - ஆபத்துக் களை அழிக்கட்டும்.)

அச்யுத அச்யுத ஹரே பரமாத்மன்
ராமக்ருஷ்ண புருஷோத்தம விஷ்ணோ
வாஸுதேவ பகவன் அநிருத்த
ஸ்ரீபதே சமய துக்க மசேஷம்.

(அச்யுதனே! மேலான பெருமானே! புருஷோத்தமனே! வாசுதேவனே! மீதமின்றித் துக்கங்கள் அனைத்தையும் வலுவிழக்கச் செய்து காப்பாயாக.)

சீர்காழி : திருஞானசம்பந்தர்

மொய்சேர் வண்டுகள் மும்மத நால்வாய் முரண்வேழக்
கைபோல் வாழை காய் குலை ஈனும் கலிக்காழி
மைசேர் கண்டத்து எண்தோள் முக்கண் மறையோனே
ஐயா என்பார்க்கு அல்லல்களாவன அடையாவே.

திருநல்லூர் - திருஞானசம்பந்தர்

நீத்த நெறியானை நீங்காத் தவத்தானை
நாத்த நெறியானை நல்லூர்ப் பெருமானைக்
காத்த நெறியானைக் கைகூப்பித் தொழு(து)
ஏத்தும் அடியாகட்கு இல்லை இடர்தானே.

கடிக்குளம் - திருஞானசம்பந்தர்

பொங்கு நற்கரியுரியது போர்ப்பது புலியதள் அழல் நாகம்
தங்க மங்கையைப் பாகமது உடையவர் தழல் புரை திருமேனிக்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

கங்கை சேர்தரு சடையினர் கடிக்குளத்துறை தரு கற்பகத்தை
எங்கும் ஏத்தி நின்று இன்புறும் அடியரை இடும்பை வந்து
அடையாவே.

திருநெடுங்களம் - திருஞானசம்பந்தர் (இடர் களையும் பதிகம்)

திருச்சிற்றம்பலம்

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே என்று உனைப் பேசின் அல்லால்
குறையுடையார் குற்றம் ஓராய் கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே. (1)

கனைத்து எழுந்த வெண்திரைசூழ் கடலிடை நஞ்சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில் வைத்த திருந்திய தேவ நின்னை
மனத்தகத்தோர் பாடல் ஆடல் பேணி இராப்பகலும்
நினைத்து எழுவார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே. (2)

நின்அடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத
என் அடியேன் உயிரை வவ்வேல் என்ற அடல் கூற்று உதைத்த
பொன் அடியே பரவி நாளும் பூவொடு நீர் சுமக்கும்
நின் அடியார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே. (3)

மலைபுரிந்த மன்னவன்தன் மகளை ஓர்பால் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கை தங்கும் அவிர்சடை ஆரூரா
தலைபுரிந்த பலி மகிழ்வாய் தலைவ நின்தாள் நிழற் கீழ்
நிலை புரிந்தார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே. (4)

Public domain. Digitization Muthulakshmi Research Acade

பாங்கின் நல்லார் படிமம் செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கி நல்லார் பாடலோடு தொழு கழலே வணங்கித்
தாங்கி நில்லா அன்பினோடுந் தலைவ நின்தாள் நிழற்கீழ்
நீங்கி நில்லார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே. (5)

விருத்தனாகிப் பாலனாகி வேதம் ஓர் நான்கு உணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ் சடைமேற் கரந்தாய்
அருத்தனாய ஆதிதேவன் அடியிணையே பரவும்
நிருத்த கீதர் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே. (6)

கூறுகொண்டார் மூன்றும் ஒன்றாக் கூட்டி ஓர் வெங்கணையால்
மாறுகொண்டார் புரம் எரித்த மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தம் ஈதுஎன்று எம்பெருமான் அணிந்த
நீறுகொண்டார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே. (7)

குன்றின் உச்சிமேல் விளங்கும் கொடிமதில் சூழ் இலங்கை
அன்றி நின்ற அரக்கர் கோனை அருவரைக் கீழ் அடர்த்தாய்
என்று நல்ல வாய்மொழியால் ஏத்தி இராப்பகலும்
நின்று நைவார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே. (8)

வேழ வெண்கொம்பு ஒசித்த மாலும் விளங்கிய நான்முகனும்
சூழஎங்கு(ம்) நேட ஆங்கோர் சோதியுளாகி நின்றாய்
கேழல் வெண் கொம்பு அணிந்த பெம்மான் கேடிலாப் பொன்னடியின்
நீழல் வாழ்வார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே. (9)

வெஞ்சொல் தம்சொல்லாக்கி நின்ற வேடமில்லாச் சமணும்
தஞ்சம் இல்லாச் சாக்கியரும் தத்துவம் ஒன்றறியார்
துஞ்சலில்லா வாய்மொழியால் தோத்திர நின்னடியே
நெஞ்சில் வைப்பார் இடர்களையாய் நெடுங்களம்
மேயவனே. (10)

Public domain. Digitization Muthulakshmi Research Academ

நீடவல்ல வார்சடையான் மேய நெடுங்களத்தைச்
சேடர்வாழும் மாமறுகின் சிரபுரக்கோன் நலத்தால்
நாடவல்ல பனுவல் மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல் பத்தும் பாடவல்லார் பாவம் பறையுமே. (11)

திருச்சிற்றம்பலம்.

கச்சி ஏகம்பம் (காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில்) - திருஞானசம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

வெந்த வெண்பொடிப் பூசுமார்பின் விரிநூல் ஒருபால் பொருந்தக்
கந்த மல்கு குழலியோடுங் கடிபொழிற் கச்சி தன்னுள்
அந்தமில் குணத்தாரவர் போற்ற அணங்கினோடு ஆடல்புரி
எந்தைமேவிய ஏகம்பம் தொழுது ஏத்த இடர்கெடுமே. (1)

வரந்திகழும் அவுணர் மாநகர் மூன்றுடன் மாய்ந்து அவியச்
சரந்துரந்து எரி செய்த தாழ்சடைச் சங்கரன் மேயவிடம்
குருந்த மல்லிகை கோங்கு மாதவி நல்லகுரா மரவம்
திருந்து பைம்பொழிற் கச்சி ஏகம்பரஞ் சேர இடர்கெடுமே. (2)

வண்ணவெண் பொடிப்பூசு மார்பின் வரியரவம் புனைந்து
பெண்ணமர்ந் தெரியாடல் பேணிய பிஞ்ஞகன் மேயவிடம்
விண்ணமர் நெடுமாடம் ஓங்கி விளங்கிய கச்சி தன்னுள்
திண்ணமாம் பொழில் சூழ்ந்த ஏகம்பம் சேர இடர்கெடுமே. (3)

தோலுநூலும் துதைந்த வரைமார்பிற் சுடலை வெண்ணீறணிந்து
காலன் மாள்வுறக் காலாற் காய்ந்த கடவுள் கருதுமிடம்
மாலை வெண்மதி தோயு மாமதிற் கச்சிமா நகருள்
ஏல நாறிய சோலைசூழ் ஏகம்பம் ஏத்த இடர்கெடுமே. (4)

Public domain. Digitization Muthulakshmi Research Acade

தோடணிம் மலர்க்கொன்றை சேர்சடைத்தூ மதியம் புனைந்து
பால் நான்மறையாகப் பல்கணப் பேய்கள் அவைசூழ
வாடல் வெண்தலையோடு அனலேந்தி மகிழ்ந்துடன் ஆடல்புரி
சேடர்சேர் கலிக்கச்சி ஏகம்பர் சேர இடர்கெடுமே. (5)

சாகம் பொன்வரையாத் தானவர் மும்மதில் சாய எய்து
ஆகம் பெண்ணொடு பாகமாக அரவொடு நூலணிந்து
மாகந்தோய் மணிமாட மாமதிற் கச்சிமா நகருள்
ஏகம்பரத்துறை சேவடி ஏத்த இடர்கெடுமே. (6)

(7 ஆவது செய்யுள் கிடைக்கவில்லை)

வான்நிலா மதிபுல்கு செஞ்சடை வாளரவம் அணிந்து
நாணிடத்தினில் வாழ்க்கை பேணி நகுதலையிற் பலிதேர்ந்(து)
ஏணிலா அரக்கன்தன் நீண்முடிபத்தும் இறுத்தவன்ஊர்
சேணுலாம் பொழிற்கச்சி ஏகம்பம் சேர இடர்கெடுமே. (8)

பிரமனும் திருமாலும் கை தொழப் பேரழலாய பெம்மான்
அரவஞ்சேர்சடை அந்தணன் அணங்கினொடு அமருமிடம்
காவில் வண் கையினார்கள் வாழ்கலிக் கச்சிமா நகருள்
மரவம் சூழ்பொழிய ஏகம்பந் தொழ வல்வினை மாய்ந்தறுமே. (9)

குண்டுபட்ட மணாயவரொடுங் கூறைதம் மெய்போர்க்கும்
மிண்டர் கட்டிய கட்டுரை அவை கொண்டு விரும்பேன்மின்
விண்டவர் புரமூன்றும் வெங்கணை யொன்றினால் அவியக்
கண்டவன் கலிக்கச்சி ஏகம்பம் காண இடர்கெடுமே. (10)

ஏரினார் பொழில் சூழ்ந்த கச்சி ஏகம்பம் மேயவனைக்
காரினார் மணிமாடம் ஓங்கு கழுமல நன்னகருள்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

பாரினார் தமிழ் ஞானசம்பந்தன் பதவிய பத்தும்வல்லார்
சீரினார் புகழோங்கி விண்ணவரோடும் சேர்பவரே. (11)

திருச்சிற்றம்பலம்

தேவூர் - திருஞானசம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

பண்ணிலாவிய மொழியுமைபங்கன் எம்பெருமான்
விண்ணில் வானவர்கோன் விமலன் விடையூர்தி
தெண்ணிலா மதிதவழ் தருமாளிகைத் தேவூர்
அண்ணல் சேவடி அடைந்தனம் அல்லல் ஒன்றிலமே. (1)

ஒதி மண்டலத்தோர் முழுதுய்ய வெற்பேறு
சோதி வானவன் துதிசெய மகிழ்ந்தவன் தூநீர்த்
தீதில் பங்கயம் தெரிவையர் முகமலர் தேவூர்
ஆதி சேவடி அடைந்தனம் அல்லல் ஒன்றிலமே. (2)

மறைகளான் மிகவழிபடு மாணியைக் கொல்வான்
கறுவு கொண்ட அக்காலனைக் காய்ந்த வெங்கடவுள்
செறுவில் வாளைகள் சேல் அவை பொருவயல் தேவூர்
அறவன் சேவடி அடைந்தனம் அல்லல் ஒன்றிலமே. (3)

முத்தன் சில்பலிக் கூர்தொறு முறைமுறை திரியும்
பித்தன் செஞ்சடைப் பிஞ்ஞகன் தன் அடியார்கள்
சித்தன் மாளிகை செழுமதி தவழ் பொழில் தேவூர்
அத்தன் சேவடி அடைந்தனம் அல்லல் ஒன்றிலமே. (4)

பாடுவார் இசை பல்பொருட் பயனுகந்து அன்பால்
கூடுவார் துணைக் கொண்ட தம் பற்றறப் பற்றித்

Public domain. Digitization Muthulakshmi Research Acade

தேடுவார் பொருளானவன் செறிபொழில் தேவூர்
ஆடுவான் அடி அடைந்தனம் அல்லல் ஒன்றிலமே. (5)

பொங்கு பூண்முலைப் புரிகுழல் வரிவளைப் பொருப்பின்
மங்கை பங்கினன் கங்கையை வளர்சடை வைத்தான்
திங்கள் சூடிய தீ நிறக்கடவுள் தென் தேவூர்
அங்கணன்தனை அடைந்தனம் அல்லல் ஒன்றிலமே. (6)

வன் புயத்த அத்தானவர் புரங்களை எரியத்
தன் புயத்துறத் தடவரை வளைத்தவன் தக்க
தென் தமிழ்க்கலை தெரிந்தவர் பொருந்திய தேவூர்
அன்பன் சேவடி அடைந்தனம் அல்லல் ஒன்றிலமே. (7)

தருவுயர்ந்த வெற்பெடுத்த அத்தசமுகன் தெரிந்து
வெருவ ஊன்றிய திருவிரல் நெகிழ்த்துவாள் பணித்தான்
தெருவு தோறு நற்றென்றல் வந்துலவிய தேவூர்
அரவு சூடியை அடைந்தனம் அல்லல் ஒன்றிலமே. (8)

முந்திக் கண்ணனு(ம்) நான்முகனும் அவர்காணா
எந்தை திண்டிறல் இருங்களிறுரித்த எம்பெருமான்
செந்தினத் திசையறு பதமுரல் திருத்தேவூர்
அந்தி வண்ணனை அடைந்தனம் அல்லல் ஒன்றிலமே. (9)

பாறு புத்தரும் தவமணி சமணரும் பலநாள்
கூறி வைத்ததோர் குறியினைப் பிழையெனக்கொண்டு
தேறி மிக்க நஞ்செஞ்சடைக்கடவுள் தென்தேவூர்
ஆறு சூடியை அடைந்தனம் அல்லல் ஒன்றிலமே. (10)

அல்லலின்றி விண்ணாள்வர்கள் காழியர்க்கு அதிபன்
நல்ல செந்தமிழ் வல்லவன் ஞானசம்பந்தன்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

எல்லையில் புகழ் மல்கிய எழில் வளர் தேவூர்த்
தொல்லை நம்பனைச் சொல்லிய பத்தும் வல்லாரே. (11)

திருச்சிற்றம்பலம்

வடதிருமுல்லைவாயில் - சுந்தரர் அருளியது

திருச்சிற்றம்பலம்

1. திருவு(ம்) மெய்ப்பொருளும் செல்வமும் எனக்கு உன்
சீருடைக் கழல்கள் என்றெண்ணி
ஒருவரை மதியாது உறாமைகள் செய்து
மூடியும் உறைப்பனாய்த் திரிவேன்
முருகமர் சோலைசூழ் திருமுல்லை வாயிலாய்
வாயினால் உன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர் களையாய்
பாசுபதா பரஞ்சுடரே.

2. கூடிய விலயஞ் சதி பிழையாமைக்
கொடியிடை யுமையவள் காண
ஆடிய அழகா அருமறைப்பொருளே
அங்கணா எங்குற்றாயென்று
தேடிய வானோர் சேர் திருமுல்லை
வாயிலாய் திருப்புகழ் விருப்பால்
பாடிய அடியேன் படுதுயர் களையாய்
பாசுபதா பரஞ்சுடரே.

3. விண்பணிந்து ஏத்தும் வேதியா மாதர்
வெருவிட வேழம் அன்று உரித்தாய்
செண்பகச் சோலைசூழ் திருமுல்லை வாயிலாய்
தேவர்தம் அரசே

Public domain. Digitization Muthulakshmi Research Acade

தண்பொழில் ஒற்றி மாநகர் உடையாய்
சங்கிலிக்கா என் கண் கொண்ட
பண்ப நின் அடியேன் படுதுயர் களையாய்
பாசுபதா பரஞ்சுடரே.

4. பொன்னலங் கழனிப் புதுவிரை மருவிப்
பொறிவரி வண்டிசை பாட
அந்நலங் கமலத் தவிசின் மேல் உறங்கும்
அலவன் வந்துலவிட வள்ளல்
செந்நெலங் கழனி சூழ்திரு முல்லை
வாயிலாய் திருப்புகழ் விருப்பால்
பன்னலந் தமிழாற் பாடுவேற்கு அருளாய்
பாசுபதா பரஞ்சுடரே.

5. சந்தன வேருங் காரகிற் குறடும்
தண் மயிற்பீலியுங் கரியின்
தந்தமும் தரளக் குவைகளும் பவளக்
கொடிகளும் சுமந்து கொண்டுந்தி
வந்திழிபாலி வடகரை முல்லை
வாயிலாய் மாசிலா மணியே
பந்தனை கெடுத்தென் படுதுயர் களையாய்
பாசுபதா பரஞ்சுடரே.

6. மற்றுநான் பெற்ற தார் பெற வல்லார்
வள்ளலே கள்ளமே பேசிக்
குற்றமே செயினுங் குணமெனக் கொள்ளுங்
கொள்கையான் மிகைபல செய்தேன்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

செற்ற மீதோடும் திரிபுர மெரித்த
திருமுல்லை வாயிலாய் அடியேன்
பற்றிலேன் உற்றபடுதுயர் களையாய்
பாசுபதா பரஞ்சுடரே.

7. மணிகெழு செவ்வாய் வெண்ணகைக் கரிய
வார்குழல் மாமயிற்சாயல்
அணி கெழு கொங்கை யங்கயற் கண்ணார்
அருநடம் ஆடல் அறாத
திணி பொழில் தழுவு திருமுல்லைவாயில்
செல்வனே எல்லியும் பகலும்
பணியது செய்வேன் படுதுயர் களையாய்
பாசுபதா பரஞ்சுடரே.

8. நம்பனே அன்று வெண்ணெய் நல்லூரில்
நாயினேன் தன்னையாட் கொண்ட
சம்புவே உம்பரார் தொழுது ஏத்தும்
தடங்கடல் நஞ்சுண்ட கண்டா
செம்பொன் மாளிகை சூழ் திருமுல்லை வாயில்
தேடியான் திரிதர்வேன் கண்ட
பைம்பொனே அடியேன் படுதுயர் களையாய்
பாசுபதா பரஞ்சுடரே.

9. மட்டுலா மலர் கொண்டு அடியிணை வணங்கும்
மாணிதன் மேன் மதியாதே
கட்டுவான் வந்த காலனை மாளக்
காலினால் ஆருயிர் செகுத்த

Public domain. Digitization Muthulakshmi Research Academ

சிட்டனே செல்வத் திருமுல்லை வாயிற்
செல்வனே செழு மறை பகர்ந்த
பட்டனே அடியேன் படுதுயர் களையாய்
பாசுபதா பரஞ்சுடரே.

10. சொல்லரும் புகழான் தொண்டைமான் களிற்றைச்
சூழ்கொடி முல்லையாற் கட்டிட்டு
எல்லையில் இன்பம் அவன் பெற வெளிப்பட்டு
அருளிய இறைவனே என்றும்
நல்லவர் பரவும் திருமுல்லை வாயில்
நாதனே நரைவிடை யேறீ
பல்கலைப் பொருளே படுதுயர் களையாய்
பாசுபதா பரஞ்சுடரே.

11. விரைதரு மலர் மேல் அயனொடு மாலும்
வெருவிட நீண்ட எம்மானைத்
திரைதரு புனல் சூழ்திருமுல்லை வாயிற்
செல்வனே நாவலாரூரன்
உரைதரு மாலையோர் அஞ்சினோடு அஞ்சும்
உள் குளிர்ந்தேத்த வல்லார்கள்
நரைதிரை மூப்பு நடலையுமின்றி
நண்ணுவர் விண்ணவர்க்கு அரசே.

திருச்சிற்றம்பலம்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

மாகறல் - திருஞானசம்பந்தர் (வினை நீங்கு பதிகம்)

திருச்சிற்றம்பலம்

1. விங்கு விளை கழனிமிகு கடைசியர்கள்
பாடல் விளையாடல் அரவம்
மங்குலொடு நீள்கொடிகள் மாடம்மலி
நீடுபொழில் மாகறல் உளான்
கொங்கு விரி கொன்றையொடு கங்கை வளர்
திங்கள் அணி செஞ்சடையினான்
செங்கண் விடை அண்ணல் அடி சேர்பவர்கள்
தீவினைகள் தீரும் உடனே.

2. கலையின் ஒலி மங்கையர்கள் பாடல் ஒலி
ஆடல் கவின் எய்தி அழகு ஆர்
மலையின் நிகர் மாடம் உயர் நீள்கொடிகள்
வீசும் மலி மாகறல் உளான்;
இலையின் மலி வேல் நுனைய சூலம் வலன்
ஏந்தி எரி புன்சடையினுள்
அலைகொள் புனல் ஏந்து பெருமான், அடியை
ஏத்த வினை அகலும் மிகவே.

3. காலையொடு துந்துபிகள் சங்கு, குழல்
யாழ், முழவு காமருவு சீர்
மாலை வழி பாடுசெய்து மாதவர்கள்
ஏத்தி மகிழ் மாகறல் உளான்
தோலை உடை பேணி அதன் மேல் ஓர்சுடர்
நாகம் அசையா அழகிதாப்
பாலை அன நீறுபுனை வான், அடியை
ஏத்த வினை பறையும் உடனே.

Public domain. Digitization Muthulakshmi Research Acade

4. இங்கு கதிர் முத்தினொடு பொன்மணிகள்
உந்தி எழில் மெய்யுள் உடனே
மங்கையரும் மைந்தர்களும் மன்னுபுனல்
ஆடி மகிழ் மாகறல் உளான்
கொங்கு வளர் கொன்றை குளிர் திங்கள் அணி
செஞ்சடையினன் அடியையே
நுங்கள் வினை தீரமிக ஏத்தி வழி
பாடு நுகரா எழுமினே.

5. துஞ்சு நறு நீலம் இருள் நீங்க ஒளி
தோன்றும் மது வார் கழனிவாய்,
மஞ்சுமலி பூம்பொழிலில் மயில்கள் நடம்
ஆடல் மலி மாகறல் உளான்;
வஞ்சமத யானைஉரி போர்த்து மகிழ்
வான் ஓர் மழுவாளன் வளரும்
நஞ்சம் இருள் கண்டம் உடை நாதன் அடி
யாரை நலியா வினைகளே.

6. மன்னும் மறை யோர்களொடு பல்படிம
மாதவர்கள் கூடி உடன் ஆய்
இன்ன வகையால் இனிது இறைஞ்சி, இமையோரில்
எழு மாகறல் உளான்
மின்னை விரி புன்சடையின் மேல் மலர்கள்
கங்கையொடு திங்கள் எனவே
உன்னுமவர் தொல் வினைகள் ஒல்க உயர்
வான் உலகம் ஏறல் எளிதே.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

7. வெய்யவினை நெறிகள் செல வந்துஅணையும்
மேல் வினைகள் வீட்டல் உறுவீர்,
மைகொள் விரி கானல் மது வார்கழனி
மாகறல் உளான் எழில் அது ஆர்
கையகரி கால் வரையில் மேலது உரிதோல்
உடையமேனி அழகு ஆர்
ஐயன்அடி சேர்பவரை அஞ்சி அடையா
வினைகள் அகலும் மிகவே.

8. தூசு துகில் நீள்கொடிகள் மேகமொடு
தோய்வன பொன் மாடமிசையே
மாசுபடு செய்கை மிக மாதவர்கள்
ஒதிமலி மாகறல் உளான்
பாசுபத இச்சை வரி நச்சு அரவு
கச்சை உடை பேணி அழகுஆர்
பூசுபொடி ஈசன் என ஏத்தவினை
நிற்றல் இல, போகும் உடனே.

9. தூய விரிதாமரைகள் நெய்தல் கழு
நீர் குவளை தோன்ற மது உண்
பாய வரி வண்டுபல பண்முரலும்
ஓசைபயில் மாகறல் உளான்
சாயவிரல் ஊன்றிய இராவணன்
தன்மை கெட நின்ற பெருமான்
ஆயபுகழ் ஏத்தும் அடியார்கள் வினை
ஆயினவும் அகல்வது எளிதே.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

10. காலின் நல பைங்கழல்கள் நீள்முடியின்
மேல் உணர்வு காமுறவினார்
மாலும் மலரானும் அறியாமை எரி
ஆகி உயர் மாகறல் உளான்
நாலும் எரிதோலும் உரி மா மணியே
நாகமொடு கூடி உடனாய்
ஆலும் விடை ஊர்திஉடை அடிகள்
அடியாரை அடையா வினைகளே.

11. கடைகொள் நெடுமாடம் மிக ஓங்கு கமழ்
வீதிமலி காழியர்கோன்
அடையும் வகையால் பரவி அரனை அடி
கூடு சம்பந்தன் உரையால்
படைகொள் புனலொடு வயல்கூடு பொழில்
மாகறல் உளான் அடியையே
உடைய தமிழ் பத்தும் உணர்வார் அவர்கள்
தொல்வினைகள் ஒல்கும் உடனே.

திருச்சிற்றம்பலம்

சீகாழி - திருஞானசம்பந்தர்

எண்ணார் முத்தம் ஈன்று மரகதம் போல் காய்த்துக்
கண்ணார் கமுகு பவளம் பழுக்கும் கலிக்காழிப்
பெண்ணொர் பாகா பித்தா பிரானே என்பார்க்கு
நண்ணா வினைகள் நாடொறும் இன்பம் நணுகும்மே.

மலையார் மாட நீடுயர் இஞ்சி மஞ்சாருங்
கலையார் மதியம் சேர்தருமந்தண் கலிக்காழிக்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

தலைவா, சமணர் சாக்கியர்க்கு என்றும் அறிவொண்ணா
நிலையா, என்னத் தொல் வினையாய நில்லாவே.

திருப்புள்ளமங்கை (பசுபதிகோயில்) - திருஞானசம்பந்தர்

பாலுந்துறு திரளாயின பரமன் பிரமன்தான்
போலும் திறலவர் வாழ்தரு பொழில்சூழ் புளமங்கைக்
காலன் திறல் அறச் சாடிய கடவுள் இடம் கருதில்
ஆலந்துறை தொழுவார்தமை அடையா வினைகளே.

எருக்கத்தம்புலியூர் (இராஜேந்திரபட்டணம்) - திருஞானசம்பந்தர்

படையார் தருபூதப் பகடார் உரிபோர்வை
உடையான் உமையோடும் உடனாயிடு கங்கைச்
சடையான் எருக்கத்தம்புலியூர்த் தகு கோயில்
விடையான் அடி ஏத்த மேவா வினைதானே.

இலையார் தருசூலப்படை எம்பெருமானாய்
நிலையார் மதில்மூன்று(ம்) நீறாய் விழவெய்த
சிலையான் எருக்கத்தம்புலியூர்த் திகழ்கோயில்
கலையான் அடி ஏத்தக் கருதா வினைதானே.

விண்ணோர் பெருமானே விகிர்தா விடையூர்தீ
பெண்ஆண் அலியாகும் பித்தா பிறைசூடீ
எண்ணார் எருக்கத்தம்புலியூர் உறைகின்ற
அண்ணா என வல்லார்க்கு அடையா வினைதானே.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

திருப்பனந்தாள் - திருஞானசம்பந்தர்

சூழ்தரு வல்வினையும் உடன்தோன்றிய பல்பிணியும்
பாழ்பட வேண்டுதிரேல் மிகஏத்துமின் பாய்புனலும்
போழிள வெண்மதியும் அனல்பொங்கு அரவும் புனைந்த
தாழ்சடையான் பனந்தாள் திருத் தாடகையீச்சரமே.

திருநாகேச்சரம் - திருஞானசம்பந்தர்

பொன்னார் தருமேனியனே புரியும்
மின்னேர் சடையாய் விரை காவிரியின்
நன்னீர் வயல் நாகேச்சர நகரின்
மன்னே என வல்வினை மாய்ந்து அறுமே. (1)

சிறவார் புரமூன்று எரியச்சிலையில்
உறவார் கணை உய்த்தவனே உயரும்
நறவார் பொழில் நாகேச்சர நகருள்
அறவா என வல்வினை ஆசறுமே. (2)

கல்லால் நிழல் மேயவனே கரும்பின்
வில்லான் எழில்மேவ விழித்தவனே
நல்லார் தொழு நாகேச்சர நகரில்
செல்வா என வல்வினை தேய்ந்து அறுமே. (3)

நகுவான் மதியோடு அரவும் புனலும்
தகுவார் சடையின் முடியாய் தளவம்
நகுவார் பொழில் நாகேச்சர நகரில்
பகவா என வல்வினை பற்றறுமே. (4)

Public domain. Digitization Muthulakshmi Research Academ

கலைமான் மறியும் கனலும் மழுவும்
நிலையாகிய கையினனே நிகழும்
நலமாகிய நாகேச்சர நகருள்
தலைவா என வல்வினைதான் அறுமே. (5)

குரையார் கழலாட நடம் குலவி
வரையான் மகள் காண மகிழ்ந்தவனே
நரையார் விடையேறு நாகேச்சரத்துஎம்
அரைசே என நீங்கும் அருந்துயரே. (6)

முடையார் தரு வெண்டலை கொண்டுஉலகில்
கடையார் பலி கொண்டு உழல்காரணனே
நடையார் தரு நாகேச்சர நகருள்
சடையா என வல்வினைதான் அறுமே. (7)

ஓயாத அரக்கன் ஒடிந்து அலற
நீயாரருள் செய்து நிகழ்ந்தவனே
வாயார வழுத்துவர் நாகேச்சரத்
தாயே என வல்வினைதான் அறுமே. (8)

நெடியானொடு நான்முகன் தேடலுறச்
சுடுமால் எரியாய் நிமிர் சோதியனே
நடுமாவயல் நாகேச்சர நகரே
இடமா உறைவாய் என இன்புறுமே. (9)

மலம் பாவிய கையொடு மண்டையதுஉண்
கலம் பாவியர் கட்டுரை விட்டுலகில்
நலம் பாவிய நாகேச்சர நகருள்
சிலம்பா எனத் தீவினை தேய்ந்து அறுமே. (10)

Public domain. Digitization Muthulakshmi Research Academ

கலமார் கடல்சூழ் தரு காழியர்கோன்
தலமார் தரு செந்தமிழின் விரகன்
நலமார் தரு நாகேச்சரத்தானைச்
சொல மாலைகள் சொல்ல நிலாவினையே. (11)

கச்சிஏகம்பம் - (காஞ்சி ஏகாம்பர நாதர்) திருநாவுக்கரசர்

மையினார் மலர் நெடுங்கண் மங்கையோர் பங்கராகிக்
கையிலோர் கபாலம் ஏந்திக் கடைதொறும் பலிகொள்வார்தம்
எய்வதோர் ஏனம் ஒட்டி ஏகம்பம் மேவினாரைக்
கையினால் தொழவல்லார்க்குக் கடுவினை களையலாமே.

திருநல்லம் - (கோனேரி ராஜபுரம்) திருநாவுக்கரசர்

அல்லலாக ஐம்பூதங்கள் ஆட்டினும்
வல்லவாறு சிவாயநம என்று
நல்ல(ம்) மேவிய நாதன் அடிதொழ
வெல்ல வந்த வினைப்பகை வீடுமே.

திருவிடைமருதூர் - திருநாவுக்கரசர்

இம்மை வானவர் செல்வம் விளைந்திடும்
அம்மையேல் பிறவித்துயர் நீத்திடும்
எம்மை ஆளும் இடைமருதன் கழல்
செம்மையே தொழுவார் வினை சிந்துமே.

நீடூர் - திருநாவுக்கரசர்

மாயமாயமனம் கெடுப்பானை, மனத்துளே மதியாய்
இருப்பானைக்
காயமும் ஆக்குவிப்பானைக், காற்றுமாய்க் கனலாய்க்
கழிப்பானை

Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஓயுமாறு உருநோய் புணர்ப்பானை, ஒல்லை
வல்வினைகள் கெடுப்பானை
வேய்கொள்தோள் உமைபாகனை நீடூர், வேந்தனைப்
பணியாவிடலாமே.

கோயில் (சிதம்பரம்) - திருநாவுக்கரசர்

பார்த்திருந்து அடியனேன் நான் பரவுவன் பாடிஆடி
மூர்த்தியே என்பன் உன்னை மூவரின் முதல்வன் என்பன்
ஏத்துவார் இடர்கள் தீர்ப்பாய் தில்லைசிற்றம்பலத்துக்
கூத்தா உன் கூத்துக் காண்பான் கூட நான் வந்தவாறே.

கோட்டூர் - திருநாவுக்கரசர்

துன்றுவளர் சடைத்தூமதி
மத்தமும் துன்னெருக் கார் வன்னி
பொன்றினார் தலைக்கலனொடு
பரிகலம் புலியுரியுடையாடை
கொன்றை பொன்னென மலர் தரு
கோட்டூர் நற்கொழுந்தே என்று எழுவாரை
என்றும் ஏத்துவார்க்கு இடரிலை
கேடிலை ஏதம் வந்து அடையாவே.

கந்தர் அலங்காரம்

கொள்ளித் தலையில் எறும்பது போலக் குலையும் என்தன்
உள்ளத் துயரை ஒழித்து அருளாய், ஒருகோடி முத்தம்
தெள்ளிக் கொழிக்கும் கடல் செந்தில் மேவிய சேவகனே
வள்ளிக்கு வாய்த்தவனே மயிலேறிய மாணிக்கமே.

Public domain. Digitization Muthulakshmi Research Acade

துக்கநிவாரண அஷ்டகம்:

மங்களரூபிணி மதியணி சூலினி மன்மத பாணியளே
சங்கடம் நீங்கிடச் சடுதியில் வந்திடும் சங்கரி சௌந்தரியே
கங்கண பாணியன் கனிமுகம் கண்ட நல் கற்பகக் காமினியே
ஜயஜய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி (1)

கானுறு மலரெனக் கதிரொளி காட்டிக் காத்திட வந்திடுவாள்
தானுறு தவஒளி தாரொளி மதியொளி தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியாள் மாதவர் மொழியாள் மாலைகள் சூடிடுவாள்
ஜயஜய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி (2)

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச் சபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப் பொருந்திட வந்தவளே
எம்குலம் தழைத்திட எழில்வடிவுடனே எழுந்த நல் துர்க்கையளே
ஜயஜய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி (3)

தணதண தந்தண தவில்ஒலி முழங்கிடத் தண்மணி நீ வருவாய்
கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக் கண்மணி நீ வருவாய்
பணபண பம்பண பறையொலி கூவிடப் பன்மணி நீ வருவாய்
ஜயஜய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி (4)

பஞ்சமி பைரவி பார்வத புத்திரி பஞ்சநல் பாணியளே
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேழனைக் கொடுத்த நல்குமரியளே
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்த நல் சக்தி எனும் மாயே
ஜயஜய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி. (5)

எண்ணியபடி நீ அருளிட வருவாய் எம்குலதேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப் பல்கிட அருளிடுவாய்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

கண்ணொளியதனால் கருணையே காட்டிக் கவலைகள் தீர்ப்பவளே
ஜயஜய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி. (6)

இடர்தரும் தொல்லை இனிமேல் இல்லை என்று நீ சொல்லிடுவாய்
சுடர்தரும் அமுதே சுருதிகள் கூறிச் சுகமது தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து பழவினை ஓட்டிடுவாய்
ஜயஜய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி. (7)

ஜயஜய பாலா சாமுண்டீச்வரி ஜயஜய ஸ்ரீதேவி
ஜயஜய துர்க்கா ஸ்ரீபரமேஸ்வரி ஜயஜய ஸ்ரீதேவி
ஜயஜய ஜயந்தி மங்களகாளி ஜயஜய ஸ்ரீதேவி
ஜயஜய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாட்சி. (8)

திருமங்கையாழ்வார்

கண்ணார் கடல்போல் திருமேனி கரியாய்
நண்ணார் முனை வென்றிகொள்வார் மன்னு நாங்கூர்
திண்ணார் மதிள்சூழ் திருவெள்ளக் குளத்துள்
அண்ணா அடியேன் இடரைக் களையாயே. (1)

கொந்தார் துளவ மலர் கொண்டணிவானே
நந்தாத பெரும்புகழ் வேதியர் நாங்கூர்
செந்தாமரை நீர்த்திரு வெள்ளக்குளத்துள்
எந்தாய் அடியேன் இடரைக் களையாயே. (2)

குன்றால் குளிர்மாரி தடுத்து கந்தானே
நன்றாய பெரும்புகழ் வேதியர் நாங்கூர்
சென்றார் வணங்கும் திருவெள்ளக்குளத்துள்
நின்றாய் நெடியாய் அடியேன் இடர்நீக்கே. (3)

Public domain. Digitization Muthulakshmi Research Academ

கானார் கரிகொம்ப தொசித்த களிறே
நானா வகை நல்லவர் மன்னிய நாங்கூர்
தேனார் பொழில் சூழ் திருவெள்ளக் குளத்து(ள்)
ஆனாய் அடியேனுக்கு அருள்புரிவாயே. (4)

வேடார் திருவேங்கடம் மேய விளக்கே
நாடார் புகழ்வேதியர் மன்னிய நாங்கூர்
சேடார் பொழில்சூழ் திருவெள்ளக்குளத்தாய்
பாடா வருவேன் வினையாயின பாற்றே. (5)

கல்லால் கடலை அணைகட்டி உகந்தாய்
கல்லார் பலர் வேதியர் மன்னிய நாங்கூர்ச்
செல்வா திருவெள்ளக் குளத்துறைவானே
எல்லா இடரும் கெடுமாறு அருளாயே. (6)

கோலால் நிரை மேய்த்த எங்கோவலர் கோவே
நாலாகிய வேதியர் மன்னிய நாங்கூர்
சேலார் வயல்சூழ் திருவெள்ளக் குளத்துள்
மாலே என வல்வினை தீர்த்தருள்வாயே. (7)

வாராகமது ஆகியும் மண்ணை இடந்தாய்
நாராயணனே நல்ல வேதியர் நாங்கூர்
சீரார் பொழில்சூழ் திருவெள்ளக் குளத்துள்
ஆராஅமுதே அடியேற்கு அருளாயே. (8)

பூவார் திருமாமகள் புல்கிய மார்பா
நாவார் புகழ் வேதியர் மன்னிய நாங்கூர்த்
தேவா திருவெள்ளக்குளத்துறைவானே
ஆவா அடியான் இவன் என்று அருளாயே. (9)

Public domain. Digitization Muthulakshmi Research Academ

நல்அன்புடை வேதியர் மன்னிய நாங்கூர்ச்
செல்வன் திருவெள்ளக் குளத்துறைவானை
கல்லின் மதிதோள் கலியன் சொன்ன மாலை
வல்லர் என வல்லவர் வானவர் தாமே. (10)

திருவாய்மொழி : நம்மாழ்வார்

களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்
வளைவாய் நேமிப்படையாய் குடந்தைக் கிடந்த மாமாயா
தளரா உடலம் என்னதாவி சரிந்து போம்போது
இளையானே தாள் ஒழுங்கப் பிடித்துப் போக இசை நீயே.

திருவேங்கடம் (திருப்பதி) - குலசேகராழ்வார்.

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியோனே! வேங்கடவா! நின்கோயிலின் வாயில்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்து உன் பவளவாய்க் காண்பேனே.

திருப்பாணாழ்வார்

பாரமாய பழவினை பற்றறுத்து என்னைத்தன்
வாரமாக்கி வைத்தான், வைத்தது அன்றி என்னுள் புகுந்தான்
கோரமாதவம் செய்தனன் கொல், அறியேன் அரங்கத்தம்மான் திரு
ஆர மார்பதன்றோ அடியேனை ஆட்கொண்டதே.

திருமங்கையாழ்வார்

நின்ற வினையும் துயரும் கெட மாமலர் ஏந்தி
சென்று பணிமின் எழுமின் தொழுமின் தொண்டீர்காள்

Public domain. Digitization Muthulakshmi Research Acade

என்றும் இரவும் பகலும் வரிவண்டு இசைபாட
குன்றின் முல்லை மன்றிடை நாறுங் குறுங்குடியே.

8. மனக்கவலை மனச்சோர்வு மனபயம் - சங்கடங்கள் விலகி மன தைரியம், மனஅமைதி பெற:-

ஆபதாம் அபஹர்தாரம் தாதாரம் ஸர்வ ஸம்பதாம்
லோகாபி ராமம் ஸ்ரீராமம் பூயோ பூயோ நமாம் யஹம் ||

(ஆபத்தைப் போக்கி சம்பத்தைத் தருபவரும், அழகானவருமான இராமனைப் பன்முறை வணங்குகிறேன்)

புத்திர் பலம் யசோதைர்யம் நிர்பயத்வம் அரோகதா
அஜாட்யம் வாக்படுத்வம் ச ஹநூமத் ஸ்மரணாத் பவேத் ||

(ஆஞ்சநேயரை மனத்தில் நினைப்பதால் புத்திசக்தி, கீர்த்தி, தைரியம், பயமின்மை, நோயின்மை, சோம்பலின்மை, நாவன்மை முதலியவை அனைத்தும் கிட்டும்)

திருவலிவம் : திருஞானசம்பந்தர்

ஆதியாய நான்முகனும் மாலும் அறிவரிய
சோதியனே நீதியில்லேன் சொல்லுவன் நின்திறமே
ஓதிநாளும் உன்னை ஏத்தும் என்னை வினை அவலம்
வாதியாமே வந்து நல்காய் வலிவலம் மேயவனே.

திருவாசகம் - மாணிக்கவாசகர்

கடையவனேனைக் கருணையினால் கலந்து
ஆண்டுகொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய், விறன்
வேங்கையின் தோல்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

உடையவனே, மன்னும் உத்தர கோச
மங்கைக்கு அரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னைத்
தாங்கிக் கொள்ளே.

பெற்றதுகொண்டு பிழையே பெருக்கிச் சுருக்கும் அன்பின்
வெற்றடியேனை விடுதி கண்டாய் விடிலோ கெடுவேன்
மற்றடியேன் தன்னைத் தாங்குநர் இல்லைஎன் வாழ்முதலே
உற்றடியேன் மிகத் தேறி நின்றேன் எனக்கு உள்ளவனே.

கந்தர் அநுபூதி : அருணகிரிநாதர்

எந்தாயும் எனக்கு அருள் தந்தையும் நீ
சிந்தை ஆகுலமானவை தீர்த்து எனையாள்
கந்தா கதிர்வேலனே உமையாள்
மைந்தா குமரா மறை நாயகனே.

திருச்சந்த விருத்தம் : திருமழிசையாழ்வார்

அச்சம் நோயொடு அல்லல் பல் பிறப்பவாய மூப்பு இவை
வைத்த சிந்தை வைத்த வாக்கை மாற்றி வானில் ஏற்றுவான்
அச்சுதன் அநந்தமூர்த்தி ஆதி அந்தம் இல்லவன்
[illegible]ச்சு நாகணைக் கிடந்த நாதன் வேத கீதனே.

நம்ம[illegible]வார் - மூன்றாம் பத்து - ஆறாந்திருமொழி.

1. மெய்மைக்கும் எனது ஆவிக்கு இன்னமுதத்தினை எனது ஆருயிர்
கெழுமிய கதிர்ச் சோதியை மணிவண்ணனைக் குடக் கூத்தனை
விழுமிய அமரர் முனிவர் விழுங்கும் கன்னல் கனியினை
தொகுமின் தூய மனத்தராய் இறையும் நில்லா துயரங்களே.

Public domain. Digitization Muthulakshmi Research Acade

மூன்றாம் பத்து - பத்தாம் திருமொழி

1. சன்மம் பலபல செய்து வெளிப்பட்டுச் சங்கொடு சக்கரம் வில்
ஒண்மையுடைய உலக்கை ஒள்வாள்தண்டு கொண்டுபுள்ஊர்ந்து உலகில்
வன்மையுடைய அரக்கர் அசுரரை மாளப் படை பொருத
நன்மையுடையவன் சீர்பரவப் பெற்ற நானோர் குறைவிலனே.

2. குறைவில் தடங்கடல் கோளரவேறித் தன் கோலச் செந்தாமரைக் கண்
உறைபவன் போலவோர் யோகு புணர்ந்த ஒளிமணிவண்ணன் கண்ணன்
கறையணி மூக்குடைப் புள்ளைக்கடாவி அசுரரைக் காய்ந்த அம்மான்
நிறைபுகழ் ஏத்தியும் பாடியும் ஆடியும் யான்ஒரு முட்டிலனே.

3. முட்டில் பல் போத்தொரு தனி நாயகன் மூவுலகுக்குரிய
கட்டியைத் தேனை அமுதை நன்பாலைக் கனியை கரும்பு தன்னை
மட்டவிழ் தண்ணந் துழாய் முடியானை வணங்கி அவன் திறத்துப்
பட்டபின்னை இறையாகிலும் யான் என் மனத்துப் பரிவிலனே.

4. பரிவின்றி வாணனைக் காத்தும் என்றன்று படையொடும் வந்தெதிர்ந்த
திரிபுரம் செற்றவனும் மகனும் பின்னும் அங்கியும் போர் தொலைய
பொரு சிறைப்புள்ளைக் கடாவிய மாயனை ஆயனைப் பொற் சக்கரத்(து)
அரியினை அச்சுதனைப் பற்றியான் இறையேனும் இடரிலனே.

5. இடரின்றியே யொருநாள் ஒருபோழ்தில் எல்லாவுலகும் கழிய
படர் புகழ்ப் பார்த்தனும் வைதிகனும் உடன் ஏறத் திண்தேர் கடவி
சுடரொளியாய் நின்ற தன்னுடைச் சோதியில் வைதிகன் பிள்ளைகளை
உடலொடும் கொண்டு கொடுத்தவனைப் பற்றி ஒன்றும் துயர்இலனே.

6. துயரில் சுடரொளி தன்னுடைச் சோதி நின்ற வண்ணம் நிற்கவே
துயரில் மலியும் மனிசர் பிறவியில் தோன்றிக்கண் காண வந்து

Public domain. Digitization Muthulakshmi Research Academ

துயரங்கள் செய்து நன்தெய்வ நிலையுலகில் புகவுய்க்கும் அம்மான்
துயரமில் சீர்க்கண்ணன் மாயன் புகழ் துற்ற யான் ஓர் துன்பம் இலனே.

7. துன்பமும் இன்பமும் ஆகிய செய்வினையாய் உலகங்களுமாய்
இன்பமில் வெந்நரகாகி இனிய நல் வான் சுவர்க்கங்களுமாய்
மன்பல் லுயிர்களுமாகிப் பல பல மாய மயக்குகளால்
இன்புறும் இவ்விளையாட்டுடையானைப் பெற்று ஏதும் அல்லல் இலனே.

8. அல்லல் இல் இன்பம் அறவிறந்து எங்கும் அழகமர் சுழொளியின்
அல்லி மலர்மகள் போக மயக்குகள் ஆகியும் நிற்கும் அம்மான்
எல்லையில் ஞானத்தன் ஞானம் அஃதே கொண்டு எல்லாக் கருமங்களும் செய்
எல்லையில் மாயனைக் கண்ணனைத் தான்பற்றி யான் ஓர் துக்கம் இலனே.

9. துக்கமில் ஞானச் சுடரொளி மூர்த்தி துழாய் அலங்கல் பெருமான்
மிக்கபன் மாயங்களால் விகிர்தம் செய்து வேண்டும் உருவு கொண்டு
நக்கபிரானோடு அயன் முதலாக எல்லாரும் எவையும் தன்னுள்
ஒக்க ஒடுங்க விழுங்க வல்லானைப் பெற்று ஒன்றும் தளர்வுஇலனே.

10. தளர் வின்றியே என்றும் எங்கும் பரந்த தனிமுதல் ஞானமொன்றாய்
அளவுடை ஐம்புலன்கள் அறியாவகையால் அருவாகி நிற்கும்
வளரொளி ஈசனை மூர்த்தியைப் பூதங்கள் ஐந்தை இருசுடரை
கிளரொளி மாயனைக் கண்ணனைத் தாள் பற்றியான் ஒன்றும் கேடிலனே.

9. திருடர் பயம் – பகைவர் பயம் நீங்க.

ஆர்த்தானாம் ஆர்திஹந்தாரம் பீதாநாம் பீதிநாசனம்
த்விஷதாம் காலதண்டம் தம் ராமச்சந்த்ரம் நமாம் யஹம் ||

Public domain. Digitization Muthulakshmi Research Academ

(துக்கப்படுவோரின் துக்கங்களையும், பயப்படுவோரின் பயத்தையும் போக்கி, பகைவருக்கு யம தண்டமாயிருக்கிற இராமனை வணங்குகிறேன்.)

க்ருதவீர்ய ஸுதோராஜா ஸஹஸ்ர புஜமண்டல ः
அவதீர்ணோ ஹரிஸ் ஸாக்ஷாத் பாலயேத் ஸகலம் மம ॥

(ஆயிரம் கைகள் உள்ளவரும், கிருதவீர்யனின் மகனும் அரசனுமாக அவதரித்த நாராயணன் என் பொருள்கள் அனைத்தையும் பாதுகாக்கட்டும்.)

திருடரால் இழந்த பொருள் திரும்பக் கிடைக்கப் பின்வரும் சுலோகத்தைச் சொல்லவும்.

கார்த்த வீர்யார்ஜுநோ நாம ராஜ பாஹீ ஸஹஸ்ரவான்
தஸ்ய ஸம்ஸ்மரணா தேவ ஹ்ருதம் நஷ்டம் ச லப்ப்யதே ॥

(ஆயிரம் கைகளையுடைய அரசர் கார்த்தவீர்யார்ச்சுனன் என்பவரை நினைப்பதால் இழந்த பொருள் திரும்பக் கிடைக்கும்.)

திருநாரையூர் - திருஞானசம்பந்தர்

வேறுயர் வாழ்வு தன்மை வினைதுக்க மிக்க
பகைதீர்க்கும் ஏயவுடலில்
தேறிய சிந்தை வாய்மை தெளிவிக்க நின்ற
கரவைக் கரந்து திகழும்
சேறுயர் பூவின் மேய பெருமானு மற்றைத்
திருமாலும் நேட எரியாய்ச்
சீறிய செம்மையாகுஞ் சிவன் மேய செல்வத்
திருநாரையூர் கை தொழவே.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

திருப்பந்தணை நல்லூர் - திருநாவுக்கரசர்

காடலாற் கருதாதார் கடனஞ்சுண்டார்
களிற்றுரிவை மெய்போர்த்தார் கலனதாக
ஓடலாற் கருதாதார் ஒற்றியூரார்
உறுபிணியும் செறுபகையும் ஒற்றைக் கண்ணால்
பீடுலாந்தனை செய்வார் பிடவம் மொந்தை
குடமுழவங் கொடு கொட்டி குழலுமோங்கப்
பாடலார் ஆடலார் பைங்கண் ஏற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூராரே.

திருச்சாய்க்காடு - திருநாவுக்கரசர்

தோடுலா மலர்கள் தூவித் தொழுதுஎழு மார்க்கண்டேயன்
வீடுநாள் அணுகிற்று என்று மெய் கொள்வான் வந்த காலன்
பாடுதான் செலலும் அஞ்சிப் பாதமே சரணம் என்னச்
சாடினார் காலன் மாயச் சாய்க்காடு மேவினாரே.

திருவெண்காடு - சுந்தரர்.

படங்கொள் நாகம் சென்னி சேர்த்திப் பாய்புலித்தோல் அரையில் வீக்கி
அடங்கலார் ஊர் எரியச் சீறியன்று மூவர்க்கு அருள்புரிந்தீர்
மடங்கலானைச்செற்றுகந்தீர் மனைகள் தோறும் தலை கையேந்தி
விடங்கராகித் திரிவதென்ன வேலைசூழ் வெண்காடனீரே.

வேணுபுரம் - திருஞானசம்பந்தர்

தக்கன் தனசிரம் ஒன்றினை அரிவித்தவன் தனக்கு
மிக்கவ் வரமருள் செய்தஎம் விண்ணோர் பெருமானூர்

Public domain. Digitization Muthulakshmi Research Acade

பக்கம் பல மயிலாடிட மேகம் முழவதிர
மிக்கம் மதுவுண்டார் பொழில் வேணுபுரம் அதுவே.

1. நம்மாழ்வார் - இரண்டாம் பத்து - ஆறாந் திருவாய்மொழி

வைகுந்தா மணிவண்ணனே என்பொல்லாத் திருக்குறளா
என்னுள் மன்னி
வைகும் வைகல் தோறும் அமுதாய வான்ஏறே
செய்குந் தாவரும் தீமை உன் அடியார்க்குத் தீர்த்து
அசுரர்க்குத் தீமைகள்
செய்குந்தா உன்னை நான் பிடித்தேன் கொள் சிக்கெனவே.

2. இரண்டாம் பத்து - ஏழாந்திருவாய்மொழி

எந்தாய் தண்திருவேங்கடத்துள் நின்றாய் இலங்கை
செற்றாய் மராமரம்
பைந்தாள் ஏழுருவ ஒருவாளி கோத்த வில்லா
கொந்தார் தண்ணந் துழாயினாய் அமுதே உன்னை
என்னுள்ளே குழைத்த எம்
மைந்தா வானேறே இனியெங்குப் போகிறதே.

3. இரண்டாம் பத்து - ஒன்பதாந் திருவாய்மொழி

எங்கும் உளன் கண்ணன் என்ற மகனைக் காய்ந்து
இங்கு இல்லையால் என்று இரணியன் தூண்புடைப்ப
அங்கப் பொழுதே அவன் வீயத் தோன்றிய என்
சிங்கப்பிரான் பெருமை யார் ஆயும் சீர்மைத்தே.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

4. மூன்றாம்பத்து - இரண்டாந் திருவாய்மொழி

கொல்லா மாக்கோல் கொலைசெய்து பாரதப்போர்
எல்லாச் சேனையும் இருநிலத்து அவித்த எந்தாய்
பொல்லா ஆக்கையின் புணர்வினை அறுக்கலறா
சொல்லாய் யானுன்னைச் சார்வதோர் சூழ்ச்சியே.

5. மூன்றாம் பத்து - ஆறாந் திருவாய்மொழி

மூவராகிய மூர்த்தியை முதல் மூவர்க்கு முதல்வன் தன்னை
காவமுள்ளன நீக்குவானைத் தடங்கடல் கடந்தான் றன்னைத்
தேவதேவனைத் தென் இலங்கை எரியெழச் செற்ற
வில்லியை
பாவநாசனைப் பங்கயத் தடங்கண்ணனைப் பரவுமினோ.

10. விஷஜ்வரம் - விஷக்கடி - வெப்புநோய் முதலியவை நீங்க.

அச்யுத அநந்த கோவிந்த நாம உச்சாரண பேஷஜாத்
நச்யந்தி ஸகலா ரோகா : ஸ்தயம் ஸ்தயம் வதாமி அஹம் ||

(அச்சுத, அனந்த, கோவிந்த என்ற மூன்று நாமங்களை உச்சரிப்பதாகிய மருந்தினால் எல்லா நோய்களும் நாசமடையும். நான் இதை சத்தியம் என்று சொல்கின்றேன்.)

பாலாம்பிகேச வைத்யேச பவரோகஹரேதி ச
ஜபேந் நாமத்ரயம் நித்யம் மஹாரோக நிவாரணம் ||

Public domain. Digitization Muthulakshmi Research Acade

(பாலாம்பிகே! வைத்யநாத! பவரோகஹர என்ற மூன்று நாமங்களைத் தினமும் ஜபிப்பதால் பெருநோய்களும், இவ்வுலக வாழ்வுப் பிணியும் தீரும்.)

கிரந்தீம் அங்கேப்ய : கிரண நிகுரும்பாம்ருத ரஸம்
ஹ்ருதி த்வா மாதத்தேஹி மகர சிலா மூர்த்திமிவயः
ஸ ஸர்ப்பாணாம் தர்பம் சமயதி சகுந்தாதிப இவ
ஜ்வரப் லுஷ்டான் த்ருஷ்ட்யா ஸுகயதி ஸுதாதார ஸிரயா.

(தேவி! உடலிலிருந்து வெளியாகின்ற பேரொளிக் கதிர்கள் வழியே அம்ருதம் பொழிகின்ற சந்திரகாந்தக் கல்லால் ஆனது போன்ற உன் வடிவை நினைப்பவன்; கொடிய பாம்பின் செருக்கைக் கருடனைப் போல் அடக்குவான். அமுதம் கசியும் பார்வையால் ஜ்வரத்தால் வெந்தவனையும் சுகமுறச் செய்வான்)

திருநீற்றுப்பதிகம் : திருஞானசம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே. (1)

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதம் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப்புனல் வயல் சூழ்ந்த திருவாலவாயான் திருநீறே. (2)

Public domain. Digitization Muthulakshmi Research Academ

முக்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்திதருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவாலவாயான் திருநீறே. (3)

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க்கு எல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவாலவாயான் திருநீறே. (4)

பூச இனியது நீறு புண்ணிமாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத்தோர்களுக்கு எல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தமதாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவாலவாயான் திருநீறே. (5)

அருத்தமாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தமாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவாலவாயான் திருநீறே. (6)

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப்படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தமதாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்து ஆலவாயான் திருநீறே. (7)

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவணமாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவணமாவது நீறு தத்துவம் ஆவது நீறு
அராவணங்குத் திருமேனி ஆலவாயான் திருநீறே. (8)

Public domain. Digitization Muthulakshmi Research Acade

மாலோடு அயன் அறியாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏலவுடம்பிடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு
ஆலமது உண்டமிடற்று எம் ஆலவாயான் திருநீறே. (9)

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமும் கூட
கண்திகைப்பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப்பட்ட பொருளார் ஏத்துந்தகையது நீறு
அண்டத்தவர் பணிந்தேத்தும் ஆலவாயான் திருநீறே. (10)

ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னன் உடல்உற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. (11)

திருச்சிற்றம்பலம்

விஷஜ்ஜுரம் போக்கிய பதிகம் - திருஞானசம்பந்தர் திருநீலகண்டப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்து எம்மைத் தீண்டப்பெறா திருநீலகண்டம். (1)

காவினை இட்டும் குளம்பல தொட்டும் கனி மனத்தால்
ஏவினையால் எயில்மூன்று எரித்தீர் என்று இரு பொழுதும்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாம் அடியோம்
தீவினை வந்து எம்மைத் தீண்டப்பெறா திருநீலகண்டம். (2)

முலைத்தடம் மூழ்கிய போகங்களும் மற்றெவையும் எல்லாம்
விலைத்தலை ஆவணம் கொண்டு எனை ஆண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமும் தண்டும் மழுவும் இவை உடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். (3)

விண்ணுலகு ஆள்கின்ற விச்சாதரர்களும் வேதியரும்
புண்ணியர் என்று இருபோதும் தொழப்படும் புண்ணியரே
கண் இமையாதன மூன்றுடையீர் உம் கழல் அடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். (4)

மற்று இணையில்லா மலை திரண்டன்ன திண்தோள் உடையீர்
இற்றெமை ஆட்கொண்டு கேளாது ஒழிவதும் தன்மை கொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்து உம் திருவடியே அடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். (5)

மறக்கும் மனத்தினை மாற்றி எம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக்கீழ் பிழையாத வண்ணம்
பறித்த மலர் கொடு வந்துமை ஏத்துதும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். (6, 7)

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்தும் கழலடிக்கே
உருகி மலர்கொடு வ்ந்து உமை ஏத்துதும் நாம் அடியோம்
செருவில் அரக்கனைச் சீரில் அடர்ந்து அருள் செய்தவரே
திருஇலித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். (8)

Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாற்ற மலர்மிசை நான்முகன் நாரணன் வாதுசெய்து
தோற்றமுடைய அடியும் முடியும் தொடர்வு அரியீர்
தோற்றினும் தோற்றும் தொழுது வணங்குதும் நாம் அடியோம்
சீற்றமதாம் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். (9)

சாக்கியப்பட்டும் சமண் உருவாகி உடை ஒழிந்தும்
பாக்கியமின்றி இருதலைப் போகமும் பற்றும்விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடையீர் அடி போற்றுகின்றோம்
தீக்குழி தீவினைத் தீண்டப்பெறா திருநீலகண்டம். (10)

பிறந்த பிறவியில் பேணியெஞ் செல்வன் கழல் அடைவான்
இறந்த பிறவி உண்டாகில் இமையவர் கோன் அடிக்கண்
திறம் பயில் ஞானசம்பந்தன செந்தமிழ்ப்பத்தும் வல்லார்
நிறைந்த உலகினில் வானவர் கோனொடும் கூடுவரே. (11)

திருச்சிற்றம்பலம்

ஆர்த்திப் பிரபந்தம்:

உன்தன் அபிமானமே உத்தாரகம் என்று
சிந்தை தெளிந்திருக்கச் செய்த நீ - அந்தோ
எதிராச! நோய்களால் என்னை நலக்காமல்
சதிராக நின்திருத்தாள் தா.

பெருமாள் திருமொழி தனியன் - மணக்கால் நம்பி

ஆரங் கெடப்பரன் அன்பர் கொள்ளார் என்று அவர்களுக்கே
வாரங்கொடு குடப்பாம்பில் கை இட்டவன் மாற்றலரை
வீரங்கெடுத்த செங்கோற் கொல்லி காவலன் வில்லவர்கோன்
சேரன் குலசேகரன் முடிவேந்தர் சிகாமணியே.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

11. கண்நோய் நீங்க - கண்பார்வை தெளிவு பெற

(சூரிய பகவானுடைய இந்நாமங்களை ஜபித்துவரின் (குறிப்பாக ஞாயிற்றுக் கிழமைகளில்) கண் நோய் நீங்கிப் பிரகாசமடையும்)

விகிர்த்தநோ விவஸ்வாம்ச்ச மார்த்தாண்டோ பாஸ்கரோ ரவி:
லோக ப்ரகாசக : ஸ்ரீமான் லோக சக்ஷீர் மஹேச்வர ||

லோக ஸாக்ஷீ த்ரிலோகேச : கர்தா ஹர்தா தமிஸ்ரஹா
தபந : தாபநச் சைவசுசி : ஸப்தாச்வ வாஹன : ||

திருக்கச்சியேகம்பம் : (காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில்) - சுந்தரர். (இடக்கண் பெற்ற பதிகம்)

திருச்சிற்றம்பலம்

ஆலந்தான் உகந்து அமுது செய்தானை, ஆதியை அமரர்
தொழுது ஏத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச், சிந்திப்பார் அவர்
சிந்தையுளானை
ஏலவார்குழலாள் உமை நங்கை, என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
காலகாலனைக் கம்பன் எம்மானைக், காணக்கண் அடியேன்
பெற்றவாறே. (1)

உற்றவர்க்கு உதவும் பெருமானை ஊர்வ(து),
ஒன்றுடையானை உம்பர் கோனை
பற்றினார்க்கு என்றும் பற்றவன் தன்னை, பாவிப்பார் மனம்
பாவிக் கொண்டானை

Public domain. Digitization Muthulakshmi Research Academy

அற்றமில் புகழாள் உமை நங்கை, ஆதரித்து வழிபடப் பெற்ற
கற்றைவார் சடைக்கம்பன் எம்மானைக், காணக்கண்
அடியேன் பெற்றவாறே. (2)

திரியும் முப்புரந் தீப்பிழம்பாகச், செங்கண்மால் விடைமேல்
திகழ்வானைக்
கரியின் ஈருரி போர்த்து கந்தானைக், காமனைக் கனலா விழித்தானை
வரிகொள் வெள்வளையாளுமை, நங்கை மருவி ஏத்தி
வழிபடப் பெற்ற
பெரிய கம்பனை எங்கள் பிரானைக், காணக் கண் அடியேன்
பெற்றவாறே. (3)

குண்டலம் திகழ் காதுடையானைக், கூற்றுதைத்த
கொடுந்தொழிலானை
வண்டலம்பு மலர்க்கொன்றையினானை, வாள் அராமதி
சேர் சடையானை
கெண்டையந்தடம் கண்ணுமை நங்கை, கெழுதி ஏத்தி
வழிபடப் பெற்ற
கண்டம் நஞ்சுடைக் கம்பன் எம்மானைக், காணக் கண்
அடியேன் பெற்றவாறே. (4)

வெல்லும் வெண் மழு ஒன்றுடையானை, வேலை நஞ்சுண்ட
வித்தகன் தன்னை
அல்லல் தீர்த்தருள் செய்ய வல்லானை, அருமறையவை
அங்கம் வல்லானை
எல்லையில் புகழாள் உமை நங்கை, என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
நல்ல கம்பனை எங்கள் பிரானைக், காணக் கண் அடியேன்
பெற்றவாறே. (5)

Public domain. Digitization Muthulakshmi Research Academ

திங்கள் தங்கிய சடையினானைத், தேவதேவனைச்
செழுங்கடல் வளரும்
சங்க வெண்குழைக் காது உடையானைச், சாமவேதம் பெரிது
உகப்பானை,
மங்கை நங்கை மலைமகள் கண்டு, மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
கங்கையாளனைக் கம்பன் எம்மானைக், காணக் கண்
அடியேன் பெற்றவாறே. (6)

விண்ணவர் தொழுதேத்த நின்றானை, வேதம்தான் விரித்தோத
வல்லானை
நண்ணினார்க்கு என்றும் நல்லவன் தன்னை, நாளும் நாம்
உகக்கின்ற பிரானை
எண்ணில் தொல்புகழாள் உமை நங்கை, என்றும் ஏத்தி
வழிபடப் பெற்ற
கண்ணு மூன்றுடைக் கம்பன் எம்மானைக், காணக் கண்
அடியேன் பெற்றவாறே. (7)

சிந்தித்து என்றும் நினைந்து எழுவார்கள், சிந்தையில் திகழும்
சிவன் தன்னைப்
பந்தித்த வினைப் பற்றறுப்பானைப், பாலோடு ஆன்அஞ்சும்
ஆட்டுகந்தானை
அந்தமில் புகழாள் உமை நங்கை, ஆதரித்து வழிபடப் பெற்ற
கந்தவார் சடைக் கம்பன் எம்மானைக், காணக் கண் அடியேன்
பெற்றவாறே. (8)

வரங்கள் பெற்றுழல் வாள்அரக்கர்தம், வாலியபுரம் மூன்று
எரித்தானை
நிரம்பிய தக்கன்தன் பெருவேள்வி, நிரந்தரஞ் செய்த
நிஷ்கண்கனைப்

Public domain. Digitization Muthulakshmi Research Acade

பரந்த தொல்புகழாள் உமை நங்கை, பரவியேத்த
வழிபடப் பெற்ற
கரங்கள் எட்டுடைக் கம்பன் எம்மானைக், காணக் கண்
அடியேன் பெற்றவாறே. (9)

எள்கலின்றி இமையவர் கோனை ஈசனை, வழிபாடு
செய்வாள் போல்
உள்ளத்து உள்கி உகந்து உமை நங்கை, வழிபடச் சென்று
நின்றவா கண்டு
வெள்ளங்காட்டி வெருட்டிட அஞ்சி, வெருவியோடித்
தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக், காணக் கண்
அடியனேன் பெற்றவாறே. (10)

பெற்றம் ஏறுகந்து ஏறவல்லானைப் பெரிய, எம்பெருமான்
என்றெப்போதும்
கற்றவர் பராவப்படுவானைக், காணக்கண் அடியேன் பெற்றதென்று
கொற்றவன் கம்பன் கூத்தன் எம்மானைக், குளிர் பொழில்
திரு நாவலூரன்
நற்றமிழ் இவை ஈரைந்தும் வல்லார், நன்னெறியுலகு
எய்துவர் தாமே. (11)

திருச்சிற்றம்பலம்

1. குலசேகராழ்வார் - பெருமாள் திருமொழி.

இருள் இரியச் சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி
இனத்துத்தி அணிபணம் ஆயிரங்கள் ஆர்ந்த
அரவு அரசப் பெருஞ்சோதி அனந்தன் என்னும்
அணி விளங்கும் உயர் வெள்ளை அணையை மேவி

Public domain. Digitization Muthulakshmi Research Academ

திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னித்
திரைக் கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு என்
கண்இணைகள் என்று கொலோ களிக்கும் நாளே.

2. தேசிகப் பிரபந்தம்:

அத்திகிரி அருளாளப் பெருமாள் வந்தார்
ஆனை பரிதேரின் மேல் அழகர் வந்தார்
கச்சிதனில் கண் கொடுக்கும் பெருமாள் வந்தார்
கருதவரம் தரும் தெய்வப் பெருமாள் வந்தார்
முத்திமழை பொழியு முகில் வண்ணர் வந்தார்
மூலம் என ஓலமிட வல்லார் வந்தார்
உத்தர வேதிக்குள்ளே உதித்தார் வந்தார்
உம்பர் தொழும் கழல் உடையார் வந்தார் தாமே.

12. பேய் - பிசாசு முதலியவற்றால் வரும் துன்பச் சேட்டைகள் விலக

ஸ்கத்தாநே ஹ்ருஷீகேச தவ ப்ரதீர்த்யா
ஜகத் ப்ரஹ்ருஷ்யதி அநுரஜ்யதே ச।
ரக்ஷாம்ஸி பீதாநி திசோ தர்வந்தி
ஸர்வே நமஸ்யந்தி ஹி ஸித்த ஸங்காः ॥

(என் உள்ளத்தையும் இயக்கத்தையும் கட்டுப்படுத்து பவனே! உன் புகழ் பாடுவதால் உலகம் மகிழ்ச்சியடைகிறது; ஒன்றோடொன்று இணைந்து கூடி வாழ்கிறது. இது பொருத்தமே. பேய் பிசாசு முதலியவை பயந்து நான்கு

Public domain. Digitization Muthulakshmi Research Acade

திக்குகளிலும் ஓடுகின்றன. அருளாளர்கள் எல்லோரும் வணங்கி நிற்கின்றனர்.)

திருமங்கலக்குடி : திருஞானசம்பந்தர்

வேள்படுத்திடு கண்ணினன் மேருவில்லாகவே
வாள் அரக்கர் புரம் எரித்தான் மங்கலக்குடி
ஆளும் ஆதிப்பிரான் அடிகள் அடைந்து ஏத்தவே
கோளும் நாள் அவை போய்அறும் குற்றம் இலாதவர்களே.

திருநின்றியூர் : திருஞானசம்பந்தர்

அச்சம்இலர் பாவம்இலர் கேடும்இலர் அடியார்
நிச்சம் உறு நோயும்இலர், தாமும் நின்றியூரில்
நச்சம் மிடறுடையார் நறுங்கொன்றை நயந்தாளும்
பச்சம் உடை அடிகள் திருப்பாதம் பணிவாரே.

திருவானைக்கா : திருநாவுக்கரசர்

துன்பம் இன்றித் துயர் இன்றி என்று(ம்) நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்
என்பொன் ஈசன் இறைவன் என்று உள்குவார்க்(கு)
அன்பன் ஆயிடும் ஆனைக்கா அண்ணலே.

பிரமபுரம் - சுந்தரர்

நினைதரு பாவங்கள் நாசங்களாக நினைந்து முன்
தொழப்பட்ட ஒண் சுடரை
மலைதரு மலைமகள் கணவனை வானோர் மாமணி
மாணிக்கத்தைம் மறைப் பொருளைப்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

புனைதரு புகழினை எங்களது ஒளியை இருவரும்
ஒருவனென்று உணர்வரியவனைக்
கனைதரு கருங்கடல் ஓதம் வந்துலவும்
கழுமலவளநகர்க்கண்டு கொண்டேனே.

பந்தணைநல்லூர் - திருநாவுக்கரசர்.

தொண்டர் தொழுதேற்றும் சோதியேற்றார்,
துளங்கா மணிமுடியார் தூயநீற்றார்
இண்டைச் சடைமுடியார் ஈமஞ்சூழ்ந்த
இடு பிணக்காட்டு ஆடலார் ஏமந்தோறும்
அண்டகத்து அப்புறத்தார் ஆதியானார்
அருக்கனாய் ஆரழலாய் அடியார் மேலைப்
பண்டை வினையறுப்பார் பைங்கண் ஏற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூராரே.

இன்னம்பர் - திருநாவுக்கரசர்

சுணங்கு நின்றார் கொங்கையாள் உமைசூடின தூயலரால்
வணங்கி நின்று உம்பர்கள் வாழ்த்தின மன்னுமறைகள்
தம்மில்
பிணங்கி நின்று இன்னன என்று அறியாதன
பேய்க்கணத்தோ(டு)
இணங்கி நின் றாடின இன்னம் பரான்றன் இணையடியே.

திருவேட்களம் : திருநாவுக்கரசர்

துன்பம் இல்லைத் துயர் இல்லையாம் இனி
நம்பனாகிய நன்மணிகண்டனார்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

என் பொனார் உறை வேட்கள நன்னகர்
இன்பன் சேவடி ஏத்தி இருப்பதே.

(ஸ்ரீசக்கரத்தாழ்வாரை நாடொறும் வலம் வந்து வணங்கினால் சகல பாவங்களும் நீங்கும். பில்லி, சூனியம், ஏவல், பேய், பிசாசு போன்றவை நெருங்கமாட்டா. நோய்கொடிகளும் அணுகா. ஸ்ரீசக்கரத்தாழ்வாரிடம் ஈடுபாடு கொண்ட சுவாமி தூப்புல் வேதாந்ததேசிகர், அப்பெருமான் மீது இயற்றியுள்ள பின்வரும் பாசுரத்தை, இத்துன்பங்கள் விலகப் பாராயாணம் செய்வது உத்தமமானது.)

திகிரி மழுவுயர் குந்தந் தண்டங்குசம் பொறி
சிதறு சதமுக வங்கிவாள் வேலமர்ந்ததும்
தெழி பணில சிலை கண்ணி சீரங்க செவ்விடி
செழிய கதை முசலந்தி சூலந் திகழ்ந்ததும்;
அகில வுலகுகள் கண்டையாம் ஓரலங்கலில்
அடைய வடை விவிலிங்க வாசின்றி நின்றதும்
அடியுமரு கணையுமர வாமென்ன நின்று அடி
யுடையுமடி யரையன் பினால் அஞ்சல் என்பதும்;
மகிழும் அமரர் கணங்கள் வானங்கவர்ந்திட
மலியும் அசுரர் புணர்த்த மாயந்துரந்ததும்
வளருமணி மணிமின்ன வானந்தி கொண்டிட
மறை முறை முறை வணங்க மாறின்றி வென்றதும்
சிகியிரவி மதியமுமிழ் தேசுந்த வெண்டிசைத்
திணி மருள் செகவுகந்து சேமங்கள் செய்ததும்
திகழ் அரவணை அரங்கர் தேசென்ன மன்னிய
திரி சுதரிசனர் செய்ய ஈரெண் புயங்களே.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

13. கடுமையான வயிற்றுவலி முதலியவை நீங்க

"அபஸ்மரா குஷ்ட்ட க்ஷயார்ச : ப்ரமேஹ
ஜ்வரோக் மாத குல்மாதி ரோகா மஹாந்தः ॥
பிசாசச்ச ஸர்வே பவத்பத்ர பூதிம்
விலோக்ய க்ஷணாத் தாரகாரே த்ரவந்தே" : ॥
(ஸ்ரீ ஆதிசங்கரர் - சுப்பிரமணிய புஜங்கம்)

(தாரகாசுரனை வென்ற குமரப்பெருமானே! உன்னுடைய இலை விபூதியின் மகிமையை நான் எவ்வாறு சொல்வேன்? வலி, வலிப்பு, குஷ்டம், க்ஷயம், நீரிழிவு, விஷஜ்வரம், மற்றுமுள்ள கொடிய வியாதிகளும், பூதம் பிசாசு முதலியவற்றின் துன்பங்களும் உன்னுடைய இலை விபூதியைக் கண்டவுடனே விலகிப் போய்விடுமே.)

திருவதிகை : திருநாவுக்கரசர்

(சூலை நோய் நீங்கிய பதிகம்)

திருச்சிற்றம்பலம்

கூற்றாயினவாறு விலக்ககிலீர் கொடுமை பல,
செய்தன நானறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும் பிரியாது, வணங்குவன்
எப்பொழுதும்
தோற்றாது என் வயிற்றின் அகம்படியே, குடரோடு
துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில, வீரட்டானத்துறை
அம்மானே. (1)

Public domain. Digitization Muthulakshmi Research Academy

நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன், நினையாது
ஒருபோதும் இருந்தறியேன்
வஞ்சம் இது ஒப்பது கண்டறியேன், வயிற்றோடு
துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்து என்னை நலிவதனை, நணுகாமல்
துறந்து கரந்துமிடீர்
அஞ்சேலும் என்னீர் அதிகைக் கெடில,
வீரட்டானத்துறை அம்மானே. (2)

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர், படு
வெண்டலையிற் பலி கொண்டுழல்வீர்
துணிந்தே உமக்கு ஆட்செய்து வாழலுற்றால், சுடுகின்றது
சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார் பொடி கொண்டு மெய்பூச வல்லீர், பெற்றம்
ஏற்றுகந்தீர் சுற்றும் வெண்டலைக் கொண்டு
அணிந்தீர் அடிகேள் அதிகைக் கெடில, வீரட்டானத்துறை
அம்மானே. (3)

முன்னம் அடியேன் அறியாமையினால், முனிந்து
என்னை நலிந்து முடக்கியிடப்
பின்னை அடியேன் உமக்கு ஆளும்பட்டேன்,
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னையடைந்தார் வினை தீர்ப்பதன்றோ,
தலையாயவர் தம்கடனாவதுதான்
அன்ன நடையார் அதிகைக் கெடில, வீரட்டானத்துறை
அம்மானே. (4)

காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால், கரைநின்றவர்
கண்டுகொள் என்று சொல்லி

Public domain. Digitization Muthulakshmi Research Academ

நீத்தாய கயம்புக நூக்கியிட நிலைக்கொள்ளும்,
வழித்துறை ஒன்றறியேன்
வார்த்தையிது ஒப்பது கேட்டறியேன், வயிற்றோடு
துடக்கி முடக்கியிட,
ஆர்த்தார் புனலார் அதிகைக் கெடில, வீரட்டானத்துறை
அம்மானே. (5)

சலம்பூவொடு தூப மறிந்தறியேன், தமிழோடிசை
பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன், உன் நாமம்
என் நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையில் பலி கொண்டுழல்வார், உடல்
உள்ளுறு சூலை தவித்தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில, வீரட்டானத்
துறை அம்மானே. (6)

உயர்ந்தேன் மனை வாழ்க்கையும் ஒண்பொருளும், ஒருவர்
தலைகாவல் இலாமையினால்
வயத்தே உமக்கு ஆட்செய்து வாழலுற்றால், வலிக்கின்றது
சூலை தவிர்த்தருளீர்
பயந்தேயென் வயிற்றின் அகம்படியே பறித்துப்,
புரட்டியறுத்தீர்த்திட நான்
அயர்ந்தேன் அடியேன் அதிகைக் கெடில, வீரட்டானத்
துறை அம்மானே. (7)

வலித்தென் மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன், வஞ்சர்
மனம் ஒன்றும் இலாமையினால்
சலித்தால் ஒருவர் துணையாருமில்லைச், சங்கவெண்
குழைக்காதுடை எம்பெருமான்

Public domain. Digitization Muthulakshmi Research Acade

கலித்தே என் வயிற்றின் அகம்படியே, கலக்கி
மலக்கிட்டு கவர்ந்து தின்ன
அலுத்தேன் அடியேன் அதிகைக் கெடில, வீரட்டானத்
துறை அம்மானே. (8)

பொன்போல் மிளிர்வதொர் மேனியினீர், புரிபுன் சடையீர்
மெலியும் பிறையீர்
துன்பே கவலை பிணியென் றிவற்றை, நணுகாமல்
துறந்து கரந்துமிடீர்
என்போலிகள் உம்மை இனித் தெளியார், அடியார்
படுவது இதுவேயாகில்
அன்பே அமையும் அதிகைக் கெடில, வீரட்டானத்துறை
அம்மானே. (9)

போர்த்தாய் அங்கொர் ஆனையின் ஈரிருதோல், புறங்காடு
அரங்கா நடமாடவல்லாய்
ஆர்த்தான் அரக்கன் தனை மால்வரைக்கீழ், அடர்த்
திட்டு அருள் செய்த அது கருதாய்
வோர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால், என்
வேதனையான விலக்கியிடாய்
ஆர்த்தார் புனல் சூழ் அதிகைக் கெடில, வீரட்டானத்
துறை அம்மானே. (10)

திருச்சிற்றம்பலம்

நம்மாழ்வார் - முன்றாம்பத்து இரண்டாம் திருமொழி

1. முந்நீர் ஞாலம் படைத்த எம் முகில்வண்ணனே
அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழியுழல்வேன்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

வெந்நாள் நோய் வீய வினைகளை வேர் அறப்பாய்ந்து
எந்நாள் யான் உன்னை இனி வந்து கூடுவனே.

2. வன்மா வையம் அளந்த எம் வாமனா நின்
பன்மா மாயப் பல்பிறவியில் படிகின்றயான்
தொன்மா வல்வினைத் தொட்கள்ளை முதலரிந்து
நின்மாதாள் சேர்ந்து நிற்பது எஞ்ஞான்று கொலோ.

3. கொல்லா மாக்கோல் கொலை செய்து பாரதப்போர்
எல்லாச் சேனையும் இருநிலத்தவித்த எந்தாய்
பொல்லா ஆக்கையின் புணர்வினை அறுக்கலறா
சொல்லாய் யானுன்னைச் சார்வதோர் சூழ்ச்சியே.

4. சூழ்ச்சி ஞானச் சுட ரொளியாகி என்றும்
ஏழ்ச்சிக் கேடின்றி எங்கணும் நிறைந்த எந்தாய்
தாழ்ச்சி மற்றெங்கும் தவிர்ந்து நின் தாளிணைக் கீழ்
வாழ்ச்சி யான் சேரும் வகையருளாய் வந்தே.

5. வந்தாய் போலே வந்தும் என் மனத்தினை நீ
சிந்தாமல் செய்யாய் இதுவே யிதுவாகில்
கொந்தார் காயாவின் கொழுமலர்த் திருநிறத்த
எந்தாய் யானுன்னை எங்கு வந்து அணுகிற்பனே.

6. கிற்பன் கில்லேன் என்றிலன் முனநாளால்
அற்பாசாரங்கள் அவை சுவைத்த கன்றொழிந்தேன்
பற்பல்லாயிரம் உயிர்செய்த பரமா நின்
நற்பொற் சோதித்தாள் நணுகுவது எஞ்ஞான்றே.

7. எஞ்ஞான்று நாமிருந் திருந்திரங்கி நெஞ்சே
மெய்ஞ்ஞானமின்றி வினையியல் பிறப்பழுந்தி

Public domain. Digitization Muthulakshmi Research Acade

எஞ்ஞான்றும் எங்கும் ஒழிவற நிறைந்து நின்ற
மெய்ஞ்ஞானச் சோதிக் கண்ணனை மேவுதுமே.

8. மேவு துன்ப வினைகளை விடுத்துமிலேன்
ஓவுதலின்றி உன் கழல் வணங்கிற்றிலேன்
பாவு தொல் சீர்க்கண்ணா என் பரஞ்சுடரே
கூவுகின்றேன் காண்பான் எய்கொய்தக் கூவுவனே.

9. கூவிக்கூவிக்கொடு வினைத்தூற்றுன் நின்று
பாவியேன் பலகாலம் வழிதிகைத்து அலமர்கின்றேன்
மேவியன்று ஆநிரை காத்தவன் உலகமெல்லாம்
தாவிய அம்மானை எங்கு இனித் தலைப்பெய்வனே.

10. தலைப் பெய் காலம் நமன்றமர் பாசம் விட்டால்
அலைப்பூண் உண்ணும் அவ் அல்லல் எல்லாம் அகல
கலைப் பல் ஞானத்து என் கண்ணனைக் கண்டு கொண்டு
நிலைப் பெற்று என் நெஞ்சம் பெற்றது நீடுயிரே.

14. கிரகதோஷம் நிவர்த்தியாக

ப்ரஹ்மா முராரிஸ் திரிபுராந்த கச்ச
பானுச் சசீ பூமி ஸுதோ புதச்ச
குருச் ச சுக்ரச் சனி ராஹு கேதவ :
குர்வந்து ஸர்வே மம மங்களா நி.

(பிரம்மா, விஷ்ணு, சிவன், சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது முதலிய அனைவரும் எனக்கு மங்களத்தைச் செய்யட்டும்.)

Public domain. Digitization Muthulakshmi Research Academ

கோளறுபதிகம் : திருஞானசம்பந்தர்

(இப்பதிகம்இந்நூலில்19ஆவதுதலைப்பில்தரப்பட்டுள்ளது.)

கோளிலி : திருஞானசம்பந்தர்

நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே
ஆளாய அன்பு செய்வோ(ம்) மடநெஞ்சே அரன் நாமம்
கேளாய் நம் கிளை கிளைக்கும் கேடுபடாத் திறம் அருளிக்
கோளாய நீக்கும் அவன் கோளிலி எம்பெருமானே.

திருநாகேச்சரம் : திருஞானசம்பந்தர்

காளமேகந் நிறக் காலனோடு அந்தகன் கருடனும்
நீளமாய் நின்று எய்த காமனும் பட்டன நினைவுறின்
நாளுநாதன் நமர்நின்ற நாகேச்சர(ம்) நண்ணுவார்
கோளு(ம்) நாளும் தீயவேனும் நன்குஆம் குறிக்கொண்மினே.

திருமங்கலக்குடி : திருஞானசம்பந்தர்

வேள்படுத்திடு கண்ணினன் மேருவில்லாகவே
வாள் அரக்கர் புரம் எரித்தான் மங்கலக்குடி
ஆளும் ஆதிப்பிரான் அடிகள் அடைந்து ஏத்தவே
கோளு(ம்) நாளும் அவை போயறும் குற்றம் இலார்களே.

திருநள்ளாறு : திருநாவுக்கரசர்

குலம்கெடுத்துக் கோள் நீக்க வல்லான் தன்னைக்
குலவரையன் மடப்பாவை இடப்பாலானை

Public domain. Digitization Muthulakshmi Research Acader

மலங்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ் செஞ்சடையினானைச்
சலம் கெடுத்துத் தயாமூல தன்மம் என்னும்
தத்துவத்தின் வழிநின்று வாழ்ந்தோர்க்கு எல்லாம்
நலம் கொடுக்கும் நம்பியை நள்ளாற்றானை
நான் அடியேன் நினைக்கப் பெற்று உய்ந்தவாறே.

நவக்கிரக தோத்திரம் :

1. சூரியன்:-

காசினி இருளை நீக்கும் கதிரொளியாகி எங்கும்
பூசுரர் உலகோர் போற்றப் பொசிப்புடன் சுகத்தை நல்கும்
வாசி ஏழுடைய தேர்மேல் மகாகிரி வலமாய் வந்த
தேசிகா! எனைரட்சிப்பாய்! செங்கதிரவனே! போற்றி.

காயத்ரி:-

அஸ்வ த்வஜாய வித்மஹே பாசஹஸ்தாய தீமஹி
தன்னோ சூர்ய : ப்ரசோதயாத் ।

2. சந்திரன்:-

அலைகடல் அமுதந்தன்னில் அன்று வந்துதித்து மிக்க
கலைவளர் திங்களாகிக் கடவுளோர்க்கு அமுதம் ஈயும்
சிலைநுதல் உமையாள் பங்கன் செஞ்சடைப் பிறையாய் மேரு
மலை வலமாக வந்த மதியமே! போற்றி! போற்றி!

காயத்ரி:-

பத்ம த்வஜாய வித்மஹே ஹேம ரூபாய தீமஹி
தன்னஸ் ஸோம : ப்ரசோதயாத் ।

Public domain. Digitization Muthulakshmi Research Academ

3. செவ்வாய் (அங்காரகன்)

வசனநல் தைரியந்தான் மன்னவர் சபையில் வார்த்தை
புசபல பராக்ரமங்கள் போர்தனில் வெற்றி ஆண்மை
நிசமுடன் அவரவர்க்கு நீணிலந்தன்னில் நல்கும்
குச நிலமகனாஞ் செவ்வாய் குரைகழல் போற்றி! போற்றி!

காயத்ரி:-

வீர த்வஜாய வித்மஹே விக்ன ஹஸ்தாய தீமஹி
தன்னோ பௌம : ப்ரசோதயாத் ।

4. புதன்

மதனநூல் முதலாவுள்ள மறைகளும் கல்விஞானம்
விதமுடன் அவரவர்க்கு விஞ்ஞைகள் அருள்வோன் திங்கள்
சுதன் பவிசு பாக்கியங்கள் சுகம் பல கொடுக்க வல்லன்
புதன் கவிப் புலவன் சீர்மால் பூங்கழல் போற்றி! போற்றி!

காயத்ரி:-

கஜ த்வஜாய வித்மஹே சுக ஹஸ்தாய தீமஹி
தன்னோ புத : ப்ரசோதயாத் ।

5. வியாழன் (குரு)

மறைமிகு கலைநூல்வல்லோன் வானவர்க்கு அரசன் மந்திரி
நறை சொரி கற்பகப் பொன் நாட்டினுக்கு அதிபனாகி
நிறை தனஞ் சிவிகை மன்றல் நீடுபோகத்தை நல்கும்
இறையவன் குரு வியாழன் இணையடி போற்றி! போற்றி!

Public domain. Digitization Muthulakshmi Research Acade

காயத்ரி:-

வ்ருஷப த்வஜாய வித்மஹே கட்க ஹஸ்தாய தீமஹி
தன்னோ குரு : ப்ரசோதயாத் ।

6. சுக்கிரன் (வெள்ளி)

மூர்க்கவான் சூரன் வாணன் முதலினோர் குருவாய் வையம்
காக்கவான் மழை பெய்விக்கும் கவிமகன் கனகம் ஈவோன்
தீர்க்க வானவர்கள் போற்றச் செத்தவர் தமை எழுப்பும்
பார்க்கவன் சுக்ராச்சாரி பாதபங்கயமே போற்றி!

காயத்ரி:-

அஸ்வ த்வஜாய வித்மஹே தனுர் ஹஸ்தாய தீமஹி
தன்னோ : சுக்ர : ப்ரசோதயாத் ।

7. சனீஸ்வரன்

முனிவர் தேவர் ஏழு மூர்த்திகள் முதலினோர்கள்
மனிதர்கள் சகல வாழ்வுன் மகிமை அல்லால் வேறு உண்டோ?
கனிவுள தெய்வம் நீயே கதிர்சேயே காகம் ஏறும்
சனியனே உனைத்துதிப்பேன் தமியனேற்கு அருள் செய்வாயே.

காயத்ரி:-

காக த்வஜாய வித்மஹே கட்க ஹஸ்தாய தீமஹி
தன்னோ மந்த : ப்ரசோதயாத் ।

8. ராகு

வாகுசேர் நெடுமால் முன்னம் வானவர்க்கு அமுதம் ஈய
ஏகி நீ நடுவிருக்க இருசிரம் அற்று வெய்ய

Public domain. Digitization Muthulakshmi Research Academ

பாகுசேர் மொழியாள் பங்கன் பரன் கையில் சிரமே பெற்ற
ராகுவே! உனைத் துதித்தேன், ரட்சிப்பாய்! ரட்சிப்பாயே!

காயத்ரி:-

நக த்வஜாய வித்மஹே பத்ம ஹஸ்தாய தீமஹி
தன்னோ ராஹு : ப்ரசோதயாத்।

9. கேது

மாதுசேர் நெடுமால் முன்னம் வானவர்க்கு அமுதம் ஈயும்
போதுநீ நடுவிருக்கப் புன்சிரம் அற்றுவெய்யத்
தீதில் சேர் கதிர்விளங்கச் சிவன் கையில் சிரமே பெற்ற
கேதுவே! உனைத்துதித்தேன், கீர்த்தியாய் ரட்சிப்பாயே!

காயத்ரி:-

அஸ்வ த்வஜாய வித்மஹே சூல ஹஸ்தாய தீமஹி
தன்னோ : கேது : ப்ரசோதயாத்।

கந்தர் அலங்காரம்

நாள் என் செயும், வினைதான் என் செயும், எனைநாடி வந்த
கோள் என் செயும், கொடுங்கூற்று என் செயும், குமரேசர் இரு
தாளும், சிலம்பும், சதங்கையும், தண்டையும், சண்முகமும்,
தோளும், கடம்பும், எனக்கு முன்னே வந்து தோன்றிடினே.

தோஷங்கள் - குற்றங்கள் நிவர்த்தியாக

1. நம்மாழ்வார் - இரண்டாம்பத்து - ஆறாம்திருவாய்மொழி

உய்ந்து போந்து என் உவப்பிலாத வெந்தீவினைகளை
நாசஞ்செய்து உன(து)
அந்தமில் அடிமை அடைந்தேன் விடுவேனோ

Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஐந்து பைந்தலையோடு அரவணைமேவிப் பாற்கடல்
யோக நித்திரை
சிந்தை செய்த எந்தாய் உன்னைச் சிந்தை செய்து செய்தே.

2. மூன்றாம் பத்து - ஐந்தாம் திருவாய்மொழி

தீர்ந்த அடியவர் தம்மைத் திருத்திப் பணிகொள்ளவல்ல
ஆர்ந்த புகழ்அச்சுதனை அமரர் பிரானை எம்மானை
வாய்ந்த வளவயல் சூழ் தண் வளங்குருகூர்ச் சடகோபன்
நேர்ந்தவோர் ஆயிரத்து இப்பத்து அருவினை நீறு செய்யுமே.

3. மூன்றாம் பத்து - ஆறாம்திருவாய்மொழி

எழுமைக்கும் எனது ஆவிக்கு இன் அமுதத்தினை
எனது ஆருயிர்
கெழுமிய கதிர்ச் சோதியை மணிவண்ணனைக்
குடக்கூத்தனை
விழுமிய அமரர் முனிவர் விழுங்கும் கன்னல் கனியினை
தொழுமின் தூய மனத்தராய் இறையும் நில்லா துயரங்களே.

4. ஐந்தாம் பத்து - ஒன்பதாம் திருவாய்மொழி

வாரா வருவாய் வருமென் மாயா, மாயா மூர்த்தியாய்
ஆரா அமுதாய் அடியேன் ஆவி அகமே தித்திப்பாய்
தீராவினைகள் தீர என்னை ஆண்டாய், திருக் குடந்தை
ஊரா, உனக்கு ஆட்பட்டும் அடியேன் இன்னம்
உழல்வேனோ.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

5. பத்தாம் பத்து - இரண்டாம் திருவாய்மொழி

ஊரும்புள் கொடியும் அஃதே உலகெல்லாம்
உண்டுமிழ்ந்தான்
சேரும் தண்அனந்தபுரம் சிக்கெனப் புகுதிராகில்
தீரும் நோய் வினைகள் எல்லாம் திண்ணம் நாம் அறியச்
சொன்னோம்
பேரும் ஓராயிரத்துள் ஒன்று நீர் பேசுமினே.

6. துடைத்த கோவிந்தனாரே உலகுயிர்தேவும் மற்றும்
படைத்த எம் பரமமூர்த்தி பாம்பணைப் பள்ளி கொண்டான்
மடைத்தலை வாளை பாயும் வயலணி அனந்தபுரம்
கடைத்தலை சீய்க்கப்பெற்றால் கடுவினை களையலாமே.

7. நாம் உமக்கு அறியச் சொன்ன நாள்களும் நணியவான
சேம நன்குடைத்துக் கண்டீர் செறிபொழில் அனந்தபுரம்
தூம நல்விரைமலர்கள் துவளர ஆய்ந்து கொண்டு
வாமனன் அடிச் சென்று ஏத்த மாய்ந்தறும் வினைகள் தாமே.

15. அடைக்கலம் வேண்டி - ஆபத்திலிருந்து காத்து அருள்புரிய வேண்டி:-

அந்யதா சரணம் நாஸ்தி த்வமேவ சரணம் மம
தஸ்மாத் காருண்ய பாவேந ரக்ஷ ரக்ஷ மஹேச்வர

(இறைவனே! எனக்குப் புகலிடம் இல்லை. நீயே என் புகலிடம். அதனால் பரிவுடன் என்னைக் காப்பாற்றுவாய்.)

கௌரீ வல்லப காமாரே காலகூட விஷாசந
மாம் உத்தீதர ஆபதம் போதே : த்ரிபுரக்ன அந்தகாந்தக.

Public domain. Digitization Muthulakshmi Research Acade

(காமனின் (மன்மதனின்) எதிரியே! காலகூட (ஆலகால) விஷத்தை உண்டவனே! திரிபுரம் அழித்தவனே! யமனுக்கு யமனே! கடல் போன்ற ஆபத்திலிருந்தும் என்னைக் காத்து வெளியேற்றுவாய்.)

ஸுக்ருதம் நக்ருதம் கிஞ்சித்
துஷ்க்ருதம் ச க்ருதம் மயா
கோரே பய நிமக் நோஸ்மி
த்ராஹி மாம் மது ஸூதன.

(நல்லது சிறிதும் செய்தேனில்லை, கெட்டது செய்துள்ளேன். கடும்பயத்தில் ஆழ்ந்துள்ளேன். மதுசூதனா! என்னைக் காப்பாற்று.)

பவாப்தௌ பதிதம் பீதம் அநாதம் தீன மானஸம்
உத்தருத்ய க்ருபயாதேவி நிதேஹி சரணாம்புஜே.

(வாழ்க்கை எனும் ஆழ்கடலில் விழுந்து பயந்து துணையின்றி மனம் சோர்ந்து நிற்கின்ற என்னைக் கரையேற்றி உன் திருவடித் தாமரைகளில் பாதுகாப்புடன் வைத்துக் கொள்வாய்.)

தைவிகா தைவிகாத் நா நாஹ்ஹேது காத் கேவலாத் பயாத்
த்ராஹி மாம் ப்ரணதாபத்தி பஞ்சநே விச்வ லோசநே.

(அடி பணிந்தோரின் துன்பத்தைக் களைபவளே! உலகு அனைத்தையும் நோக்குபவளே! தேவி! விதியால் விளைந்தவையும் மற்றும் பல காரணங்களால் விளைந்தவையுமான பயம் தருபவை அனைத்திலிருந்தும் என்னைக் காப்பாற்றுவாய்.)

Public domain. Digitization Muthulakshmi Research Academ

திருவாவடுதுறை - திருஞானசம்பந்தர்

(இப்பதிகத்தைப் பாடி, திருஞானசம்பந்தர் பொற்கிழியைப் பெற்றார் ஆதலின், இப்பதிகத்தை செல்வம் பெறவேண்டிப் பாராயணம் செய்வதும் வழக்கில் உள்ளது.

இடரினும் தளரினும் எனது உறுநோய்
தொடரினும் உனகழல் தொழுது எழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய தேவனே.
இதுவோ எமை ஆளுமாறு - ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் - ஆவடுதுறை அரனே. (1)

வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உனகழல் விடுவேனலேன்
தாழிளம் தடம் புனல் தயங்கு சென்னிப்
போழிளமதி வைத்த புண்ணியனே.
இதுவோ எமை ஆளுமாறு - ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் - ஆவடுதுறை அரனே. (2)

நனவினும் கனவினும் நம்பா உன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறுங் கொன்றைப் போது அணிந்த
கனல்எரி அனல்புல்கு கையவனே
இதுவோ எமை ஆளுமாறு - ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் - ஆவடுதுறை அரனே. (3)

தும்மலோடு அருந்துயர் தோன்றிடினும்
அம்மலரடி அலால் அரற்றாது என் நா

Public domain. Digitization Muthulakshmi Research Acade

கைமல்கு வரிசிலைக் கணை ஒன்றினால்
மும்மதில் எரியெழ முனிந்தவனே
இதுவோ எமை ஆளுமாறு - ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் - ஆவடுதுறை அரனே. (4)

கையது வீழினும் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தை செய்யேன்
கொய்யணி நறுமலர் குலாய சென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோ எமை ஆளுமாறு - ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் - ஆவடுதுறை அரனே. (5)

வெந்துயர் தோன்றி ஓர்வெருவுறினும்
எந்தாய் உன் அடியலால் ஏத்தாது என் நா
ஐந்தலை அரவு கொண்டு அரைக்கசைத்த
சந்த வெண்பொடியணி சங்கரனே.
இதுவோ எமை ஆளுமாறு - ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் - ஆவடுதுறை அரனே. (6)

வெப்பொடு விரவி ஓர் வினை வரினும்
அப்பா உன் அடியலால் அரற்றாது என் நா
ஒப்புடை ஒருவனை உரு அழிய
அப்படி அழல்எழ விழித்தவனே.
இதுவோ எமை ஆளுமாறு - ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் - ஆவடுதுறை அரனே. (7)

பேரிடர் பெருகி ஓர் பிணிவரினும்
சீருடைக் கழல் அலால் சிந்தை செய்யேன்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஏருடை மணிமுடி இராவணனை
ஆரிடர் பட வரை அடர்த்தவனே
இதுவோ எமை ஆளுமாறு - ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் - ஆவடுதுறை அரனே. (8)

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்
ஒண் மலரடியால் உரையாது என் நா
கண்ணனும் கடிகமழ் தாமரை மேல்
அண்ணலும் அளப்பரிதாயவனே
இதுவோ எமை ஆளுமாறு - ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் - ஆவடுதுறை அரனே. (9)

பித்தொடு மயங்கி ஓர் பிணிவரினும்
அத்தா உன் அடியலால் அரற்றாது என் நா
புத்தரும் சமணரும் புறனுரைக்கப்
பத்தர்கட்கு அருள் செய்து பயின்றவனே
இதுவோ எமை ஆளுமாறு - ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் - ஆவடுதுறை அரனே. (10)

அலைபுனல் ஆவடுதுறை அமர்ந்த
இலைநுனை வேற்படை எம் இறையை
நலமிகு ஞானசம்பந்தன் சொன்ன
விலையுடை அருந்தமிழ் மாலை வல்லார்
வினையாயின நீங்கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாக முன்னேறுவர் நிலமிசை நிலையிலரே. (11)

திருச்சிற்றம்பலம்

Public domain. Digitization Muthulakshmi Research Acade

திருச்சோற்றுத்துறை - திருநாவுக்கரசர்

நம்பனே நான்மறைகள் ஆயினானே, நடமாட வல்லானே
ஞானக்கூத்தா
கம்பனே கச்சிமா நகருளானே, கடிமதில்கள் மூன்றினையும்
பொடியா எய்த
அம்பனே அளவிலாப் பெருமையானே, அடியார்கட்கு
ஆரமுதே ஆனேறு ஏறும்
செம்பொனே திருச்சோற்றுத் துறையுளானே, திகழொளியே
சிவனே உன் அபயம் நானே

திருவாவடுதுறை - திருநாவுக்கரசர்

குறைவிலா நிறைவே குணக் குன்றே
கூத்தனே குழைக்காது உடையானே
உறவிலேன் உனையன்றி மற்று அடியேன்
ஒருபிழை பொறுத்தால் அழிவுண்டே
சிறை வண்டார் பொழில் சூழ் திருவாரூர்ச்
செம்பொனே திருவாவடுதுறையுள்
அறவனே எனை அஞ்சல் என்று அருளாய்
ஆர் எனக்கு உறவு அமரர்கள் ஏறே.

கோதிலா அமுதே அருள் பெருகு
கோலமே இமையோர் தொழு கோவே
பாதி மாதொரு கூறுடையானே
பசுபதீ பரமா பரமேட்டீ
தீதிலா மலையே திருவருள்சேர்
சேவகா திருவாவடுதுறையுள்
ஆதியே எனை அஞ்சல் என்று அருளாய்
ஆர் எனக்கு உறவு அமரர்கள் ஏறே.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

திருக்கொண்டீச்சரம் - திருநாவுக்கரசர்

தொண்டனேன் பிறந்து வாளா தொல்வினைக்
குழியில் வீழ்ந்து
பிண்டகமே சுமந்து நைந்து போவதோர் வழியும் காணேன்
அண்டனே அண்டவாணா! அறிவனே! அஞ்சல் என்னாய்
தெண்டிரைப் பழனம் சூழ்ந்த திருக் கொண்டீச் சரத்துளானே.

கடவூர் வீரட்டம் - சுந்தரர்

வேறா உன் அடியேன் விளங்கும் குழைக்காது உடையாய்
தேறேன் உன்னையல்லால் சிவனே என் செழுஞ்சுடரே
காறார் வெண்மருப்பா கடவூர்த் திருவீரட்டத்துள்
ஆறார் செஞ்சடையா எனக்கு ஆர்துணை நீ அலதே.

திருவிடைமருதூர் - சுந்தரர்

முந்திச் செய்வினை இம்மைக் கண் நலிய, மூர்க்கனாகிக்
கழிந்தன காலம்
சிந்தித்தே மனம் வைக்கவும் மாட்டேன், சிறுச்சிறிதே
இரப்பார்கட்கு ஒன்று ஈயேன்
அந்தி வெண்பிறை சூடும் எம்மானே, ஆரூர் மேவிய
அமரர்கள் தலைவா
எந்தை நீ எனக்கு உய்வகை அருளாய், இடைமருதுறை
எந்தை பிரானே.

வித்துவக்கோடு : குலசேகராழ்வார்

தருதுயரம் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை
விரைகுழுவு மலர்ப் பொழில்சூழ் வித்துவக்கோட்டம்மானே

Public domain. Digitization Muthulakshmi Research Acade

அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள் நினைந்தே அழும் குழவி அதுவே
போன்றிருந்தேனே. (1)

கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை அல்லால் அறியாக் குலமகள்போல்
விண்தோய் மதிள்புடைசூழ் வித்துவக்கோட்டம்மா நீ
கொண்டாளாய் ஆகிலுமுன் குரைகழலே கூறுவனே. (2)

மீன்நோக்கும் நீள் வயல்சூழ் வித்துவக் கோட்டம்மா என்
பால் நோக்காயாகிலும் உன் பற்றல்லால் பற்றிலேன்
தான் நோக்காது எத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோல் நோக்கி வாழும் குடி போன்றிருந்தேனே. (3)

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர் தரினும் வித்துவக்கோட்டம்மா நீ
ஆளா உனதருளே பார்த்திருப்பன் அடியேனே. (4)

வெங்கண் திண்களிறு அடர்த்தாய் வித்துவக்கோட்டம்மானே
எங்குப் போய் உய்கேன் உன் இணையடியே
அடையல் அல்லால்
எங்கும் போய்க் கரைகாணா தெறுகடல் வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே. (5)

செந்தழலே தழலைச் செய்திடினும் செங்கமலம்
அந்தரஞ்சேர் வெங்கதிரோற்கு அல்லால் அலராவால்
வெந்துயர் வீடாவிடினும் வித்துவக் கோட்டம்மா வுன்
அந்தமில் சீர்க்கல்லால் அகங்குழைய மாட்டேனே. (6)

Public.domain. Digitization Muthulakshmi Research Academ

எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவைபோல்
மெய்த்துயர் வீட்டா விடினும் வித்துவக்கோட்டம்மா என்
சித்தமிக உன்பாலே வைப்பன் அடியேனே. (7)

தொக்கிலங்கி யாறெல்லாம் பரந்தோடித் தொடுகடலே
புக்கன்றிப் புறம் நிற்க மாட்டாத மற்றவை போல்
மிக்கிலங்கு முகில் நிறத்தாய் வித்துவக் கோட்டம்மாவுன்
புக்கிலங்கு சீரல்லால் புக்கிலன் காண் புண்ணியனே. (8)

நின்னையே தான் வேண்டி நீள் செல்வம் வேண்டாதான்
தன்னையே தான் வேண்டும் செல்வம் போல் மாயத்தால்
மின்னையே சேர் திகிரி வித்துவக் கோட்டம்மானே
நின்னையே தாண்வேண்டி நிற்பன் அடியேனே. (9)

வித்துவக் கோட்டம்மா நீ வேண்டாயே ஆலிடினும்
மற்றாரும் பற்றிலேன் என்றவனைத்தான் நயந்த
கொற்ற வேல்தானைக் குலசேகரன் சொன்ன
நற்றமிழ் பத்தும் வல்லார் நண்ணார் நரகமே. (10)

அடைக்கலப்பத்து - தேசிகப்ரஸந்தம்

பக்தி முதலாம் அவற்றில் பதியெனக்குக் கூடாமல்
எத்திசையும் உழனறோடி இளைத்து விழும் காகம் போல்
முத்திதரு நகரேழில் முக்கியமாம் கச்சிதனில்
அத்திகிரி அருளாளர்க்கு அடைக்கலம் நான் புகுந்தேனே.

16. எமபயத்திலிருந்து காக்க வேண்டி

ம்ருத்யுஞ்ஜயாய ருத்ராய நீலகண்டாய சம்பவே
அம்ருதேசாய சர்வாய மஹாதேவாய தே நம।

Public domain. Digitization Muthulakshmi Research Academ

(எமனை ஜயித்தவர், பகைவரைக் கதறச் செய்பவர், விஷத்தைக் கழுத்தில் அடக்கியவர், மங்களத்தைத் தருபவர், அமிருதத்திற்கு ஈசன் (அமிர்த கடேசன்) சிறந்த தேவன் ஆகிய சிவனுக்கு நமஸ்காரம்.)

ஸ்ரீகண்ட பார்வதீநாத தேஜிநீபுர நாயக
ஆயுர்பலம் ச்ரியம் தேஹி ஹர மே பாதகம் ஹர।

(விஷத்தைக் கழுத்தில் கொண்டவரே! பார்வதியின் நாதனே! திருவீழிமிழலையில் உறைபவனே! ஆயுளையும் வலிவையும் செல்வத்தையும் தந்தருள்வீர். என்பாவத்தைப் போக்குவீர்.)

சீர்காழி : திருஞானசம்பந்தர்

புயலார் பூமி நாமமோதிப் புகழ் மல்கக்
கயலார் கண்ணார் பண்ணார் ஒலிசெய் கலிக்காழிப்
பயில்வான் தன்னைப் பத்தியாரத் தொழுதேத்த
முயல்வார் தம்மேல் வெம்மைக் கூற்றம் முடுகாதே.

திருநாவுக்கரசர்:

அங்கத்தை மண்ணுக்காக்கி ஆர்வத்தை உனக்கே வைத்துப்
பங்கத்தைப் போக மாற்றிப் பாவித்தேன் பரமா உன்னை
சங்கொத்த மேனிச் செல்வா சாதல்நாள் நாயேன் உன்னை
எங்குற்றாய் என்ற போதா இங்குற்றேன் என் கண்டாயே.

திருவாவடுதுறை - திருநாவுக்கரசர்

பஞ்சனே மணியுமானாய் மரகதத் திரளுமானாய்
நெஞ்சுளே புகுந்து நின்று நினைதரு நிகழ்வினானே

Public domain. Digitization Muthulakshmi Research Academ

துஞ்சும் போதாக வந்து துணை எனக்கு ஆகி நின்று
அஞ்சல் என்று அருளவேண்டும் ஆவடுதுறை உளானே.

கோயில் (சிதம்பரம்) - சுந்தரர்

திருச்சிற்றம்பலம்

மடித்தாடுமடிமக்கள் அன்றியே
மனனே நீ வாழு நாளுந்
தடுத்தாட்டித் தருமனார்தமர் செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடு கரதலத்தில் தமருகமும்
எரியகலும் கரிய பாம்பும்
பிடித்தாடிப் புலியூர்ச் சிற்றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றாமன்றோ. (1)

பேராது காமத்திற் சென்றாற் போல்
அன்றியே பிரியாதுள்கிச்
சீரார்ந்த அன்பராய்ச் சென்று முன்
அடி வீழும் திருவினாரை
ஓராது தருமனார் தமர் செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
பேராளர் புலியூர்ச் சிற்றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றாமன்றோ. (2)

நரியார்தங் கள்ளத்தாற் பக்கான
பரிசொழிந்து நாளு முள்கிப்
பிரியாத அன்பராய்ச் சென்று முன்
அடி வீழும் சிந்தையாரைத்

Public domain. Digitization Muthulakshmi Research Acade

தரியாது தருமனார்தமர் செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
பெரியோர்கள் புலியூர்ச் சிற்றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றாமன்றோ. (3)

கருமையால் தருமனார் தமர் நம்மைக்
கட்டிய கட்டறுப்பிப்பானை
அருமையாந் தன்னுலகம் தருவானை
மண்ணுலகங் காவல் பூண்ட
உரிமையாற் பல்லவர்க்குத் திறை கொடா
மன்னவரை மறுக்கஞ் செய்யும்
பெருமையார் புலியூர்ச் சிற்றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றாமன்றோ. (4)

கருமானின் உரியாடைச் செஞ்சடைமேல்
வெண் மதியக் கண்ணியானை
உருமன்ன கூற்றத்தை உருண்டோட
உதைத்துகந்து உலவா இன்பம்
தருவானைத் தருமனார் தமர் செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
பெருமானார் புலியூர்ச் சிற்றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றாமன்றோ. (5)

உய்த்தாட்டித் திரியாதே உள்ளமே
ஒழிகண்டாய் ஊன் கணோட்டம்
எத்தாலும் குறைவில்லை என்பர்காண்
நெஞ்சமே நம்மை நாளும்
பைத்தாடும் அரவினன் படர் சடையன்
பரஞ்சோதி பாவந் தீர்க்கும்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

பித்தாடி புலியூர்ச் சிற்றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றாமன்றோ. (6)

முட்டாத முச்சந்தி மூவா
யிரவர்க்கு மூர்த்தி யென்னப்
பட்டானைப் பத்தராய்ப் பாவிப்பார்
பாவமும் வினையும் போக
விட்டானை மலையெடுத்த இராவணனைத்
தலைபத்து நெரியக் காலால்
தொட்டானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றாமன்றோ. (7)

கற்றானுங் குழையுமாறு அன்றியே
கருதுமா கருகிற்றார்க்கு
எற்றாலுங் குறைவில்லை என்பர்காண்
உள்ளமே நம்மை நாளுஞ்
செற்றாட்டித் தருமனார் தமர் செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
பெற்றேறிப் புலியூர்ச் சிற்றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றாமன்றோ. (8)

நாடுடைய நாதன்பால் நன்றென்றுஞ்
செய் மனமே நம்மை நாளுந்
தாடுடைய தருமனார் தமர் செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
மோடுடைய சமணர்க்கு முடையுடைய
சாக்கியர்க்கு மூடம் வைத்த
பீடுடைய புலியூர்ச் சிற்றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றாமன்றோ. (9)

Public domain. Digitization Muthulakshmi Research Acade

பாரூரும் அரவல்குல் உமை நங்கை
அவள் பங்கன் பைங்கண் ஏற்றன்
ஊரூரன் தருமனார் தமர் செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
ஆரூரன் தம்பிரான் ஆரூரன்
மீ கொங்கிலணி காஞ்சி வாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச் சிற்
றம்பலத்தே பெற்றாமன்றோ. (10)

திருச்சிற்றம்பலம்

திருமழபாடி : சுந்தரர்

நாளார் வந்து அணுகி நலியாமுன(ம்) நின்தனக்கே
ஆளா வந்தடைந்தேன் அடியேனையும் ஏன்றுகொள்நீ
மாளா நான் அருளும் மழபாடியுள் மாணிக்கமே
ஆளா நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே.

திருமாந்துறை : சுந்தரர்

நீலமாமணி நித்திலத்து ஒத்தொடு நிரைமலர் நிரந்துந்தி
ஆலியாவரு காவிரி வடகரை மாந்துறை அமர்வானை
மாலு நான்முகன் தேடியும் காண்கிலா மலரடியிணை நாளும்
கோலமேத்தி நின்று ஆடுமின் பாடுமின் கூற்றுவன் நலியானே.

கந்தர் அநுபூதி : அருணகிரிநாதர்

கார்மாமிசை காலன் வரில் கலபத்து
ஏர்மா மிசை வந்து எதிரப்படுவாய்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

தார்மார்ப! வலாரி தலாரி எனும்
சூர்மா மடியத் தொடு வேலவனே.

சாகாது எனையே சரணங்களிலே
கா கா நமனார் கலகம் செயு நாள்
வா கா முருகா மயில் வாகனனே
யோகா சிவ ஞான உபதேசிகனே.

கந்தர் அலங்காரம் : அருணகிரிநாதர்

மரண ப்ரமாதம் நமக்கு இல்லையாம் என்றும் வாய்த்த துணை
கிரணக் கலாபியும் வேலும் உண்டே கிண்கிணி முகுள
சரண ப்ரதாப! சசிதேவி மங்கல்ய தந்து ரக்ஷா
பரண! க்ருபாகர! ஞானாகர! சுர பாஸ்கரனே!

தெய்வத்திருமலைச் செங்கோட்டில் வாழும் செழுங்சுடரே
வை வைத்த வேற்படை வானவனே மறவேன் உனை நான்
ஐவர்க்கு இடம் பெறக் கால் இரண்டு ஒட்டி அதில் இரண்டு
கை வைத்த வீடு குலையும் முன்னே வந்து காத்தருளே.

படிக்கும் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்தினால்
படிக்கும் பொழுது வந்து அஞ்சல் என்பாய் பெரும்பாம்பில் நின்று
நடிக்கும் பிரான் மருகா! கொடும் சூரன் நடுங்க வெற்பை
இடிக்கும் கலாபத் தனி மயில் ஏறும் இராவுத்தனே.

அபிராமி அந்தாதி:

இழைக்கும் வினைவழியே அடுங்காலன் எனை நடுங்க
அழைக்கும் பொழுது வந்து அஞ்சல் என்பாய் அத்தர்
சித்தம் எல்லாம்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன்
ஓடிவந்தே.

பெரியாழ்வார் - திருமொழி

துப்புடையாரை அடைவதெல்லாம் சோர்விடத்துத்
துணையாவர் என்றே.
ஒப்பிலேன் ஆகிலும் நின்னடைந்தேன், ஆனைக்கு நீ
அருள் செய்தமையால்
எய்ப்பு என்னை வந்து நலியும்போது அங்கு ஏதும் நான்
உன்னை நினைக்க மாட்டேன்
அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்
அரங்கத்து அரவணைப் பள்ளியானே.

நானேதும் உன்மாயம் ஒன்றறியேன் நமன் தமர் பற்றி
நலிந்திட்டு இந்த
ஊனே புகே என்று மோதும்போது அங்கு ஏதும் நான்
உன்னை நினைக்க மாட்டேன்
வானேய் வானவர் தங்கள் ஈசா மதுரைப்பிளந்த மா
மாயனே என்
ஆனாய் நீ என்னைக் காக்க வேண்டும் அரங்கத்து
அரவணைப் பள்ளியானே.

தூப்புல் தேசிகர்:

மையுமா கடலும் மயிலுமா மழையும் மணிகளும்
குவளையும் கொண்ட
மெய்யனே அடியார் மெய்யனே விண்ணோர் ஈசனே
நீசனேன் அடைந்தேன்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

கையும் ஆழியுமாய்க் களிறு காத்தவனே காலனார்
தமர் எனைக்கவராது
ஐயனே வந்து அன்று அஞ்சல் என்று அருள் தென்அயிந்த
மாநகர் அமர்ந்தானே.

17. விஷநோய்கள் - காலரா அம்மை போன்றவை மற்றும் தீராத நோய்கள் தீர

அச்யுத அநந்த கோவிந்த நாம உச்சாரண பேஷஜாத்
நச்யந்தி ஸகல ரோகா : ஸத்யம் ஸத்யம் வதாமி அஹம் ॥

(அச்சுத, அநந்த, கோவிந்த என்ற மூன்று நாமங்களை உச்சரிப்பதாகிய மருந்தினால் எல்லா நோய்களும் (ரோகங்களும்) நாசமடையும். நான் இதை சத்தியம் என்று சொல்கின்றேன்.)

நமோ பகவதி த்வம்மே விஷ்ணுசக்தே ஹராசுபம்
உத்ஸாதய நய க்ஷிப்ரம் தூரேகுரு விஹூசிகாம் ॥

(விஷ்ணுவின் சக்தியான பகவதியே! என் நோயை / துன்பத்தை அகற்றி, நோயின் விஷ சக்தியை நாசம் செய்து வெகு தூரத்தில் எறிந்து விடு (விஷூசிகா = காலரா போன்ற பேதி)

வந்தேஹம் சீதளம் தேவீம் ஸர்வரோக பயாபஹாம்
யா மாஸாத்ய நிவர்தேத விஸ்போடக பயம் மஹத் ॥

(எல்லா நோய்களின் பயத்தை அகற்றுபவளான சீதளாதேவியை வணங்குகிறேன். அவளை அடைக்கலமாக அடைந்தவுடனேயே அம்மை பயம் நீங்கும்.)

Public domain. Digitization Muthulakshmi Research Acade

சீகாழி : திருஞானசம்பந்தர்

பெண்ணியல் உருவினர் பெருகிய புனல் விரவிய பிறைக்
கண்ணியர் கடுநடை விடையினர் கழல் தொழும் அடியவர்
நண்ணிய பிணி கெட அருள் புரிபவர் நணுகுயர் பதி
புண்ணிய மறையவர் நிறை புகழொலி மலி புறவமே.

கோயில் (சிதம்பரம்) : திருஞானசம்பந்தர்

கூர்வாள் அரக்கன்தன் வலியைக் குறைவித்துச்
சீராலே மல்கு சிற்றம்பலம் மேய
நீரார் சடையானை நித்தல் ஏத்துவார்
தீரா நோய் எல்லாம் தீர்தல் திண்ணமே.

கோணா கணையானும் குளிர் தாமரையானும்
காணார் கழலேத்தக் கனலாய் ஓங்கினான்
சேணார் வாழ் தில்லைச்சிற்றம்பலத்தே
மாணா நோய் எல்லாம் வாளா மாயுமே.

திருவெண்காடு : திருஞானசம்பந்தர்

பிள்ளைப் பிறையும் புனலும் சூடும் பெம்மான் என்(று)
உள்ளத் துள்ளித் தொழுவார் தங்கள் உறு நோய்கள்
தள்ளிப் போக அருளும் தலைவன் ஊர் போலும்
வெள்ளைச் சுரிசங்கு உலவித் திரியும் வெண்காடே.

ஸ்ரீவாஞ்சியம் : திருஞானசம்பந்தர்

கையிலங்கு மறியேந்துவர் காந்தளம் மெல் விரல்
தையல் பாகம் உடையார் அடையார் புரம் செற்றவர்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

செய்யமேனிக் கரியம் மிடற்றார் திருவாஞ்சியத்(து)
ஐயர் பாதம் அடைவார்க்கு அடையா அருநோய்களே.

கோடிகா : திருஞானசம்பந்தர்

மங்கு நோயுறும் பிணிமாயும் வண்ணம் சொல்லுவன்
செங்கண் மால் திசைமுகன் சென்றளந்துங் காண்கிலர்
வெங்கண் மால் விடையுடை வேதியன் விரும்பும் ஊர்
கொங்குலாம் வளம் பொழில் கோடிகாவு சேர்மினே.

புள்ளிருக்கு வேளூர் (வைத்தீசுவரன் கோயில்) : திருநாவுக்கரசர்

பேராயிரம் பரவிவானோர் ஏத்தும், பெம்மானைப் பிரிவிலா
அடியார்க்கு என்றும்
வாராத செல்வம் வருவிப்பானை, மந்திரம் தந்திரமும்
மருந்தும் ஆகித்
தீராதநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத், திரிபுரங்கள் தீ
எழத் திண்சிலை கைக்கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூரானைப், போற்றாதே
ஆற்ற நாள் போக்கினேனே.

திருவாவடுதுறை : திருநாவுக்கரசர்

திருவே என் செல்வமே தேனே வானோர், செழுஞ்சுடர்
நற்சோதீ மிக்க
உருவே என் உறவே என் ஊனே ஊனின், உள்ளமே
உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவே என் கற்பகமே கண்ணே கண்ணின், கருமணியே
மணியாடுபாவாய், காவாய்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

அருவாய வல்வினை நோய் அடையா வண்ணம்,
ஆவடுதண்துறை உறையும் அமரர் ஏறே.

திருப்பழனம் : திருநாவுக்கரசர்

அலையார் கடல் நஞ்சம் உண்டார்தாமே, அமரர்களுக்கு
அருள்செய்யும் ஆதி தாமே
கொலையாய கூற்றம் உதைத்தார் தாமே, கொல்வேங்கைத்
தோல் ஒன்று அசைத்தார்தாமே
சிலையால் புர(ம்) மூன்று எரித்தார் தாமே, தீ நோய்
களைந்து என்னை ஆண்டார் தாமே
பலிதேர்ந்து அழகாய பண்பர் தாமே, பழனநகர்
எம்பிரானானார் தாமே.

திருவாரூர் : சுந்தரர்

கட்டமும் பிணியும் களைவானைக், காலற் சீறிய
காலுடையானை
விட்ட வேட்கை வெந்நோய் களைவானை, விரவினால்
விடுதற்கு அரியானைப்
பட்ட வார்த்தை பட நின்ற வார்த்தை, வாராமே தவிரப்
பணிப்பானை
அட்ட மூர்த்தியை மட்டவிழ் சோலை, ஆரூரானை
மறக்கலுமாமே.

பெரியாழ்வார் - திருமொழி

நெய்க்குடத்தைப் பற்றி ஏறும் எறும்புகள் போல்
நிரந்து எங்கும்
கைக்கொண்டு நிற்கின்ற நோய்காள்! காலம் பெற
உய்யப்போமின்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

மெய்க் கொண்டு வந்து புகுந்து வேதப் பிரானார் கிடந்தார்
பைக்கொண்ட பாம்பணையோடும் பண்டன்று
பட்டினங்காப்பே.

மங்கிய வல்வினை நோய்காள் உமக்கும் ஓர்
வல்வினை கண்டீர்
இங்குப் புகேன்மின் புகேன்மின் எளிதன்று கண்டீர்
புகேன்மின்
சிங்கப்பிரான் அவன் எம்மான் சேருந் திருக்கோயில் கண்டீர்
பங்கப்படாது உய்யப் போமின் பண்டன்று பட்டினங் காப்பே.

உற்று உறு பிணி நோய்காள் உமக்கு ஒன்று சொல்லுகேன்
கேண்மின்
பெற்றங்கள் மேய்க்கும் பிரானார் பேணும் திருக்கோயில்
கண்டீர்
அற்றம் உரைக்கின்றேன் இன்மை ஆழ்வினைகாள் உமக்கு
இங்கு ஓர்
பற்றில்ல கண்டீர் நடமின் பண்டன்று பட்டினங் காப்பே.

திருவாய்மொழி : நம்மாழ்வார்

வள்ளலே மதுசூதனா என் மரகத மலையே உனை நினைந்து
எள்கல தந்த எந்தாய் உன்னை எங்ஙனம் விடுகேன்
வெள்ளமே புரை நின் புகழ் குடைந்தாடிப் பாடிக்
களித்து கந்து கந்து
உள்ள நோய்களெல்லாம் துரந்துய்ந்து போந்திருந்ததே.

உய்ந்து போந்தென் உலப்பிலாத வெந்தீ வினைகளை
நாசம் செய்து உனது

Public domain. Digitization Muthulakshmi Research Academ

அந்தமில் அடிமை அடைந்தேன்; விடுவனோ
ஐந்து பைந்தலை யாடரவணை மேவிப் பாற்கடல்
யோக நித்திரை
சிந்தை செய்த எந்தாய் உன்னைச் சிந்தை செய்து செய்தே.

18. கெட்ட கனவுகள் - கெட்ட சகுனங்கள் இவற்றின் தீய விளைவுகள் விலக. கெட்ட கனவுகள் வராதிருக்க.

துஸ் ஸ்வப்ன துச்சகுன துர்கதி தௌர்ம நஸ்ய
துர் பிக்ஷ துர்வ்யஸந துஸ் ஸஹ துர்ய சாம்ஸி
உத்பாத தாப விஷ பீதிம் அஸத் க்ரஹார்த்திம்
வ்யாதீம்ச்ச நாசயது மே ஜகதாம் அதீச:

(எனக்கு நேர்கின்ற கெட்ட கனவு, கெட்ட சகுனம், கெட்ட நிலை, மனச்சோர்வு, நாட்டில் வறட்சி, கெட்ட பழக்கம், தாங்க ஒண்ணாத கெட்ட பெயர், இடிமின்னல், போன்ற இயற்கையின் சீற்றம், கடும் வெப்பம், விஷத் தீண்டலால் பயம், நவக்கிரகங்களின் கேடு விளைவிக்கின்ற சேர்க்கையால் துன்பம், நோய்கள் இவற்றை உலகின் நாயகனான ஈசன் அகற்றட்டும்)

அச்யுதம் கேசவம் விஷ்ணும் ஹரிம் ஸத்யம் ஜனார்த்தனம்
ஹம்ஸம் நாராயணம் க்ருஷ்ணம் ஜபேத் (வந்தே)
துஸ்ஸ்வப்ன காந்தயே.

(நம்மைக் கைவிடாதவரும், துன்பம் அகற்றுபவரும், எங்கும் பரவி நிற்பவரும், பாபத்தைப் போக்குபவரும், என்றும் நிலைத்துள்ளவரும், துஷ்டர்களை வாட்டுபவரும், மிகத்தூயவரும், உலகின் மூலகாரணமான நீரில் உறை

Public domain. Digitization Muthulakshmi Research Academ

பவருமான கிருஷ்ணரை கெட்ட கனவுகள் விலக (ஜபித்து) வணங்குகிறேன்.)

ராமம் ஸ்கந்தம் ஹநூமந்தம் வைநதேயம் வ்ருகோதரம்
ஸ்மராமி சலநே நித்யம் துஸ் ஸ்வப்னம் மமநச்யது

(இராமனையும், கந்தனையும், அநுமானையும், கருடனையும், பீமனையும், படுக்கும் போது தினமும் நினைக்கிறேன். எனக்கு கெட்ட கனவு நேராதிருக்கட்டும்.)

திருநாவுக்கரசர்

(பாராயணம் செய்து பின்பு உறங்கவும்)

1. வெந்தநீறு மெய் பூச வல்லானை, வேதமால் விடை
ஏறவல்லானை,
அந்தம் ஆதி அறிதற்கு அறியானை, ஆறு அலைத்த
சடையானை அம்மானைச்
சித்தையென் தடுமாற்றறுப் பானைத் தேவதேவன் என்
சொல் முனியாதே
வந்து என் உள்ளம் புகும் வாழ்கொளிபுத்தூர்,
மாணிக்கத்தை மறந்து என் நினைக்கேனே.

திருவையாறு - திருநாவுக்கரசர்

2. கச்சியேகம்பனே என்றேன் நானே கயிலாயா காராணோ
என்றேன் நானே
நிச்சன் மணாளனே என்றேன் நானே நினைப்பார்
மனத்துளாய் என்றேன் நானே

Public domain. Digitization Muthulakshmi Research Acade

உச்சம் போதேறேறீ என்றேன் நானே உள்குவார்
உள்ளத்தாய் என்றேன் நானே
அச்சம் பிணி தீர்க்கும் ஐயாறன்னே என்றென்றே நான்
அரற்றி நைகின்றேனே.

திருச்செந்திற் கலம்பகம்:

3. வரம் கொண்ட உமைமுலைப்பால் மணங்கொண்ட
செவ்வாயும்
பரம் கொண்ட களிமயிலும் பன்னிரண்டு கண் மலரும்
சிரம் கொண்ட மறை இறைஞ்சும் சேவடியும் செந்தூரன்
கரம் கொண்ட வேலும் என்தன் கண்ணை விட்டு நீங்காவே.

திருவாய்மொழி:-

(கெட்ட கனவுகள் வாராதிருக்க)

1. கேசவன் தமர் கீழ்மேல் ஏமர் ஏழேழு பிறப்பும்
மாசதிர் இது பெற்று நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா
ஈசன் என் கருமாணிக்கம் என் செங்கோலக்கண்ணன்
விண்ணோர்
நாயகன் எம்பிரான் மெய்யின் நாராயணனாலே.

2. நாரணன் முழு வேழுலகுக்கும் நாதன்; வேதமயன்
காரணம் கிரிசை கருமம் இவை முதல்வன் எந்தை
சீரணங் கமரர் பிறர்பலரும் தொழுதேத்த நின்று
வாரணத்தை மருப்பொசித்த பிரான் எம் மாதவனே.

3. மாதவன் என்றதே கொண்டென்னை இனியிப்பால் பட்டது
யாதவங்களும் சேர் கொடேனென்றென்னுள் புகுந்திருந்து

Public domain. Digitization Muthulakshmi Research Academ

தீதவம் கெடுக்கும் அமுதம்; செந்தாமரைக் கட்குன்றம்
கோதலம் இல் என்கண்ணைக் கட்டி எம்மான் என்
கோவிந்தனே.

4. கோவிந்தன் குடக் கூத்தன் கோவலன் என்றே குனிந்து
தேவும் தன்னையும் பாடியாடத் திருத்தி என்னைக்
கொண்டு என்
பாவந் தன்னையும் பாறக்கைத் தெமரே ழெழு பிறப்பும்
மேவும் தன்னையும் ஆக்கினான்; வல்லன் எம்பிரான்
விட்டுவே.

5. விட்டிலங்கு செஞ்சோதித் தாமரை பாதம் கைகள் கண்கள்
விட்டிலங்கு கருஞ்சுடர் மலையே திருவுடம்பு
விட்டிலங்கு மதியம் சீர் சங்கு சக்கரம் பரிதி
விட்டிலங்கு முடி அம்மான் மதுசூதனன் தனக்கே.

6. மதுசூதனை அன்றி மற்றிலேன் என்(று) எத்தாலும்
கருமமின்றி
மதிசூழ்ந்த பாடல்கள் பாடியாட நின்றூழி யூழிதொறும்
எதிர்சூழல் புக்கெனைத்தோர் பிறப்பும் எனக்கே அருள் செய்ய
விதி சூழ்ந்ததால் எனக்கேல் அம்மான் திரிவிக்கிர மனையே.

7. திரிவிக்கிரமன் செந்தாமரைக் கண் எம்மான் என்
செங்கண்வாய்
உருவில் பொலிந்த வெள்ளைப் பளிங்கு நிறத்தனன்
என்றென்று உன்னிப்
பரவிப் பணிந்து பல்லூழ் ஊழி நின்பாத பாக்யமே
மருவித் தொழும் மனமே தந்தாய் வல்லை காண்
என் வாமனனே.

Public domain. Digitization Muthulakshmi Research Acade

8. வாமனன் என் மரகதவண்ணன் தாமரைக் கண்ணினை
காமனைப் பயந்தாய் என்றென்றுன் கழல் பாடியே பணிந்து
தூமனத்தனனாய்ப் பிறவித்துழதி நீங்க, என்னைத்
தீமனந்கெடுத்தாய், உனக்கென் செய்கேன் என்சிரீதரனே.

9. சிரீஇதரன் செய்யதாமரைக் கண்ணனென்றென்
றிராப்பகல் வாய்
வெரீஇ அலமந்து கண்கள் நீர்மல்கி வெவ்வுயிர்த்து உயிர்த்து
மரீஇய தீவினை மாள இன்பம் வளர வைகல் வைகல்
இரீஇய உன்னையென்னுள் வைத்தனை என் இருடிகேசனே.

10. இருடீகேசன் எம்பிரான் இலங்கையரக்கர் குலம்
முருடு தீர்த்த பிரான் எம்மான் அமரர் பெம்மான் என்றென்று
தெருடியாகில் நெஞ்சே! வணங்கு திண்ணம் அறி; அறிந்து
மருடியேலும் விடேல் கண்டாய் நம்பி பற்ப நாபனையே.

11. பற்பநாபன் உயர்வற வுயரும் பெருந்திறலோன்
எற்பரன் என்னையாக்கிக் கொண்(டு) எனக்கே
தன்னைத் தந்த
கற்பகம் என்னமுதம் கார்முகில் போலும் வேங்கடநல்
லெற்பன் விசும்போர் பிரான் எந்தை தாமோதரனே.

12. தாமோதரனைத் தனி முதல் வனை ஞாலமுண்டவனை
ஆமோதரமறிய ஒருவர்க்கு என்றே தொழுமவர்கள்
தாமோதரனுருலாகிய சிவற்மும் திசைமுகற்கும்
ஆமோதர மறிய எம்மானை என்னாழி வண்ணனையே.

13. வண்ணமாமணிச் சோதியை அமரர் தலைமகனை
கண்ணனை நெடுமாலைத் தென் குருகூர்ச் சடகோபன்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

பண்ணிய தமிழ்மாலை ஆயிரத்துள் இவை பன்னிரண்டும்
பண்ணில் பன்னிரு நாமப் பாட்டண்ணல்தாள்
அணைவிக்குமே.

(உறக்கப் போகுமுன் எம்பிரானின் பன்னிரு திருநாமங் களைக் கூறிப் பின் உறங்கின் கெட்டகனவு உண்டாகா. நல்ல உறக்கமும் வரும்.)

19. பயணத்தின் போது இடையூறுகள் வாராதிருக்கவும் பயமின்றிப் பயணம் நல்லவிதமாக அமையவும்

வனமாலீ கதீ சார்ங்கீ சங்கீ சக்ரீ ச நந்தகீ
ஸ்ரீமான் நாராயணோ விஷ்ணுர் வாஸுதேவோ அபிரக்ஷது ॥

(வனமாலை, கதை, சார்ங்கம் எனும் வில், சங்கு, சக்கரம், நாந்தகம் என்னும் வாள், இவற்றை ஏந்தியவரும், திருவுடையவரும், உலகிற்குக் காரணமான நீர்மேல் அமர்ந்திருப்பவரும், எங்கும் பரந்து நிற்பவருமான வஸுதேவன் காக்கட்டும்.)

அக்ரத : ப்ருஷ்ட்டதச் சைவ பார்ச் வதச்ச மஹா பலௌ
ஆகர்ண பூர்ண தந்வா நௌ ரக்ஷேதாம் ராம லக்ஷ்மணௌ.

(பெரு வலிவு கொண்டவர்களும், வில்லில் நாணேற்றிக் காது வரை இழுத்து ஆயத்தமாக நிற்பவர்களுமான ராமனும் லட்சுமணனும் என் முன்னும் பின்னும் இரு புறங்களிலும் நின்று பாதுகாக்கட்டும்.)

சம்போ மஹாதேவ தேவ - சிவ
சம்போ மஹாதேவ தேவேச சம்போ

Public domain. Digitization Muthulakshmi Research Acade

கந்தர்ப தர்பக்னமீசம், பாலகண்டம் மஹேசம் மஹா வ்யோம கேசம்
குந்தா பதந்தம் ஸுரேசம், கோடி சூர்ய ப்ரகாசம் பஜே மார்க்க பந்தும்
(சம்போ)

மந்தார பூ தேருதாரம், மந்தராகேந்த்ர்சாரம் மஹா கௌர்ய தூரம்
ஸிந்தூர தூர ப்ரசாரம் ஸிந்து ராஜாதி தீரம் பஜே மார்க்க பந்தும்
(சம்போ)

கோளறு திருப்பதிகம் - திருஞானசம்பந்தர் (கிரகதோஷ நிவர்த்தியாகவும், இப்பதிகத்தைப் பாராயணம் செய்யலாம்.)

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன், மிக நல்ல
வீணை தடவி,
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என், உளமே
புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி, சனி
பாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல, அடியார்
அவர்க்கு மிகவே. (1)

என்பொடு கொம்பொடு ஆமை இவைமார்பிலங்க,
எருதேறி ஏழையுடனே
பொன் பொதி மத்தமாலை புனல்சூடிவந்துஎன், உளமே
புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றோடு ஏழு பதினெட்டொடு ஆறும்,
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவை நல்லநல்ல, அடியார்
அவர்க்கு மிகவே. (2)

Public domain. Digitization Muthulakshmi Research Academ

உருவளர் பவளமேனி ஒளி நீறணிந்து, உமையோடும்
வெள்ளைவிடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந்துஎன், உளமே
புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி, திசை
தெய்வமான பலவும்
அருநெதி நல்லநல்ல அவை நல்லநல்ல, அடியார்
அவர்க்கு மிகவே. (3)

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து, மறை ஓதும்
எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்து என்,
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர், கொடு
நோய்கள் ஆனபலவும்
அதிகுணம் நல்லநல்ல அவை நல்லநல்ல, அடியார்
அவர்க்கு மிகவே. (4)

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்,
விடைஏறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்துஎன்,
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உரும் இடியும் மின்னும்,
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவை நல்லநல்ல, அடியார்
அவர்க்கு மிகவே. (5)

Public domain. Digitization Muthulakshmi Research Acade

வாள்வரி அதளதாடை வரிகோவணத்தார், மடவாள்
தனோடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்துஎன், உளமே
புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்,
கொடுநாகமோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவை நல்லநல்ல, அடியார்
அவர்க்கு மிகவே. (6)

செப்பிள முலை நன்மங்கை ஒருபாகமாக, விடையேறு
செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்துஎன், உளமே
புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்,
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவை நல்லநல்ல, அடியார்
அவர்க்கு மிகவே. (7)

வேள்பட விழிசெய்து அன்று விடைமேல் இருந்து,
மடவாள்தனோடு உடனாய்
வாள்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்துஎன், உளமே
புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ் இலங்கை அரையன் தனோடும், இடரான
வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவை நல்லநல்ல, அடியார்
அவர்க்கு மிகவே. (8)

Public domain. Digitization Muthulakshmi Research Academ

பலபல வேடமாகும் பரன் நாரிபாகன், பசு ஏறும்
எங்கள் பரமன்
சலமகளோடு எருக்கும் முடிமேல் அணிந்துஎன், உளமே
புகுந்த அதனால்
மலர்மிசையோனும் மாலும் மறையோடு தேவர், வருகாலம்
ஆன பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்லநல்ல, அடியார்
அவர்க்கு மிகவே. (9)

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு, குணமாய
வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்துஎன், உளமே
புகுந்த அதனால்
புத்தரோடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்,
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவை நல்லநல்ல, அடியார்
அவர்க்கு மிகவே. (10)

தேனமர் பொழில் கொளாலை விளை செந்நெல்துன்னி,
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமாபுரத்து, மறைஞான
ஞான முனிவன்
தானுறுகோளும் நாளும் அடியாரை வந்து, நலியாத
வண்ணம் உரைசெய்
ஆனசொன் மாலை ஓதும் அடியார்கள் வானில், அரசாள்வர்
ஆணை நமதே. (11)

திருச்சிற்றம்பலம்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

திருமழபாடி - திருநாவுக்கரசர்

சுழித்துணையாம் பிறவி வழித்துக்க நீக்குஞ்
சுருள்சடை எம்பெருமானே தூய தெண்ணீர்
இழிப்பரிய பசு பாசப் பிறப்பை நீக்கும்
என்துணையே என்னுடைய பெம்மான் தம்மான்
பழிப்பரிய திருமாலும் அயனும் காணாப்
பரிதியே சுருதிமுடிக் கணியாய் வாய்த்த
வழித்துணையா(ம்) மழபாடி வயிரத்தூணே
என்றென்றே நான் அரற்றி நைகின்றேனே.

திருநாவுக்கரசர்

திருச்சிற்றம்பலம்

சுண்ணவெண் சந்தனச் சாந்தும் சுடர்த்திங்கள் சூளாமணியும்
வண்ண உரிவை உடையும் வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண்முரண் ஏறும் அகலம் வளாய அரவும்
திண்ணல் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்சவருவதும்
இல்லை. (1)

பூண்டதொர் கேழல் எயிறும் பொன்திகழ் ஆமை புரள
நீண்ட திண்தோள் வலம் சூழ்ந்து நிலாக்கதிர் போலும்
வெண்ணூலும்
காண்டகு புள்ளின் சிறகுங் கலந்த கட்டங்கக் கொடியும்
ஈண்டு கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும்
இல்லை. (2)

Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஒத்த வடத்திள நாகம் உருத்திரபட்டம் இரண்டும்
முத்து வடக் கண்டிகையும் முளைத்தெழு மூவிலை வேலும்
சித்தவடமும் அதிகைச் சேணுயர் வீரட்டஞ்சூழ்ந்து
தத்துங்கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச
வருவதுமில்லை. (3)

மடமான் மறி பொற் கலையும் மழுப்பாம்பு ஒருகையில் வீணை
குடமால் வரைய திண்தோளும் குனிசிலைக் கூத்தின் பயில்வும்
இடமால் தழுவிய பாகம் இருநிலன் ஏற்றசுவடும்
தடமார் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச
வருவதுமில்லை. (4)

பலபல காமத்தராகிப் பதைத்தெழுவார் மனத்துள்ளே
கலமலக் கிட்டுத் திரியும் கணபதி என்னும் களிறும்
வலம் ஏந்திரண்டு சுடரும் வான கயிலாய மலையும்
நலமார் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச
வருவதுமில்லை. (5)

கரந்தன கொள்ளி விளக்குங் கறங்கு துடியின் முழக்கும்
பரந்த பதினெண் கணமும் பயின்றறியாதன பாட்டும்
அரங்கிடை நூலறிவாளர் அறியப்படாத தொர் கூத்தும்
நிரந்த கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச
வருவதுமில்லை. (6)

கொலைவரி வேங்கையதளும் குலவோடு இலங்கு பெற்றோடும்
விலைபெறு சங்கக்குழையும் விலையில் கபாலக்கலனும்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

மலைமகள் கைக்கொண்ட மார்பும் மணியார்ந்திலங்கு மிடறும்
உலவு கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச
வருவதுமில்லை. (7)

ஆடல் புரிந்த நிலையும் அரையில் அசைத்த அரவும்
பாடல் பயின்ற பல்பூதம் பல்லாயிரம் கொள்கருவி
நாடற்கரியதொர் கூத்தும் நன்குயர் வீரட்டஞ் சூழ்ந்து
ஓடுங் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச
வருவதுமில்லை. (8)

சூழும் அரவத்துகிலும் துகில்கிழி கோவணக்கீளும்
யாழின் மொழியவள் அஞ்ச அஞ்சாதரு வரை போன்ற
வேழமுரித்த நிலையும் விரிபொழில் வீரட்டஞ் சூழ்ந்து
தாழும் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச
வருவதுமில்லை. (9)

நரம்பெழு கைகள் பிடித்து நங்கை நடுங்க மலையை
உரங்களெல்லாம் கொண்டு எடுத்தான் ஒன்பதும் ஒன்றும் அலற
வரங்கள் கொடுத்தருள் செய்வான் வளர்பொழில் வீரட்டஞ் சூழ்ந்து
நிரம்பு கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச
வருவதுமில்லை. (10)

திருவாவடுதுறை - சுந்தரர்

வானநாடனே வழித்துணை மருந்தே
மாசிலாமணியே மறைப்பொருளே

Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஏனமா எயிறு ஆமையும் எலும்பும்
ஈடு தாங்கிய மார்புடையானே
தேன்நெய் மால்தயிர் ஆட்டுகந்தானே
தேவனே திருவாவடுதுறையுள்
ஆனையே எனை அஞ்சல் என்று அருளாய்
ஆர்எனக்கு உறவு அமரர்கள் ஏறே.

கந்தர் அலங்காரம் : அருணகிரிநாதர்

விழிக்குத்துணை திருமென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத்துணை முருகா எனும் நாமங்கள், முன்பு செய்த
பழிக்குத்துணை அவன் பன்னிரு தோள்களும், பயந்த தனி
வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே.

கந்தர் கலி வெண்பா:

(இதன் நிறைவுப் பகுதியான பின்வரும் பகுதியைப் பயணத்தின் போதும் பாராயணம் செய்யலாம். ஒவ்வொரு நாளும் உறங்கும் முன்பும் பாராயணம் செய்துவிட்டுப் பின்னர் உறங்கலாம்.)

பல்கோடி சன்மப் பகையும் அவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும் – பல்கோடி
பாதகமும் செய்வினையும் பாம்பும் பசாசும் அடல்
பூதமும் தீநீரும் பொரு படையும் – தீது அகலா
வெவ்விடமும் துட்ட மிருகம் முதலாம் எவையும்
எவ்விடம் வந்து எம்மை எதிர்ந்தாலும் – அவ்விடத்தில்
பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும்
அச்சம் அகற்றும் அயில்வேலும் – கச்சைத்
திருவரையும் சீறடியும் செங்கையும் ஈராறு

Public domain. Digitization Muthulakshmi Research Acade

அருள் விழியும் மாமுகங்கள் ஆறும் - விரிகிரணம்
சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும்
எந்தத் திசையும் எதிர்தோன்ற - வந்து இடுக்கண்
எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமும் தந்து புகுந்து
உல்லாசமாக உளத்து இருந்து - பல்விதமாம்
ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவதானமும் சீர்ப்
பேசும் இயல் பல்காப்பியத் தொகையும் - ஓசை
எழுத்து முதலாம் ஐந்து இலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப் புலமை பாலித்து - ஒழுக்கமுடன்
இம்மைப் பிறப்பில் இருவாதனை அகற்றி
மும்மைப் பெரு மலங்கள் மோசித்துத் - தம்மைவிடுத்து
ஆயும் பழைய அடியாருடன் கூட்டித்
தோயும் பரபோகம் துய்ப்பித்துச் - சேய
கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு
அடியேற்கு முன்நின்று அருள்.

நம்மாழ்வார் - ஐந்தாம்பத்து ஐந்தாம் திருமொழி

1. எங்ஙனேயோ அன்னைமீர்காள் என்னை முனிவது நீர்
நங்கள் கோலத் திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டபின்
சங்கினோடும் நேமியோடும் தாமரைக் கண்களோடும்
செங்கனிவாய் ஒன்றினோடும் செல்கின்றது என் நெஞ்சமே.

2. என் நெஞ்சினில் நோக்கிக் காணீர் என்னை முனியாதே
தென்னன் சோலைத் திருக்குறுங்குடி நம்பியை நான் கண்ட பின்
மின்னும் நூலும் குண்டலும் மார்பில் திருநீறும்
மன்னு பூணும் நான்கு தோளும் வந்து எங்கும் நின்றிடுமே.

3. நின்றிடும் திசைக்கும் நையும் என்றன்னையரும் முனிதிர்
குன்ற மாடத் திருக்குறுங்குடி நம்பியை நான் கண்ட பின்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

வென்றி வில்லும் தண்டும் வாளும் சக்கரமும் சங்கமும்
நின்று தோன்றிக் கண்ணுள் நீங்கா நெஞ்சுள்ளும் நீங்காவே.

4. நீங்க நில்லாக் கண்ண நீர்கள் என்றன் னையரும் முனிதிர்
தேன் கொள் சோலைத் திருக்குறுங்குடி நம்பியை நான் கண்ட பின்
பூந்தண் மாலைத் தண்டுழாயும் பொன்முடியும் வடிவும்
பாங்கு தோன்றும் பட்டும் நாணும் பாவியேன் பக்கத்திலே.

5. பக்கம் நோக்கி நிற்கும் நையுமென்றன்னையரும் முனிதிர்
தக்க கீர்த்தித் திருக்குறுங்குடி நம்பியை நான் கண்ட பின்
தொக்க சோதித் தொண்டை வாயும் நீண்ட புருவங்களும்
தக்க தாமரைக் கண்ணும் பாவியேன் ஆவியின் மேலனவே.

6. மேலும் வன்பழி நங்குடிக்கு இவள் என்றன்னை காணக் கொடாள்
சோலை சூழ் தண் திருக்குறுங்குடி நம்பியை நான் கண்ட பின்
கோலநீள் கொடி மூக்கும் தாமரைக் கண்ணும் கனிவாயும்
நீலமேனியும் நான்கு தோளும் என் நெஞ்சம் நிறைந்தனவே.

7. நிறைந்த வன்பழி நம்குடிக்கு இவள் என்றன்னை காணக் கொடாள்
சிறந்த கீர்த்தித் திருக்குறுங்குடி நம்பியை நான் கண்ட பின்
நிறைந்த சோதி வெள்ளஞ் சூழ்ந்த நீண்ட பொன் மேனியோடும்
நிறைந்தென்னுள்ளே நின்றொழிந்தான் நேமியங்கையுளதே.

8. கையுள் நன்முகன் வைக்கும் நையுமென்றன்னையரும் முனிதிர்
மைகொள் மாடத்திருக்குறுங்குடி நம்பியை நான் கண்ட பின்
செய்ய தாமரைக் கண்ணும் அல்குலும் சிற்றிடையும் வடிவும்
மொய்ய நீள்குழல் தாழ்ந்த தோள்களும் பாவியேன் முன்னிற்குமே.

9. முன்னின்றாயென்று தோழியர்களும் அன்னையரும் முனிதிர்
மன்னுமாடக் திருக்குறுங்குடி நம்பியை நான் கண்ட பின்

Public domain. Digitization Muthulakshmi Research Acade

சென்னி நீண்முடியாதியாய உலப்பிலணி கலத்தன்
கன்னல் பாலமுதாகி வந்தென் நெஞ்சம் கழியானே.

10. கழியமிக்க தோர் காதலள் இவளென்றன்னை காணக் கொடாள்
வழுவில் கீர்த்தித் திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டபின்
குழுமித் தேவர் குழாங்கள் தொழச் சோதி வெள்ளத்தினுள்ளே
எழுவதோருரு என் நெஞ்சுள் எழும் ஆர்க்கும் அறிவரிதே.

ஒன்பதாம்பத்து இரண்டாம் திருமொழி

காய்சினப் பறவையூர்ந்து பொன்மலையின்
மீமிசைக் கார்முகில் போல
மாசினமாலி மாலிமான் என்றங்
கவர்படக் கனன்று முன்னின்ற
காய்சினவேந்தே கதிர்முடியானே
கலிவயல் திருப்புளிங்குடியாய்
காய்சின ஆழி சங்கு வாள் வில் தண்(டு)
ஏந்தி எம் இடர் கடிவானே.

ஸ்ரீமத் பாகவதம் - நாராயணகவசம் : செவ்வை சூடுவார்

1. பன்னிய வரைமுதல் பல அரண்களில்
துன்னுவெஞ் சமத்திடைத் தோன்றலுற்றுமுன்
மன்னு வெங்கனகனை மாய்த்த மைந்துடை
நன்நலம் சேர் நரமடங் கல் காக்கவே!

(கனகன் - இரணியன்; நடமடங்கல் - நரசிம்மம்)

2. புகழ்பெரு மீன்உரு எடுத்த புங்கவன்
அகமகிழ் தந்துநீர் அடைந்து காக்க; இச்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

சகமிசை வாமனன் சார்ந்து காக்க; ஏர்
மிகுநிலம் அளந்தமால் விசும்பில் காக்கவே.

3. கழைதிகழ் கார்வரைக் கவினும் சாரலின்
மழைதவழ் குவட்டின்மீ மருவிபோதெலாம்
பழமறை மொழிதரு பரசுராமன்உள்
விழைவொடு குறைவற விரைந்து காக்கவே.

4. வெற்றியாண் கேழலாய் விளங்கு மேலவன்
பெற்றிடு வழிதொறும் பெரிது காக்கவே
நற்றவ நான் சொல் நாராயணன் நனி
உற்றவர் பற்றெலாம் ஒழித்துக் காக்கவே.

5. தசரதன் மதலையாம் இராமன் தன்துணை
இசைதரும் இவையோடு இனிது இயைந்து இருந்
திசைதொறும் திசைதொறும் செப்புங் காலெலாம்
விசயம் வந்துஉறநனி விரைந்து காக்கவே.

20. பொதுவான வாழ்வுக்கு ஓதவேண்டிய நமசிவாயப் பதிகங்கள்

திருஞானசம்பந்தர் - நமசிவாயத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

1. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.

Public domain. Digitization Muthulakshmi Research Acade

2. நம்புவார் அவர் நாவின் நவிற்றினால்
வம்பு நாள்மலர் வார்மது ஒப்பது
செம்பொனார் திலகம் உலகுக்கெல்லாம்
நம்பன் நாமம் நமச்சிவாயவே.

3. நெக்குள் ஆர்வம் மிகப்பெருகி நினைந்து
அக்கு மாலைகொடு அங்கையில் எண்ணுவார்
தக்க வானவராத் தகுவிப்பது
நக்கன் நாமம் நமச்சிவாயவே.

4. இயமன்தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம்வந்து ஓத வல்லார்தமை நண்ணினால்
நியமம்தான் நினைவார்க்கு இனியான், நெற்றி
நயனன் நாமம் நமச்சிவாயவே.

5. கொல்வாரேனும் குணம் பல நன்மைகள்
இல்லாரேனும் இயம்புவர் ஆயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சிவாயவே.

6. மந்தரம் அன பாவங்கள் மேவிய
பந்தனை அவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சிவாயவே.

7. நரகம் ஏழ்புக நாடினர் ஆயினும்
உரைசெய்வாயின ராயின் உருத்திரர்
விரவியே புகுவித்திடும் என்பரால்
வரதன் நாமம் நமச்சிவாயவே.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

8. இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கொள் நாமம் நமச்சிவாயவே.

9. போதன் போதுகண்ணனும் அண்ணல்தன்
பாதம் தான்முடி நேடிய பண்பராய்
யாதும் காண்பரிதாகி அலந்தவர்
ஓதும் நாமம் நமச்சிவாயவே.

10. கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவிலர் என்பரால்
விஞ்சை அண்டவர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண்கண்டன் நமச்சிவாயவே.

11. நந்தி நாமம் நமச்சிவாய எனும்
சந்தையால் தமிழ்ஞானசம்பந்தன் சொல்
சிந்தையால் மகிழ்ந்து ஏத்தவல்லார் எலாம்
பந்த பாசம் அறுக்க வல்லார்களே.

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர் - நமச்சிவாயத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

1. சொற்றுணை வேதியன் சோதிவானவன்
சொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே.

Public domain. Digitization Muthulakshmi Research Acade

2. பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக்கு அருங்கலம் அரன் அஞ்சு ஆடுதல்
கோவினுக்கு அருங்கலம் கோட்டமில்லது
நாவினுக்கு அருங்கலம் நமச்சிவாயவே.

3. விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகில் அவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணி நின்று அறுப்பது நமச்சிவாயவே.

4. இடுக்கண்பட்டு இருக்கினும் இரந்து யாரையும்
விடுக்கிற் பிரான் என்று வினவுவோம் அல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினும் அருளின் நாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே.

5. வெந்தநீறு அருங்கலம் விரதிகட்கு எலாம்
அந்தணர்க்கு அருங்கலம் அருமறை ஆறங்கம்
திங்களுக்கு அருங்கலம் திகழு நீள்முடி
நங்களுக்கு அருங்கலம் நமச்சிவாயவே.

6. சலமிலன் சங்கரன் சரர்ந்தவர்க்கு அலால்
நலமிலன் நாடொறும் நல்குவான் நலன்
குலம் இலராகிலும் குலத்துக்கு ஏற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே.

7. வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச் சென்று உருவம் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சிவாயவே.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

8. இல்லக விளக்கது இருள்கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே.

9. முன்னெறியாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறியே சரணாதல் திண்ணமே
அந்நெறியே சென்று அங்கு அடைந்தவர்கட்கு எலாம்
நன்னெறியாவது நமச்சிவாயவே.

10. மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தான்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கை தொழ
நாப்பிணை தழுவிய நமச்சிவாயப் பத்து
ஏத்தவல்லார் தமக்கு இடுக்கண் இல்லையே.

திருச்சிற்றம்பலம்

சுந்தரர் - நமசிவாயப் பதிகம்

திருச்சிற்றம்பலம்

1. மற்றுபற்று எனக்கு இன்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மை வந்து எய்தினேன்
கற்றவர் தொழுது ஏத்தும் சீர்க்கறையூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே.

2. இட்டதும் அடி ஏத்துவார் இகழ்ந்திட்ட நாள் மறந்திட்ட நாள்
கெட்ட நாள் இவை என்றலால் கருதேன் கிளர் புனல் காவிரி
வட்டவாசிகை கொண்டு அடிதொழுது ஏத்து பாண்டிக் கொடுமுடி
நட்டவா உனை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே.

Public domain. Digitization Muthulakshmi Research Acade

3. ஓவு நாள் உணர்வு அழியுநாள் உயிர் போகு நாள் உயர்பாடை மேல்
காவு நாள் இவை என்றலாற் கருதேன் கிளர் புனற் காவிரிப்
பாவு தண் புனல் வந்திழி பரஞ்சோதி பாண்டிக் கொடுமுடி
நாவலா உனை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே.

4. எல்லையில் புகழ் எம்பிரான் எந்தை தம்பிரான் என் பொன்மாமணி
கல்லையுந்தி வளம்பொழிந்தழி காவிரி அதன் வாய்க்கரை
நல்லவர் தொழுது ஏத்தும் சீர்க்கறையூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்லவா உனை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே.

5. அஞ்சினார்க்கு அரண் ஆதி என்று அடியேனு(ம்) நான்மிக
அஞ்சினேன்
அஞ்சல் என்று அடித் தொண்டனேற்கு அருள் நல்கினாய்க்
கழிகின்ற தென்
பஞ்சின் மெல்லடிப் பாவையார் குடைந்தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்சணி கண்ட நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே.

6. ஏடுவான் இளந்திங்கள் சூடினை என்பின் கொல் புலித்தோலின்மேல்
ஆடு பாம்பது அரைக்கசைத்த அழகனே அந்தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்திழி பரஞ்சோதி பாண்டிக் கொடுமுடி
சேடனே உனை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே.

7. விரும்பி நின் மலர்ப் பாதமே நினைந்தேன் வினைகளும் விண்டனன்
நெருங்கி வண்பொழில் சூழ்ந்து எழில்பெற நின்ற காவிரிக்
கோட்டிடைக்
குரும்பை மென்முலைக் கோதைமார் குடைந்தாடு பாண்டிக்
கொடுமுடி
விரும்பனே உனை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

8. செம்பொனேர் சடையாய் திரிபுரந்தீயெழச் சிலை கோலினாய்
வம்புலாங் குழலாளைப் பாகம் அமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின்மேற் குயில்கூறு மாமயிலார்டு பாண்டிக் கொடுமுடி
நம்பனே உனை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே.

9. சாரணன் தந்தை எம்பிரான் எந்தை தம்பிரான் பொன் மாமணி ஒன்று
பேர் எணாயிர கோடி தேவர் பிதற்றி நின்று பிரிகிலார்
நாரணன் பிரமன் தொழும் கறையூரிற் பாண்டிக் கொடுமுடிக்
காரணா உனை நான் மற்க்கினும் சொல்லு நா நமச்சிவாயவே.

10. கோணிய பிறை சூடியைக் கறையூரிற் பாண்டிக் கொடுமுடி
பேணிய பெருமானைப் பிஞ்ஞகப் பித்தனைப் பிறப்பில்லியைப்
பாணுலா வரி வண்டறை கொன்றைத் தாரனைப் படப்பாம்பரை
நாணனைத் தொண்டன் ஊரன் சொல் இவை சொல்லுவார்க்கு
இல்லை துன்பமே.

திருச்சிற்றம்பலம்

Public domain. Digitization Muthulakshmi Research Acade

Public domain. Digitization Muthulakshmi Research Academ

Public domain. Digitization Muthulakshmi Research Acade